# படைப்பின்

# நோக்கம்

**(The Purpose Of Creation - Tamil)**

## மூலம்


## டாக்டர். அபு அமீனா பிலால் பிலிப்ஸ்

# பொருளடக்கம்


1. முன்னுரை....3
2. ஏன் இறைவன் படைத்தான்....11
3. ஏன் இறைவன் மனித இனத்தைப் படைத்தான்....22
4. ஏன் இறைவன் மனித இனத்தைப் பூமியில் படைத்தான்....39
5. ஏன் இறைவன் உலகத்தைப் படைத்தான்....54
6. முடிவுரை....59
7. ஹதீஸ்களின் குறியீடு....61
8. குர்ஆன் வசனங்களின் குறியீடு....64

## முன்னுரை

எதற்காக படைக்கப்பட்டோம் என்று எண்ணிப்பார்த்து வியப்படையும் தருணம் ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் நிச்சயமாக இருக்கும். நான் ஏன் இருக்கிறேன்? இவ்வுலகில் என் இருப்பின் காரணம் அல்லது நோக்கம் என்னவாக இருக்கும்? இது போன்ற கேள்விகளை வாழ்வின் சில பொழுதுகளில் மனிதன் தன்னைத்தானே கேட்டுக்கொள்கிறான்.

பல்வேறு பட்ட விதங்களிலும் புதிரான,வியப்பான வகைகளிலும் படைக்கப்பட்டிருக்கும் மனிதனும் அவன் இருக்கின்ற இந்த உலகமும் “மகத்துவமிக்க மேலான இறைவன்” இருக்கிறான்; அவனே யாவற்றையும் படைத்தான் என்று நமக்கு தெளிவாக காட்டுகின்றன. வடிவம் என்று ஒன்று இருந்தால் நிச்சயமாக வடிவமைத்தவரும் இருக்கத்தானே செய்வார். கடற்கரை மணலில் மனித கால் தடம் இருந்தால் அதைக் காணும் மனிதன் இங்கு வேறொரு மனிதன் நடந்து சென்றிருக்கிறான் என்றே நினைப்பான். மாறாக அந்த மனிதனுடைய கால்தடத்தை அச்சு அசலாக கடலலைகள் எதேச்சையாக உருவாக்கி இருக்கலாம் என்று நினைக்கமாட்டான். அல்லது எந்த காரணமும் இல்லாமல் தானாகவே வந்திருக்கும் என்ற முடிவுக்கும் வரமாட்டான். ஏனெனில் காரணமில்லாத காரியம் இல்லை என்பது மனித அறிவின் நிலைப்பாடு. எனவே படைப்புகளை குறிப்பிட்ட காரணத்தோடும் நோக்கத்தோடும் தான் இறைவன் படைத்திருப்பான் என்றே மனிதன் முடிவு செய்கிறான். தான் படைக்கப்பட்டதன் காரணம் என்ன என்று மனிதன் அறிந்துகொண்டால் தான் இந்த வாழ்வின் பொருளை உணர்ந்து பயனுள்ளதாக வாழமுடியும்.

ஆனாலும் எல்லா காலத்திலும் இறைவனின் இருப்பை மறுக்கின்ற சில மக்களும் இருந்து வருகிறார்கள். அவர்களைப் பொருத்தவரை மூலக்கூறுகளால் ஆன பருப்பொருள் மட்டுமே நிரந்தரமானவை. மனிதனும் இன்னபிற படைப்புகளும் உருவானது தற்செயலாக ஏற்பட்ட பொருட்கூறுகளின் சேர்க்கை என்ற நிகழ்வால் மட்டுமே என்று அவர்கள் கருதுகிறார்கள். இப்படி எண்ணுபவர்கள் எங்கிருந்து படைத்தவனின் இருப்பை, உள்ளமையை நம்பப் போகிறார்கள்? இறைவனும் இல்லை... மனிதனை இறைவன் படைக்கவுமில்லை என்ற நிலைப்பாட்டில் இருப்பவர்கள் மனிதனை படைத்ததன் காரணம் என்ன என்ற கேள்விக்கு விடை தேடுவார்களா? இந்த எண்ணத்தினாலேயே “இறைவன் ஏன் மனிதனைப் படைத்தான்?” என்ற கேள்வியும் இல்லை. அவர்களிடம் விடையும் இல்லை. இவ்வுலகில் மனித வாழ்வுக்கும் இருப்புக்கும் எந்த காரணமும் இல்லை என்பது அவர்களுடைய நிலைப்பாடு. ஆனால் பெரும்பாலான மனிதர்கள் எல்லா காலத்திலும் மகத்துவமிக்க மேலான இறைவன் இருக்கிறான்; உயர்ந்த நோக்கத்துடன் உலகத்தைப் படைத்திருக்கிறான் என்றே நம்பினார்கள்; இப்போதும் நம்புகிறார்கள். இவர்களுக்கு அப்போதும் இப்போதும் எப்போதும் படைத்தவனை அறிவதும் படைப்பின் நோக்கத்தை அறிவதும் இன்றியமையாததாக இருக்கிறது.

## கேள்விக்கான விடை

மனிதனை இறைவன் ஏன் படைத்தான் என்ற கேள்விக்கு விடை தேடுவதற்கு முன் எந்த கோணத்திலிருந்து கேள்வி கேட்கப்படுகிறது என்று தீர்மானிக்க வேண்டும். இறைவனின் பார்வை கோணத்திலிருந்து "இறைவன் மனிதனைப் படைக்கத் தூண்டிய காரணி என்ன" என்ற பொருளிலும் மனிதனுடைய பார்வை கோணத்திலிருந்து "எந்த நோக்கத்திற்காக இறைவன் மனிதனைப் படைத்தான்" என்ற பொருளிலும் பார்க்கலாம். இரண்டு கேள்விகளுமே முன்னிறுத்தும் புதிரான சிக்கலான கேள்விகள் என்னவென்றால் "நான் ஏன் பிறந்தேன்? நான் ஏன் இருக்கிறேன்? என்னுடைய இருப்பின் நோக்கம் என்ன?" பின்வரும் பகுதிகளில் இரு பார்வையிலான கேள்விகளையும் குர்ஆனின் ஒளியில் தெளிவாக ஆராய இருக்கிறோம். படைப்பின் நோக்கம் எனும் இந்த தலைப்பு மனித யூகித்தலைக் கொண்டு விளக்க இயலாத ஒன்று. ஏனென்றால் மனிதனுடைய வரையறுக்கப்பட்ட அறிவைக் கொண்டு வரையறையற்ற பேருண்மையை நிரூபிக்க முடியாது.

தன்னுடைய மூளை, மனம் அதன் செயல்பாடுகள் போன்றவற்றையே முழுவதும் புரிந்து கொள்ள முடியாத மனிதன் எப்படி தன் அறிவைக் கொண்டு தன் இருப்பின் உண்மைநிலையை புரிந்துகொள்ள முடியும்? பல சிந்தனையாளர்கள் தொன்றுதொட்டு இந்த கேள்விகளுக்கு யூகங்களின் அடிப்படையில் விடைகளை அறிய முயற்சி செய்து வருகிறார்கள். ஆனாலும் அவையாவும் நிரூபிக்க முடியாத வெற்று அனுமானங்களாகவே இருக்கின்றன. மானிட இருப்பு குறித்த கேள்விகள் பற்பல தத்துவ வாதிகளை முழு உலகமே ஒரு கற்பனை என்றும் அதில் மனிதர்களின் இருப்பு உண்மையில்லை என்றெல்லாம் எண்ணும் அளவுக்கு இட்டுச்சென்றிருக்கின்றன.

உதாரணமாக, கிரேக்க தத்துவ அறிஞர் பிளேட்டோ (428-348 கிமு) மனிதன் தன் புலன்களால் உணர்கின்ற அன்றாட வாழ்வில் நிகழும் மாற்றங்கள் உண்மையே அல்ல; மாறாக அவை நிழல் உலகின் தோற்றங்களே[1] என்று வாதிடுகிறார். மேலும் பலர் முன்னர் கூறியது போல மனிதன் படைக்கப்பட்டதற்கு எந்த காரணமும் இல்லை என்றே கருதுகின்றனர்.

அவர்களைப் பொருத்தவரை உலகத்தில் மனிதனின் இருப்பே நல்வாய்ப்பாக நடந்த விபத்து. உயிரற்ற பொருட்கூறுகள் தற்செயலாக இணைந்து உருவான உயிருக்கு உலகில் அதன் வாழ்வுக்கான எந்த நோக்கமும் இருக்க முடியாது என்பதே அவர்கள் கூற்று. குரங்கிலிருந்து பரிணாம வளர்ச்சி பெற்று மனிதன் தோன்றினான் என நம்பும் அவர்கள் குரங்குகள் போலவே மனிதனும்

[1] தி ரிபப்ளிக் எனும் அவர் எழுதிய புத்தகத்தில் இந்த கோணத்தை குகையில் விலங்கிடப்பட்ட மனிதர்கள் வெளியே நிகழும் மாற்றங்களை குகையின் சுவற்றில் நிழலாக கண்டார்கள் என்ற அவரது பிரபலமான உருவகத்தின் மூலம் முன்வைக்கிறார். (தி நியூ என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா தொகுதி 25 பக்கம் 552)

தன்னுடைய இருப்பைக் குறித்தோ படைப்பின் நோக்கம் குறித்தோ ஆராய தேவையில்லை என நினைக்கின்றனர் போலும்!

ஆனால் பெரும்பாலான மனிதர்கள் படைக்கப்பட்ட காரணத்தை சிந்தித்து அறியவே முற்படுகின்றனர். ஆனால் அதை அறிவது அவ்வளவு எளிதல்ல. படைப்பின் நோக்கம் பற்றி அறியாமல் மற்ற உயிரினங்களை விட மனிதன் எந்தளவுக்கு சிறந்த படைப்பு என்பதை வேறுபடுத்தி அறிய முடியாது. உயிரினங்களின் அடிப்படை தேவைகளான உண்ணுதல்,பருகுதல், இனப்பெருக்கம் ஆகியவையே மனிதன் படைக்கப்பட்டதற்கான நோக்கமாக நினைத்து அந்த வட்டத்திலேயே மனிதன் கவனம் செலுத்த முற்படுகிறான். எப்போது மனிதன் இந்த உடல் சார்ந்த தேவைகளை நிறைவேற்றி திருப்தி அடைவதையே தன் முதன்மையான இலக்காக கொள்கிறானோ, அப்போது அவன் விலங்குகளை விட கீழான நிலைக்கு சென்று விடுகிறான். படைக்கப்பட்ட காரணத்தை அறியாத மனிதன், இறைவன் அருளிய அறிவை தொடர்ந்து தவறான வழியிலே பயன்படுத்த விழைகிறான். இப்படி சீரழிந்த மனித மனம் தனது திறனை போதைப் பொருள் தயாரித்தல், வெடிகுண்டுகள் உருவாக்குதல் போன்ற நாசவேலைகளில் ஈடுபடுவதோடு விபச்சாரம், ஆபாச படங்கள், ஓரினச்சேர்க்கை, குறி சொல்லுதல், தற்கொலை போன்றவற்றில் செலவழிக்கிறது. தன்னுடைய வாழ்வு மற்றும் இருப்பு பற்றிய அறிவும் தெளிவும் இல்லாத மனித சமூகம் வாழ்வின் இலட்சியத்தை இழந்து இவ்வுலக வாழ்வை முற்றிலும் வீணாக்கி விடுகின்ற நிலைக்கு சென்று விடுகிறது. இதனால் நிரந்தர வாழ்வான மறுமை வாழ்வின் மகிழ்ச்சியும் நற்கூலிகளும் முழுமையாக இல்லாமல் ஆகிவிடும். இவ்வாறான நிலைகள் ஏற்படாமல் இருக்க மனிதன் “எதற்காக உலகத்தில் வாழ்கிறோம்? என்ற கேள்விக்கான சரியான பதிலை அறிவது அவசியமாகும்.

மனிதர்கள் படைப்பின் நோக்கம் என்ன என்பதற்கான பதிலை தன்னைப் போன்ற மனிதனிடமே கேட்டறிய முயல்கின்றனர். ஆனால் அதெப்படி சாத்தியம்! தெளிவான துல்லியமான பதில் நிச்சயமாக இறைவனிடமிருந்து வந்த வேதங்களில் தானே இருக்க முடியும்?! இதற்காகவே இறைவன் படைப்புகளின் குறிக்கோள் என்ன என்பதை, மனிதர்களுக்கு தெரிவிக்க மனிதர்களில் இருந்தே தூதர்களை நியமித்தான். ஏனெனில் மனிதன் தன் தானாக தெளிவான பதிலை அறிய முடியாதவனாக இருக்கிறான். இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லா தூதர்களும் “இறைவன் ஏன் மனிதனைப் படைத்தான்?” எனும் கேள்விக்கு இறைவனின் தூதைக்கொண்டு தன்னை நம்பி பின்பற்றும் மக்களுக்கு பதில் அளித்தனர்.

## யூத கிறிஸ்தவ வேதநூல்கள்

நேர்மையான ஒருவர் படைப்பின் நோக்கத்திற்கான பதிலைத்தேடி பைபிளை ஆய்வு செய்ய முற்படும்போது தடுமாறிப் போகிறார். பைபிள் பழைய ஏற்பாடு, சட்டங்கள், ஆதிமனிதனின் வரலாறு, யூதர்களின் வரலாறு ஆகியவற்றை பேசுகிற அளவுக்கு மனித படைப்பு மற்றும் நோக்கம் குறித்த அதிமுக்கிய கேள்விக்கு விளக்கங்களைப் பேசவில்லை.[2]

பைபிள் பழைய ஏற்பாடு ஆதிஆகமத்தில் இறைவன் உலகையும் ஆதாம் ஏவாளையும் ஆறு நாட்களில் படைத்த பின்னர் ஏழாவது நாள் ஓய்வெடுத்தான் என்று கூறப்படுகிறது.[3] ஆதாம் ஏவாள் இறைவனுக்கு மாறு செய்ததால் இறைவன் தண்டித்தான். அவர்களுடைய மகன் காபில் இன்னொரு மகனான ஹாபிலைக் கொன்று விட்டார். பின்னர் நோட் எனும் பகுதிக்கு சென்று விட்டார். அப்போது இறைவன் மனிதனைப் படைத்ததற்காக வருந்தினார் என்றும் கூறப்படுகிறது.[4] மேலும் படைப்பின் நோக்கம் குறித்த செய்திகள் உறுதியான, தெளிவான சொற்களை விட்டுவிட்டு ஏனோ பல அர்த்தங்கள் தருகிற மொழிநடையில் அமைந்திருக்கிறது. இதனால் படிப்பவர்களுக்கு வெவ்வேறு அர்த்தங்களை யூகித்துக் கொள்ள வாய்ப்பாக அமைகிறது. உதாரணமாக பைபிள் ஆதியாகமம் ஆறாம் அதிகாரத்தில் "பூமியில் மனிதர்கள் பெருகத்தொடங்கி பெண்பிள்ளைகளும் பிறந்து வளர்ந்தபோது **இறைமகன்கள்** மனித இனத்தின் பெண்களை அழகுமிக்கவர்களாக கண்டனர். அதனால் அவர்களை தங்களுக்கு துணைவிகளாக தேர்ந்தெடுத்துக் கொண்டனர்."

இந்த வசனங்களில் கூறப்படும் இறைமகன்கள் யார்? யூத மற்றும் கிறிஸ்தவ மதங்களில் உள்ள ஒவ்வொரு பிரிவினரும் அவரவருக்கு பல விளக்கங்களை

---

[2] ஏசாயாவில் வருகிறது, இறைவன் தன் மகிமையை பறைசாற்ற இஸ்ரவேலர்கள் படைக்கப்பட்டனர்.
1 - இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்
6 - நான் வடக்கை நோக்கி: கொடு என்றும், தெற்கை நோக்கி: வைத்திராதே என்றும் சொல்லி, தூரத்திலிருந்து என் குமாரரையும், பூமியின் கடையாந்தரத்திலிருந்து என் குமாரத்திகளையும்,
7 - நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப் படைத்து, என் நாமந்தரிக்கப்பட்ட யாவரையும் கொண்டுவா என்பேன்.
பரிசுத்த வேதாகமம் ஏசாயா அதிகாரம் 43 1,6 &7

[3] தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்.
பைபிள் ஆதிஆகமம் அதிகாரம் 2:2

[4] தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது.
பைபிள் ஆதியாகமம் அதிகாரம் 6:6

கொண்டுள்ளனர். எது சரியான விளக்கம்? உண்மையில் என்ன நடந்தது என்றால் மனிதனைப் படைத்ததற்கான காரணங்களை இறைத்தூதர்கள் சமகாலத்தில் வாழ்ந்த யூத கிறிஸ்தவ முன்னோர்களுக்கு தெளிவாக கூறியிருந்தும் பிற்காலத்தில் பின்பற்றியவர்கள் ஷைத்தானோடு கூட்டுசேர்ந்து வேதநூல்களில் மாற்றம் செய்துவிட்டனர். இதனால்தான் யூத, கிறிஸ்தவ வேதநூல்கள் தெளிவற்ற விளக்கங்கள் நிறைந்ததாகவும், பெரும்பாலான இறைவசனங்கள் பல கருத்துக்களுக்கு இடம் தருகிற மொழியிலும் உள்ளன.

இறைவன் தன் தூதராக ஈசா நபியை தேர்ந்தெடுத்து யூதர்களிடம் அனுப்பிய போது, ஈசா நபியவர்கள் அதுநாள் வரை இறையில்லங்களில் வணிகத்தை நடத்தி வந்த யூத வணிகர்களின் அந்த நடைமுறைகளை எதிர்த்து நின்றார்கள்.[5] மேலும் இறை சட்டங்களை வெறும் சடங்குகளாக விளக்கப்படுத்தும் யூத ரப்பிகளையும் அவர்களைப் பின்பற்றும் மக்களையும் எதிர்த்து உபதேசம் செய்தார்கள். மூஸா நபிக்கு இறைவன் அறிவித்த சட்டங்களை உறுதிப்படுத்துபவராகவும இறைவனின் சொல்படி சில சட்டங்களில் திருத்தம் செய்பவராகவும் இருந்தார்கள். தன்னைப் பின்பற்றியவர்களுக்கு “படைப்பின் நோக்கம் என்ன?” என்பதை எடுத்துச் சொல்லியும் “எப்படி வாழ்வில் அந்த நோக்கத்தை கடைப்பிடிப்பது?” என்றும், தன் வாழ்வின் இறுதி வரை வாழ்ந்து காட்டினார்கள். ஆனால், இவ்வுலகை விட்டு இறைவனிடம் உயர்த்தப்பட்ட பின்னர், ஈஸா நபியின் சீடர்கள் என சொல்லிக்கொண்டவர்கள் நபியின் இறை செய்திகளை மாற்றி சிதைத்து விட்டனர். இப்படியாக ஈஸா நபிக்கு இறைவனிடமிருந்து தெளிவாக வந்த செய்திகள் குழப்பமான செய்திகளாக மாற்றப்பட்டு இருக்கிறது.

ஈஸா நபிக்கு முன்னர் வந்த இறைத்தூதர்களின் வேதங்களும் இப்படித்தான் மாற்றப்பட்டன. தெளிவான இறைவாக்கில் தெளிவற்ற மறை பொருள் குறியீடுகள் குறிப்பாக யோவான்(ஜான்) சுவிசேஷம்(கோஸ்பெல்) எனும் நூலில் அதிகளவில் காணக்கிடைக்கின்றன. நாளடைவில் இறைத்தூதர் இயேசுவுக்கு இறைவனிடமிருந்து வந்த நற்செய்திகள் காணாமல் போயின. மேலும், மனிதர்களால் இயற்றப்பட்ட நான்கு சுவிசேஷங்களை இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி(கோஸ்பெல்)க்கு ஒப்பாக நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த அத்தனாசியஸ் எனும் ஆயர் தேர்வு செய்தார்.[6] இந்த நான்கு நற்செய்திகள் போதாதென்று மேலதிகமாக பவுல் மற்றும் பலர் எழுதிய 23 சிறுநூல்களும் பைபிளின் புதிய ஏற்பாட்டில் சேர்க்கப்பட்டுள்ளன.[7] இப்படி 27 நூல்களைக் கொண்ட பைபிளின் புதிய ஏற்பாட்டைப் படிப்பவர்களாலும் இறைவன் மனிதனைப்

---

[5] லூக்கா 19:45

[6] தி நியூ என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா தொகுதி 14 பக்கம் 814

[7] 4ஆம் நூற்றாண்டின் மத்தியில் கோடெக்ஸ் சினாய்ட்டிகஸ்; பார்னபாஸ் நிருபம் மற்றும் ஹெர்மாஸின் மேய்ப்பன் ஆகிய கையெழுத்துப் பிரதிகள் பைபிள் புதிய ஏற்பாட்டில் சேர்க்கப்பட்டன. தி நியூ என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா தொகுதி 14 பக்கம் 814

படைத்தது ஏன்? என்ற கேள்விக்கு ஒரு தெளிவான பதிலை அடைய முடிவதில்லை.[8] இவ்வாறாக ஒரு குறிப்பிட்ட பிரிவில் இணையும் ஒருவர், ஏற்கனவே கட்டமைக்கப்பட்ட கோட்பாடுகளை கண்மூடித்தனமாக நம்ப வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்படுகிறார். சுவிசேஷங்கள் ஒவ்வொன்றுக்கும் கிறிஸ்தவ பிரிவுகள் ஒவ்வொன்றும் தத்தம் நம்பிக்கைகளுக்கேற்ப விளக்கங்கள் அளிக்கின்றன. உண்மையை தேடிச் செல்லும் ஒருவர் அவற்றை படிக்கும் போது "எது சரி?" என்று குழம்பிப் போகிறார்.

## கடவுளின் அவதாரம்

பெரும்பாலான கிறிஸ்தவ பிரிவுகள் மனிதனின் படைப்பு குறித்து கொண்டிருக்கும் ஒத்த கருத்து என்னவென்றால் மனித சமூகத்தை ஆதாமும் அவரது சந்ததிகளும் செய்த பாவங்களில் இருந்து மீட்டு பரிசுத்தப்படுத்துவதற்காக இறைவன் மனிதனின் வடிவில் வந்து மனிதர்களின் கைகளிலேயே இறந்தார் என்பதாகும். அவர்களைப் பொருத்தவரை ஆதாமும் அவரது சந்ததிகளும் செய்த பாவம் பாரதூரமானது. அதற்கு பரிகாரம் செய்தோ பாவமீட்சி கேட்டோ மனிதர்களால் அந்த பாவத்தை அழிக்க முடியாது. பாவத்தை சுமந்த நிலையில் மகத்துவமிக்க இறைவனுக்கு முன்னால் மனிதன் நிற்க இயலாது. எனவேதான் இறைவன் தன்னையே தியாகம் செய்து, பாவத்துடனே பிறந்த மனித சமூகத்தை பாதுகாத்தான் என்பதாக நம்புகிறார்கள்.

கிறிஸ்தவ தேவாலயங்கள் மனிதர்களால் உருவாக்கப்பட்ட இந்த கட்டுக்கதைகளையே இறைவனின் இரட்சிப்பை பெறுவதற்கான வழிமுறைகளாக கொண்டுள்ளன. இதன் காரணமாக கிறிஸ்தவம், மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கம் இறைவனின் தியாகத்தை போற்றுவதும் இயேசு கிறிஸ்துவை இறைவன் என்று ஒப்புக்கொள்வதுமே என்று கூறுகிறது. இதனை கீழ்க்காணும் யோவான் (ஜான்) சுவிசேஷத்தில் வரும் வசனத்தின் மூலம் அறியலாம். *"தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்"*[9]

படைப்பின் நோக்கம் மற்றும் நிரந்தர வாழ்வுக்கான தகுதி மேற்சொன்ன நம்பிக்கைகள் தான் என்றால் ஏன் மற்ற இறைத்தூதர்கள் இதனை கற்பிக்க வில்லை? ஆதாம் மற்றும் அவரது சந்ததிகள் உலகில் வந்த காலத்திலேயே இறைவன் மனிதனாக ஏன் வரவில்லை? அப்போதே வந்திருந்தால் முழு மனித சமூகமும் பாவமன்னிப்பையும் நித்திய வாழ்வையும் பெற வாய்ப்பாக

---

[8] கிங் ஜேம்ஸ் பதிப்பில் படைப்பின் நோக்கம் குறித்த செய்திகள் வெளிப்படுத்தின விசேஷம் 4:11 ல் காணக்கிடைக்கிறது. "கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர், நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள்."

[9] யோவான்(ஜான்) 3:16

இருந்திருக்கும்! அல்லது இயேசு கிறிஸ்துவுக்கு முன்னர் வாழ்ந்த மனிதர்கள் வேறு காரணங்களுக்காக படைக்கப்பட்டார்களா? இப்போதும் இயேசு கிறிஸ்துவை அறிந்திராத எண்ணற்ற மக்களுக்கும் கிறிஸ்தவம் கூறும் படைப்பின் நோக்கமாகிய இரட்சிப்பைப் பெறும் வாய்ப்பு இல்லையே? இந்த முரண்களை காணும்போது கிறிஸ்தவ நெறியால் நம்பப்படும் மனித படைப்பிற்கான நோக்கம் முழு மனித சமூகத்துக்கும் ஏற்றதாக இல்லை என்பது புலனாகிறது.

## யாவும் இறைவனே

ஹிந்து மதத்தின் வேதங்கள் பல கடவுளர்கள் இருப்பதாகவும், இறைவன் அவதாரம் எடுப்பதாகவும், காணும் யாவும் கடவுளே என்றும் கூறுகிறது. . ஒவ்வொரு உயிரின் ஆத்மாவும் பிரம்மாத்மாவே எனும் நம்பிக்கையைக் கொண்டிருந்தாலும் ஹிந்து மதத்தில் சாதிய படிநிலை அமைப்பும் காணப்படுகின்றன. இதன்படி பிராமணர்கள் பிறப்பால் உயர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது. அவர்களே வேதங்களை போதிப்பவர்களாகவும், சமய சடங்குகளை முறையாக செய்பவர்களாகவும், சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து உடையவர்களாகவும் முன்னிறுத்தப்படுகின்றனர்.[10] ஆனால் சூத்திரர்கள் என அழைக்கப்படும் பிரிவினர் சாதிய படிநிலையில் கடைசியாக வைக்கப்பட்டு மற்ற மூன்று சாதி மக்களுக்கும் இன்னும் பல துணைசாதி மக்களுக்கும் அடிபணிந்து ஊழியம் செய்வதே அவர்களது ஒரே கடமை என்று இழிவுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.[11]

ஹிந்து மதத்தில் உள்ள மோனிச தத்துவஞானிகள், மனிதன் தன் தெய்வீக தன்மையை உணர்ந்து அதன் வழியில் நடந்து மறுஜென்ம சக்கரத்தில் சிக்காமல் தன் ஆத்மாவை நித்திய பிரம்மாத்மாவோடு இணைத்து முக்தி(மோட்சம்) பெறுவதே அவன் படைக்கப்பட்டதன் நோக்கம் என்கிறார்கள். பக்தி மார்க்கத்தைப் பின்பற்றுவோர் மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கம் இறைவன் மீது அன்பு செலுத்துவதற்காகவே என்று நம்புகின்றனர்.[12] ஏனெனில் இறைவன் மனிதனை படைத்தது மனிதனும் இறைவனும், தந்தை தன்னுடைய பிள்ளைகளோடு இருப்பது போன்ற உறவை அனுபவிக்கத்தான்

---

[10] அறிவு ஞானம் எனும் பொருள் கொண்ட வேதம் எனும் சொல் ஹிந்து மதத்தின் (ஸ்ருதி - கேட்கப்பட்டது) புனித நூல்களைக் குறிக்கும். ஹிந்து மதத்தின் கோட்பாடுகளும் நடை முறைகளும் ( ஸ்மிருதி - நினைவகூரப்பட்டது) எனப்படும். மனிதர்களால் நினைவு கூரப்பட்டு எழுதப்பட்ட இவை மற்ற ஆக்கங்களில் காணப்படுகின்றன. (தி நியூ என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா தொகுதி 20 பக்கம் 530)

[11] மனுதர்ம சாஸ்திரம் 1.91 (தி நியூ என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா தொகுதி 20 பக்கம் 553)

[12] கடவுளை சிலைகளாக வரித்து வணங்குவதன் மூலமாக கிருஷ்ணலோகம் எனும் ஆன்மீக உலகில் மறுவாழ்வு வாழலாம் எனும் பக்தி மார்க்கம்.

என்றும் நம்புகின்றனர்(ஸ்ரீமத பாகவதம்). ஹிந்து மதத்தில் உள்ள சராசரி மனிதர் சமூகம் மற்றும் சடங்குகள் ஆகியவற்றின் எதிர்பார்ப்புகளுக்கும், காலங்காலமாக கட்டமைக்கப்பட்ட சாதிய நெறிமுறைகளுக்கும் இணங்கி நடப்பதையே தன்னுடைய முக்கிய குறிக்கோளாக கொள்கிறார்.[13]

வேள்வி வழிபாட்டை மையமாக கொண்ட பெரும்பாலான வேத வசனங்கள், பிற வசனங்களில் கூறப்படும் கொள்கை மற்றும் நடைமுறைகளால் மறைக்கப்பட்டாலும், வேதங்களின் முழுமையான அதிகாரம் மற்றும் புனிதத்தன்மையே ஹிந்து மதத்தின் அனைத்து பிரிவினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மையக் கோட்பாடாக திகழ்கிறது. வேதங்கள் நான்கு பகுதியாக இருக்கிறது. அவற்றுள் தொன்மையானது ரிக் வேதம் (ஞான வசனங்கள்). இந்நூலில் இறைவன் பற்றிய குறிப்புகள் மிகவும் குழப்பமான சொற்களில் உள்ளன. ரிக் வேதத்தில் பல கடவுளர்கள் எனும் கொள்கையும், வானம்,பூமியின் தெய்வங்களை மகிழ்விப்பது குறித்தும் கூறப்படுகிறது. சுவர்க்கம், மழை, நெருப்பு மற்றும் சூரியன் ஆகியவற்றை நிர்வகிக்கும் கடவுளர்களாக இந்திர பகவான், வருண பகவான், அக்னி தேவன், சூரிய தேவன் ஆகியோரை முன்னிறுத்துகிறது. பின்னர் வந்த வேதங்களில் ரிக் வேதத்தில் கூறப்படும் பல கடவுளர்கள் பற்றிய கவனம் குறைந்ததோடு, பல கடவுள் வழிபாடு எனும் கொள்கையை 'யாவும் இறையே' எனும் கொள்கை மிகைக்கத் தொடங்கியது. உபநிடதங்களில் (பிரபஞ்சத்தின் படைப்பு குறித்த இரகசிய உபதேசங்கள்) பிரஜாபதி பரம்பொருளான பிரம்மாத்மாவுடன் ஒன்றிணைந்து மனிதனாகவும் இன்ன பிற படைப்புகளாகவும் தோன்றியதாக சொல்லப்படுகிறது. இப்படியாக புராணங்கள் தத்துவங்களாக மாறிப்போயின.[14] இத்தகைய கருத்துகளைக் கொண்ட வேதங்களை ஒரு மனிதன் நல்வழி பெறும் நோக்கத்தோடு படிக்கும் போது இறைவனையும் மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கத்தையும் வேதங்கள் தெளிவாக வெளிப்படுத்தவில்லை எனும் முடிவுக்கே வர முடிகிறது.

இறைவன் என்றும் மனித சமூகத்தை குழப்பவோ சிரமப்படுத்தவோ நாடுவதில்லை. இத்தனை குழப்பங்களில் மனிதன் உழன்றதன் காரணமாக இறைவன் ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்பு தனது இறுதித்தூதை இறக்கினான். அதன்பின்னர் வருகின்ற முழுமனித சமூகத்துக்குமான இறைசெய்தியாக இருக்க வேண்டும் என்பதற்காக அதை பூரணமாக பாதுகாக்கிறான். இந்த இறுதி வேதத்தில் (குர்ஆன்), மனிதகுலம் படைக்கப்பட்டதன் நோக்கத்தை குறிக்கோளை தனது இறுதித்தூதரின் மூலம் இறைவன் வெளிப்படுத்துகிறான். மனிதன் புரிந்துகொள்ள ஏதுவாக யாவற்றையும் விளக்கப்படுத்தி இருக்கிறான். இந்த தெளிவான இறுதிவேதத்தையும் இறுதித் தூதரின் விளக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு "இறைவன் ஏன் மனிதனை படைத்தான்?" எனும் கேள்விக்கு சரியான விடையை இனி வரும் பக்கங்களில் விரிவாக காண்போம்.

---

[13] தி நியூ என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா தொகுதி 20 பக்கம் 520

[14] தி நியூ என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா தொகுதி 20 பக்கம் 529-530

# ஏன் இறைவன் படைத்தான்?

இறைவனின் பார்வையில் மனிதனை ஏன் படைத்தான் என்பதை விட இன்னும் அடிப்படையான கேள்வி என்னவென்றால் "இறைவன் எதற்காக படைத்தான்?" என்பதே. ஏனெனில் மனிதனை விட சிறந்த படைப்புகளையும் இறைவன் படைத்திருக்கிறான். குர்ஆனில் Gகாfபிர் எனும் அத்தியாயத்தில் இறைவன் கூறுகிறான்,

لَخَلْقُ السَّمَاوَاتِ وَالْأَرْضِ أَكْبَرُ مِنْ خَلْقِ النَّاسِ وَلَـٰكِنَّ أَكْثَرَ النَّاسِ لَا يَعْلَمُونَ

**நிச்சயமாக வானங்களையும், பூமியையும் படைப்பது, மனிதர்களைப் படைப்பதை விட மிகவும் பெரிதாகும் – எனினும் மனிதர்களில் பெரும்பாலோர் அறிய மாட்டார்கள். குர்ஆன் (40:57)**

மனித உடலின் கட்டமைப்பை விட சிக்கலானதாக அவன் வாழ்கின்ற இந்த பிரபஞ்சத்தின் தோற்றமும் கட்டமைப்பும் இருப்பதைக் காணலாம். ஆயினும் வெகுசிலரே இந்த பேருண்மையைப் பற்றி சிந்திக்கிறார்கள். மற்ற உயிரினங்களின் மீது ஆதிக்கம் செலுத்துவதாலும், விண்வெளிப் பயணம் மேற்கொள்வதாலும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் தொடர்ந்து முன்னேறி செல்வதாலும் எல்லா காலத்திலும் மனிதகுலம் ஆணவம் கொண்டு தன்னையே மிகச்சிறந்ததாக தலைசிறந்ததாக எண்ணிக்கொள்கிறது. மனிதன் தன்னைப் பற்றி கண்டுபிடித்த கண்டுபிடிப்புகளை விட தான் வாழ்கின்ற உலகைப் பற்றி கண்டுபிடித்த ஆச்சரியமான கண்டுபிடிப்புகளே அதிகம் என்பதை கவனத்தில் கொள்வது அவசியமாகும். மனிதனுடைய முயற்சிகள் மனிதன் மீது செலுத்தப்படுவதை விட பெரும்பாலும் சட உலகின் மீதே செலுத்தப்படுகிறது.

மேற்கண்ட வசனத்தில் இறைவன் மனிதனின் உண்மை நிலை என்னவென்று காண்பிக்கிறான். இறைவனால் ஆச்சரியமான முறையில் படைக்கப்பட்ட பிரபஞ்சத்தின் சிறு பகுதியே மனிதனின் இருப்பு என்று தெளிவாக கூறியிருக்கிறான். எனவே மனிதன் தான் ஏன் படைக்கப்பட்டோம் என அறிவதற்கு முன்னர், அடிப்படை கேள்வியான இறைவன் ஏன் படைத்தான் என்பதற்கான பதிலை அறியவேண்டியது அவசியமாகும்.

## படைத்தவன் - உருவாக்கியவன்

படைப்பு என்பது படைப்பாளியின் பிரதான பண்பான படைத்தல் என்பதன் விளைவாக இருக்கிறது. ஒரு படைப்பாளி எதையும் படைக்கவில்லை என்றால் படைப்பாளியாக இருக்க முடியாது. அதற்காக இறைவனுக்கு படைப்புகள் தேவை என்றாகாது. இறைவன் எந்த தேவையுமற்றவன். படைப்பு களுக்குத்தான்

இறைவன் தேவை. எப்படி ஒரு எழுத்தாளனின் சிறப்பு அவனது எழுத்துகளில் வெளிப்படையாக தெரிகிறதோ, படைத்தல் எனும் பண்பின் பூரணத்துவம் படைப்புகளில் வெளியாகும். அது இறைவனின் தனித்தன்மையாகும். என்னதான் மனிதன் தானும் படைப்பதாக சொல்லிக் கொண்டாலும், அது உண்மையில் படைப்பே அல்ல. இறைவன் ஏற்கனவே படைத்த ஒன்றை மீளுருவாக்கம் செய்வதாகவே இருக்கிறது. உதாரணமாக ஒரு மேசை மனிதனால் உருவாக்கப்பட்டாலும் அதற்கு தேவையான மரமோ உலோகங்களோ மனிதனால் படைக்கப் பட்டது அல்ல. இப்படி மனிதன் உருவாக்கிய எந்த பொருளாக இருந்தாலும் அதற்கு தேவையான மூலப்பொருட்களை மனிதனால் படைக்க முடியாது. ஓவியரும் கூட தான் கண்ட காட்சிகள் அல்லது பொருட்களை அடிப்படையாக கொண்டே ஒவ்வொரு ஓவியத்தையும் வரைகிறார். தான் தன் புலனால் உணராத ஒன்றை கற்பனை செய்வது இயலாத ஒன்று. ஆக, மனிதன் உருவாக்கும் எல்லா கலைப்படைப்புகளும் கற்பனைகளும் இறைவன் ஏற்கனவே படைத்தவற்றின் பிரதிபலிப்புகளாகவே உள்ளன. இறைவனால் மட்டுமே புதிதாக படைக்க முடியும். இந்த அடிப்படை உண்மை சிலரால் எப்போதும் புரிந்துகொள்ள முடியவில்லை. இறைவனால் மட்டும் தான் இல்லாத ஒன்றை உருவாக்க முடியும் எனும் பேருண்மையை உணராத சில முற்கால மற்றும் தற்கால தத்துவ அறிஞர்கள் இந்த பிரபஞ்சமும் அதில் உள்ள யாவும் இறைவனின் ஒரு பகுதியே என வாதிடுகின்றனர்.[15] அவர்களின் நிலைப்பாடு, இறைவன் தன்னிலிருந்தே ஒரு பகுதியைக் கொண்டு பிரபஞ்சத்தை படைத்தான் என்பதாக இருக்கிறது. இந்த நிலைப்பாடு, இறைவனும் மனிதனைப் போல இருக்கின்ற ஒன்றை மாற்றியமைத்து படைத்திருக்கிறான் எனும் தோற்றத்தை ஏற்படுத்துகிறது. ஆனால் மனிதனுக்கு உள்ளது போன்ற எந்த வரையறைகளும் இறைவனுக்கு இல்லை. குர்ஆனில் அஷ்ஷூரா அத்தியாயத்தில் இறைவன் கூறுகிறான்,

لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ ۖ وَهُوَ السَّمِيعُ الْبَصِيرُ ﴿١١﴾

**அவனைப் போன்று எப்பொருளும் இல்லை. அவன் தான் (யாவற்றையும்) செவியேற்பவன், பார்ப்பவன். குர்ஆன் (42:11)**

[15] ரிக் வேதம் (10வது) இறுதிநூலில் புருஷ சூக்தத்தில் பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொன்றும் இறைவனின் ஒவ்வொரு உடல் பகுதியால் ஆனது என்றும் படைப்பின் ஆதாரமான (பரம்பொருளின்) புருஷனின் உடலை புனித வேள்வியில் எரித்த போது உடலின் ஒவ்வொரு பகுதியில் இருந்தும் படைப்புகள் தோன்றியதாக கூறப்படுகிறது. மனித படைப்பைக் குறித்து கூறுகையில் நான்கு வர்ணங்கள் பற்றியும் கூறப்படுகிறது. வாயில் இருந்து தோன்றியவர் பிராமணர்கள் என்றும், கரங்களில் இருந்து தோன்றியவர் அரசர்கள் என்றும், தொடையில் இருந்து தோன்றியவர்கள் வைசியர்கள் என்றும், பாதத்தில் இருந்து தோன்றியவர்கள் சூத்திரர்கள் என்றும் கூறப்படுகிறது. (தி நியூ என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா தொகுதி 20 பக்கம் 531)

எனவே, இறைவனுக்கு மட்டுமே உரிய படைத்தல் எனும் பண்பின் விளைவாகவே எல்லா படைப்புகளும் படைக்கப்பட்டுள்ளன. இறைவன் தன் இறுதி வேதத்தில் பற்பல வசனங்களில் தன்னை படைப்பாளன் என்றே கூறுகிறான். இதன்மூலம் படைக்கப்பட்ட யாவும் தனக்கே உரியன என்று மனிதனுக்கு உணர்த்துகிறான்.

**اللَّـهُ خَالِقُ كُلِّ شَيْءٍ ۖ وَهُوَ عَلَىٰ كُلِّ شَيْءٍ وَكِيلٌ ﴿٦٢﴾**

**அல்லாஹ்தான் அனைத்துப் பொருட்களையும் படைப்பவன்; இன்னும், அவனே எல்லாப் பொருட்களின் பாதுகாவலனுமாவான் குர்ஆன் (39:62)**

**وَاللَّـهُ خَلَقَكُمْ وَمَا تَعْمَلُونَ ﴿٩٦﴾**

**உங்களையும், நீங்கள் செய்த(இ)வற்றையும், அல்லாஹ்வே படைத்திருக்கின்றான். குர்ஆன் (37:96)**

பிரபஞ்சத்தின் எந்த ஒரு நிகழ்வும் இறைவனின் அனுமதியின்றி நடக்காது என்பதை மனிதன் உணர வேண்டும். தீய சக்திகளிடம் இருந்து பாதுகாப்பையோ அல்லது நன்மையையோ இறைவன் அல்லாத வேறெந்த வழியில் தேடினாலும் அது பெரும் குற்றமாகும். அறியாமையால் பெரும்பாலான மக்கள் துர்பேறுகளை தவிர்க்கவும் நற்பேறுகளை அடையவும் பல வகையான தாயத்துகள், மந்திரங்கள், ஜோதிடம் மற்றும் குறிகேட்டல் போன்றவற்றை நாடிச் செல்கின்றனர். இறுதி வேதமாகிய குர்ஆனில் fபலக் எனும் அத்தியாயத்தில், மனிதர்களை தீமைகளை விட்டு பாதுகாக்கும் படி தன்னிடமே கேட்க சொல்லி அறிவுறுத்துகிறான்.

**قُلْ أَعُوذُ بِرَبِّ الْفَلَقِ ﴿١﴾ مِن شَرِّ مَا خَلَقَ ﴿٢﴾**

**(நபியே!) நீர் சொல்வீராக: அதிகாலையின் இறைவனிடத்தில் நான் காவல் தேடுகிறேன் ; அவன் படைத்தவற்றின் தீங்கை விட்டும். குர்ஆன் (113:1-2)**

எல்லாம் வல்ல இறைவனாகிய அல்லாஹ் மிக நல்லவன். தீயவன் அல்ல. அவனே யாவற்றையும் படைத்தான். அல்லாஹ் தருகிற ஆற்றலைக் கொண்டே தவிர எவரும் நன்மையோ தீமையோ செய்ய இயலாது. நல்ல செயல்களும் தீய செயல்களும் அவனுடைய அனுமதியின்றி நடக்காது. எனவே, அல்லாஹ்வை தவிர எவரிடமும் உதவியோ பாதுகாப்போ தேடுவதில் எந்த பயனும் இல்லை.

**مَا أَصَابَ مِن مُّصِيبَةٍ إِلَّا بِإِذْنِ اللَّـهِ**

**நிகழும் நிகழ்ச்சியெல்லாம் அல்லாஹ்வின் அனுமதி கொண்டேயல்லாமல் (வேறு) இல்லை. குர்ஆன் (64:11)**

ஏக இறைவனின் இறுதித்தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இதனை கீழ்வருமாறு விளக்குகிறார்கள். *“அறிந்து கொள்! அனைவரும் ஒன்று சேர்ந்து உனக்கு ஒரு நன்மை செய்ய நாடினால் அல்லாஹ் நாடினாலே தவிர அவர்களால் உனக்கு ஒரு நன்மையும் செய்ய முடியாது. அனைவரும் சேர்ந்து உனக்கொரு தீமையைச் செய்ய நாடினால் அல்லாஹ் நாடியதைத் தவிர எந்த ஒரு தீமையையும் அவர்களால் செய்ய* முடியாது.[16]

## அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்

மனிதகுலத்தின் உருவாக்கத்தில் மன்னிப்பு, கருணை மற்றும் இரக்கம் போன்ற இறைப்பண்புகள் உள்ளடங்கியுள்ளன. மனிதர்கள் நன்மை தீமை பற்றின இயற்கையான விழிப்புணர்வுடன் தூய்மையானவர்களாக படைக்கப்பட்டுள்ளனர். சர்வவல்லமை உள்ள இறைவன் மனிதர்களை ஆசை உள்ளவர்களாக படைத்தான். மேலும் அந்த ஆசைகளை அதற்கேற்ப கட்டுப்படுத்தும் திறனை அவர்களுக்கு வழங்கினான். அத்துடன் இறை சட்டத்திற்கு கட்டுப்பட்டோ அல்லது அவற்றை தளர்த்தி இச்சைகளை கண்மூடித்தனமாக பின்பற்றும் உரிமையையும் வழங்கினான். மேலும் ஆதாமில் தொடங்கி மனிதர்களுக்கு பாவ மன்னிப்பு கோரவும், அதன் மூலம் அவர்கள் செய்த பாவங்களைத் தூய்மைப்படுத்தவும் கற்றுக்கொடுத்தான். ஆதாமும் ஹவ்வாவும் எல்லா மனிதர்களும் பின்பற்றக்கூடிய ஒரு முன் மாதிரியை உருவாக்கினர். சாத்தான் அவர்களின் ஆசைகளை தூண்டியதன் விளைவாக அவர்கள் இறைவனின் கட்டளையை மறந்துவிட்டார்கள். அவர்கள் இறைவனின் கட்டளைக்கு மாற்றம் செய்த பிறகு மனந்திருந்தி மன்னிப்புக்கோரினர். இறைவன் அவர்களை மன்னித்தான். மனிதகுலத்தின் கீழ்ப்படியாமையிலும், அதன் பின்னர் மனந்திருந்தி இறைவனிடம் திரும்புதலிலும், மொத்த மன்னிப்பு மற்றும் எல்லையற்ற கருணையின் இறைப் பண்புகள் வெளிப்படுகின்றன. இறுதித்தூதர் அவர்கள் சஹாபாக்களிடம் கூறினார்கள், *“நீங்கள் பாவங்களைச் செய்யாமலும் அல்லாஹ்விடம் மன்னிப்புக்கோராமலும் இருந்திருந்தால், அவன் பாவம் செய்யக்கூடிய இன்னொரு கூட்டத்தினரை படைத்து அவர்கள் மன்னிப்புக்கோரி, அவர்களை அவன் மன்னித்திருப்பான்.*[17] இறுதித்தூதின் 114 அத்தியாயங்களில் ஒன்றைத்தவிற மற்றைய அனைத்து அத்தியாயங்களும் “அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்” என்ற பிரார்த்தனையுடனே

---

[16] அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கப்பட்ட ஹதீஸ்.. திர்மிதீ அவர்களால் தொகுக்கப்பட்ட சஹீஹ் ஹதீஸ் திர்மிதீ தொகுதி-2, பக்கம் 308-9, எண்2043.

[17] சஹீஹ் முஸ்லிம், தொகுதி 4, பக்கம் 1435-6, எண். 6621. அறிவித்தவர் அபூ அய்யூப் அல் அன்ஸாரி அவர்கள்.

தொடங்குகின்றன. கருணை மற்றும் மன்னிப்பு ஆகிய இறைவனின் பண்புகள் மனிதர்களை நம்பிக்கையிழக்க வேண்டாம் என்று வலியுறுத்தி ஊக்குவிக்கின்றன. மனிதர்களின் பாவங்கள் எவ்வளவு பெரியதாக இருந்தாலும், மனிதன் மன்னிப்புக் கோரி தன்னிடம் திரும்பினால் இறைவன் அவர்களை மன்னிப்பான். இறைத்தூதர் அவர்கள் கூறியுள்ளார்கள், *"அல்லாஹ் பிரபஞ்சத்தைப் படைத்தபோது, தான் வைத்திருந்த பதிவேட்டில் தன் மீது ஒரு கடமையாக "என் கருணை என் கோபத்தை மிஞ்சியது"*[18] என்று பதிவு செய்தான். அவர் மேலும் கூறியுள்ளார், *"(அல்லாஹ் படைத்தான்) நூறு பாகங்களுடன் கருணையை படைத்தான். அதில் ஒரு பகுதியை ஜின்கள், மனிதர்கள் மற்றும் பிற ஜீவராசிகள் மீது அனுப்பினான். இந்த ஒரு பகுதியிலிருந்தே அவர்கள் ஒருவருக்கொருவர் நேசிக்கிறார்கள், ஒருவருக்கொருவர் கருணை* காட்டுகிறார்கள், *விலங்குகள் கூட தங்கள் சந்ததியினரை பாசத்துடன் நடத்துகின்றன. மீதமுள்ள தொண்ணூற்றொன்பது பகுதிகளை அல்லாஹ் தனது உண்மையான அடியார்களுக்கு உயிர்த்தெழுதல் நாளில் ஒதுக்கியுள்ளான்.*[19]

அல்லாஹ் விரும்பியிருந்தால், பாவங்களைச் செய்ய இயலாத, வானவர்களைப் போல மனிதகுலத்தை அவன் படைத்திருக்க முடியும். இருப்பினும், ஏற்கனவே வானவர்களை உருவாக்கியதால், அது அவனுடைய விருப்பமல்ல. மனிதர்கள் தவறுகளைச் செய்ய வல்லவர்களாக உருவாக்கப்பட்டனர், அவர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து இறைவனின் மன்னிப்பைத் தேடும்போது, கருணை மற்றும் மன்னிப்பின் இறைப் பண்புகள் வெளிப்படும்.

## மேன்மையான நீதி

உலக முடிவின் போது மனிதகுலத்தின் தீர்ப்பில், மேன்மையான நீதி மற்றும் நேர்மை ஆகிய இறைவனின் பண்புகளும் வெளிப்படுகின்றன. அவனுடைய எல்லையற்ற அறிவின் அடிப்படையில், பூமியில் வாழவிருந்த மனித இனத்தின் அனைத்து உறுப்பினர்களையும் இறைவன் உருவாக்கி, அவர்களில் சிலரை உடனடியாக சொர்க்கத்திலும், மீதமுள்ளவர்களை நரகத்திலும் வைத்திருக்க முடியும். மனிதனை உருவாக்குவதற்கு முன்பு, இந்த வாழ்க்கையில் அவர்கள் என்னென்ன தேர்வுகள் செய்வார்கள் என்றும், என்ன ஏற்பாடு மற்றும் வாய்ப்புகளை அல்லாஹ் அவர்களுக்கு தருவான் என்றும், யார் இறைநம்பிக்கையோடு அல்லது இறைமறுப்போடு இறந்து விடுவார்கள்

[18] சஹீஹ் முஸ்லிம், தொகுதி 4, பக்கம் 1437, எண். 6628. அறிவித்தவர் அபூ ஹுறைறா அவர்கள்

[19] சஹீஹ் முஸ்லிம், தொகுதி 4, பக்கம் 1437, எண். 6631 அறிவித்தவர் அபூ ஹுறைறா அவர்கள்

என்பதையும் அல்லாஹ் ஏற்கனவே அறிந்திருந்தான். எனவே, சிலர் சொர்க்கத்துக்காகவும் மற்றவர்கள் நரகத்துக்காகவும் படைக்கப்பட்டவர்கள் என்று கூறலாம். நபிகள் நாயகத்தின் மனைவி ஆயிஷா அவரை மேற்கோள் காட்டி கூறியுள்ளார்கள், *"அல்லாஹ் சொர்க்கத்தையும் நரகத்தையும் படைத்து, ஒவ்வொன்றிற்கும் அவன் குடிமக்களைப் படைத்தான் என்பது உங்களுக்குத் தெரியாதா?*[20] இறைவன் அவர்களை உடனடியாக சொர்க்கத்திற்குச் செல்ல வைத்திருந்தால், அவர்கள் இறைவனின் முடிவை கேள்வி கேட்க மாட்டார்கள். சொர்க்கத்தில் இருப்பவர்கள் ஆனந்தத்தின் நித்தியமான மகிழ்ச்சியை ஆனந்தமாக ஏற்றுக்கொள்வார்கள், மேலும் அவர்கள் நரகத்தில் வைக்கப்படவில்லை என்பதற்கு நன்றி செலுத்துவார்கள். ஆனால், உடனடியாக நரகத்திற்கு அனுப்பப்பட்டவர்கள் அதற்கான காரணம் என்னவென்று கேட்பார்கள். அவர்கள் பூமியில் வாழ்ந்திருந்தால் அவர்கள் என்ன செய்திருப்பார்கள் என்பதை அவர்கள் அறியாததால் அவர்கள் (நரகத்தில் போடப்பட்டதை) நியாயமற்றதாக உணருவார்கள். நரகத்தில் இருப்பவர்கள், பூமியில் தங்கள் வாழ்க்கையை வாழ ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தால், அவர்கள் நம்பிக்கையுள்ளவர்களாகவும் நற்செயல்களையும் செய்திருப்பார்கள் என்று தொடர்ச்சியாக வாதிடுவார்கள். இதன் காரணமாக, மனிதர்கள் பூமியில் தங்கள் வாழ்க்கையை வாழவும், அவர்கள் செய்த அனைத்து தேர்வுகளையும் செய்யவும் அல்லாஹ் அனுமதிக்கிறான், இதனால் நரகத்திற்குள் நுழையும் அனைவருக்கும் அவர்கள் தாங்களே நரகத்தைத் தேர்ந்தெடுத்தார்கள் என்பதை அறிந்து கொள்வார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கையில் இறைவனின் கருணையை அங்கீகரிப்பார்கள். அத்துடன் அவனுடைய அடையாளங்களையும் வழிகாட்டுதலையும் நிராகரிப்பதில் அவர்கள் செய்த பாவத்தை ஒப்புக்கொள்வார்கள். அவனுடைய நியாயத்தீர்ப்பை நியாயமாகவும் நிந்தனைக்கு அப்பாற்பட்டதாகவும் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். இருப்பினும், குர்ஆனின் சஜ்தா அத்தியாயத்தில் இறைவன் சொல்வது போல் இந்த உலகில் நன்மை செய்ய மற்றொரு வாய்ப்பை தருமாறு அவர்கள் பிச்சையாக கேட்பார்கள்:

**وَلَوْ تَرَىٰ إِذِ الْمُجْرِمُونَ نَاكِسُو رُءُوسِهِمْ عِنْدَ رَبِّهِمْ رَبَّنَا أَبْصَرْنَا وَسَمِعْنَا فَارْجِعْنَا نَعْمَلْ صَالِحًا إِنَّا مُوقِنُونَ**

**மேலும், இக்குற்றவாளிகள் தம் இறைவன் முன் தலைகுனிந்தவர்களாய், "எங்கள் இறைவா! நாங்கள் (இப்பொழுது) பார்த்துக் கொண்டோம், கேட்டும் கொண்டோம் - ஆகவே, நீ (உலகுக்கு) எங்களைத் திருப்பி அனுப்பிவை நாங்கள் நற்கருமங்களையே செய்வோம். நிச்சயமாய் நாங்கள் (நம்பிக்கையில்) உறுதியுள்ளவர்களாக ஆகிவிட்டோம்" என்று சொல்லும்போது (நபியே!) நீர் பார்ப்பீராயின் (அவர்களுடைய நிலையை நீர் அறிந்து கொள்வீர்).** [32:12]

---

[20] மே.கு.நூல்- தொகுதி 4, பக்கம் 1400, எண். 6435

இருப்பினும், அல்லாஹ் அவர்களை இந்த உலகத்திற்கு திருப்பி அனுப்பினால்,அவர்கள் நரகத்தைக் கண்டதை மறந்துவிட்டு, அவர்கள் மீண்டும் தீமையைத் தேர்ந்தெடுத்து முன்பு போலவே நரகத்தில் முடிவடைவார்கள். இறைவன் இதைப் பற்றி அல் அன்ஆம் அத்தியாயத்தில் கூறியுள்ளான்:

وَلَوْ رُدُّوا لَعَادُوا لِمَا نُهُوا عَنْهُ وَإِنَّهُمْ لَكَاذِبُونَ

**(உலகத்திற்குத்) திருப்பி அனுப்பப்பட்டாலும் எதை விட்டு அவர்கள் தடுக்கப்பட்டார்களோ அதற்கே மீளுவார்கள்; நிச்சயமாக அவர்கள் பொய்யர்களே. [6:28]**

## இறை அன்பு

இறைநம்பிக்கையாளரோ இறைமறுப்பாளரோ இன்னும் அனைத்து படைப்பினங்களும் சொற்ப காலம் வாழ்ந்தாலும், அவ்வாழ்க்கை இறைவனுடைய பேரன்பின் வெளிப்பாடே ஆகும். தீமைக்கு மேல் நன்மையைத் தேர்ந்தெடுப்பவர்களுக்கு சொர்க்கத்தை உருவாக்குவதில் இது உணரப்படுகிறது. அல்லாஹ் இறுதி மறையில் குறிப்பிடுகிறான்: நன்மை செய்வோரை அல்லாஹ் நேசிக்கிறான் [5:13], நிச்சயமாக அல்லாஹ் நீதிமான்களையே நேசிக்கின்றான் [5:42], நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியுடையோரை நேசிக்கின்றான்.[9:4], அல்லாஹ் (இத்தகைய) பொறுமையாளர்களையே நேசிக்கின்றான் [3:146], நிச்சயமாக அல்லாஹ் தன் மீது பொறுப்பேற்படுத்துவோரை நேசிக்கின்றான் [3:159], பாவங்களைவிட்டு மீள்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கிறான்; இன்னும் தூய்மையாக இருப்போரையும் நேசிக்கின்றான் [2:222]. ஆயினும், அவன்தான் மனிதர்களுக்காக வேதங்கள் மற்றும் இறைத்தூதர்களின் மூலம் நன்மை, நீதி, பக்தி ஆகியவற்றை வரையறுத்துள்ளான். இதன் விளைவாக, இறைத்தூதர்களைப் பின்பற்றுபவர்கள் இறைவனுக்கு மிகவும் பிரியமானவர்கள். ஆல் இம்ரான் அத்தியாயத்தில், விசுவாசிகளிடம் பின்வருவனவற்றைச் சொல்லுமாறு அல்லாஹ் நபிகள் நாயகத்திற்கு அறிவுறுத்தினான்:

إِن كُنتُمْ تُحِبُّونَ اللَّهَ فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللَّهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ ۗ وَاللَّهُ غَفُورٌ رَّحِيمٌ

**"நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களானால், என்னைப் பின் பற்றுங்கள்; அல்லாஹ் உங்களை நேசிப்பான்; உங்கள் பாவங்களை உங்களுக்காக மன்னிப்பான்; மேலும், அல்லாஹ் மன்னிப்பவனாகவும், மிக்க கருணை உடையவனாகவும் இருக்கின்றான். [3:31]**

இறைவனால் நியமிக்கப்பட்ட கட்டாயச் செயல்களில்(பர்ளு) மட்டுமல்லாமல், தன்னார்வ வழிபாட்டுச் செயல்களைச் செய்வதற்கான ஆர்வத்திலும் இறைத்தூதர்

கள் பின்பற்றப்பட வேண்டும். இறைவனின் அன்புக்கு மனிதர்கள் தகுதியானவர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவனுடைய அன்பானது அவன் காட்டும் கருணையிலும் அருளிலும் வெளிப்படுகிறது. அத்துடன், நேர்மையாக மன்னிப்புக்கோரி தன்னிடம் திரும்பும் எவருடைய பாவங்களையும் மன்னிப்பதற்கான அவனுடைய விருப்பத்திலும் இது தெளிவாகத் தெரிகிறது. ஆதம் மற்றும் ஹவ்வாவின் படைப்பிலிருந்து, அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்பட்டமை இந்த உலகத்திற்கு அவர்களைப் பின்தொடரும் அனைத்து மனிதர்களுக்கும் ஒரு முன்மாதிரியாக அமைக்கப்பட்டுள்ளது. மனித பாவங்கள் எவ்வளவு பெரியதாக மாறினாலும், இந்த உலகத்தின் கடைசி நாள் வரை நேர்மையாக மன்னிப்புக் கோருபவர்களுக்கு மன்னிப்பின் கதவு திறந்தே இருக்கிறது. அல்லாஹ்வின் தூதரை மேற்கோள் காட்டி அனஸ் கூறியுள்ளார்கள்: *"சர்வவல்லமையுள்ள அல்லாஹ் கூறியிருக்கிறான்: ஆதமின் மகனே, நீ என்னை அழைத்து என்னைக் கேட்கும் வரை, நீ செய்ததை நான் மன்னிப்பேன், நான் கவலைப்படவில்லை. ஆதமின் மகனே , உங்கள் பாவங்கள் மேகங்களை அடைந்தாலும், நீங்கள் என் மன்னிப்பைக் கேட்டால், நான் உன்னை மன்னிப்பேன். ஆதமின் மகனே, பூமியைப் போன்ற மிகப் பெரிய பாவங்களுடன் நீங்கள் என்னிடம் வந்து, எனக்கு இணை கற்பிக்காமல் என்னைச் சந்தித்தித்தால், நான் உங்களுக்குக் இதேபோன்ற மன்னிப்பைக் கொடுப்பேன்."*[21]

## இறை அருள்

சொர்க்கத்தில் இருப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் செய்த நற்செயல்களின் அடிப்படையில் மட்டுமே அவர்கள் அதில் நுழைய மாட்டார்கள். அல்லாஹ்வின் இறுதி நபி இது சம்பந்தமாக கூறினார்கள், *"சரியானதைச் செய்ய உங்களால் முடிந்தவரை முயற்சி செய்யுங்கள், மகிழ்ச்சியாக இருங்கள். ஏனென்றால், அவருடைய செயலால் மட்டுமே யாரும் சொர்க்கத்தில் நுழைய மாட்டார்கள்."* அவருடைய தோழர்கள் கேட்டார்கள், "அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் கூட இல்லையா?" அதற்கு அவர் சொன்னார், "*அல்லாஹ் அவனது கருணையிலும் கிருபையிலும் என்னைச் சூழ்ந்தாலொழிய நான் கூட இல்லை"*[22] *அல்லாஹ்வால் மிகவும் விரும்பப்படும் செயல் சிறியதாக இருந்தாலும் தொடர்ந்து செய்யப்படும் செயலே என்பதை நினைவில் கொள்ளுங்கள்.*[23] இருப்பினும், இறைவனின் கிருபை தன்னிச்சையானது அல்ல. இது சரியான

[21] திர்மிதியில் சேகரிக்கப்பட்டு சஹீ ஹ் சுனன் அத் திர்மிதியில் அங்கீகரிக்கப்பட்டது. தொகுதி 3, பக்கம் 175-6, எண். 2805

[22] சஹீஹ் முஸ்லிம், தொகுதி 4, பக்கம் 1473, எண். 6765. அறிவித்தவர் அபூ ஹுறைறா அவர்கள்.

[23] சஹீஹ் முஸ்லிம், தொகுதி 4, பக்கம் 1473-4, எண். 6770. அறிவித்தவர் அன்னை ஆயிஷா அவர்கள்.

நம்பிக்கை மற்றும் நற்செயல்கள் இரண்டையும் அடிப்படையாகக் கொண்டது. அன்ஆம் அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகிறான்,

**مَن جَاءَ بِالْحَسَنَةِ فَلَهُ عَشْرُ أَمْثَالِهَا ۖ وَمَن جَاءَ بِالسَّيِّئَةِ فَلَا يُجْزَىٰ إِلَّا مِثْلَهَا وَهُمْ لَا يُظْلَمُونَ**

**எவர் ஒருவர் (ஒரு) நன்மையைச் செய்கிறாரோ அவருக்கு அதுபோல் பத்துப் பங்கு (நன்மை) உண்டு; எவர் ஒருவர் (ஒரு) தீமையைச் செய்கிறாரோ அதைப்போன்ற அளவுடைய கூலியே கொடுக்கப்படுவார் - அவர்கள் அநியாயம் செய்யப்படவும் மாட்டார்கள். [6:160]**

இறைவன் மனிதகுலத்தை கண்டிப்பாக கணக்கில் வைத்திருந்தால், யாருடைய நற்செயல்களும் அவர்களின் தீய செயல்களை விட அதிகமாக இருக்காது. இருப்பினும், நல்ல செயல்களின் மதிப்பைப் பெருக்கி, தீய செயல்களை அவற்றின் முக மதிப்பில் வைத்திருப்பதன் மூலம் இறைவன் தம்முடைய கிருபையை ளிப்படுத்தியுள்ளான். இறைவனின் கிருபையினால்தான் உண்மையான விசுவாசிகள் சொர்க்கத்தில் நுழைவார்கள். செயல்களுக்கு எந்தப் பங்கும் இல்லை என்று இது அர்த்தப்படுத்துவதில்லை. செயல்களுக்கு ஒரு முக்கிய பங்கு உண்டு, ஆனால் அவை தீர்மானிக்கும் காரணி அல்ல. இறைவனின் கிருபையே நற்செயல்களையும் விஞ்சி நிற்கிறது.

மனிதர்களைப் படைத்ததும், அவர்கள் செய்யும் பிழைகள் மற்றும் அவர்கள் செய்யும் நன்மை அனைத்தும் இறைவனின் கருணை மற்றும் மன்னிப்பு ஆகிய பண்புகளின் வெளிப்பாடே ஆகும். மேலும் நீதியாளன், அருளாளன் ஆகிய பண்புகளின் வெளிப்பாடாகவும் இருக்கிறது.

இறைவன் ஏன் தனது பண்புகளை இந்த வழியில் வெளிப்படுத்தத் தேர்ந்தெடுத்தான் என்று மனிதகுலம் கேள்வி கேட்கக்கூடாது. இது மிகச் சிறந்த வழி என்று மட்டுமே கருத முடியும், ஏனென்றால் அல்லாஹ் தன்னை மிகவும் ஞானமுள்ளவனாகவும், அறிவானவனாகவும் விவரிக்கிறான். அல்லாஹ் அவர்களுக்கு வெளிப்படுத்தத் தேர்ந்தெடுப்பதை மட்டுமே மனிதர்களால் புரிந்து கொள்ள முடியும்.

**وَلَا يُحِيطُونَ بِشَيْءٍ مِّنْ عِلْمِهِ إِلَّا بِمَا شَاءَ**

**அவன் ஞானத்திலிருந்து எதனையும், அவன் நாட்டமின்றி, எவரும் அறிந்துகொள்ள முடியாது. [2:255]**

மனிதர்கள் தங்களை இறைவனோடு ஒப்பிட்டுப் பார்க்க முயற்சிக்கக்கூடாது. இறைவன் ஒன்றை செய்ய முடிவெடுத்து அதனை மனிதகுலத்திற்கு அறிவித்தாலும் அந்த முடிவைக் குறித்து கேள்வி எழுப்பக்கூடாது. இத்தகைய கேள்விகள் முடிவற்றவை, மனித அறிவின் எல்லைக்கு அப்பாற்பட்டவை. மனிதர்கள் தான், அவர்களின் செயல்கள் மற்றும் நோக்கங்களைப் பற்றி நியாயத்தீர்ப்பு நாளில் விசாரிக்கப்படுவார்கள், இறைவன் அல்ல. அல் அம்பியா அத்தியாயத்தில் அல்லாஹ் இந்த விஷயத்தை விளக்குகிறான்,

**لَا يُسْأَلُ عَمَّا يَفْعَلُ وَهُمْ يُسْأَلُونَ**

**அவன் செய்பவை பற்றி எவரும் அவனைக் கேட்க முடியாது ஆனால், அவர்கள் தாம் (அவர்கள் செய்யும் செயல்கள் பற்றி) கேட்கப்படுவார்கள்.**[21:23]

இது சம்பந்தமாக நபிகள் நாயகம் கூறியதாக இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவித்துள்ளார்கள், *"அல்லாஹ்வின் படைப்பைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள், ஆனால் அல்லாஹ்வைப் பற்றி சிந்திக்க வேண்டாம்."*[24] அல்லாஹ்வின் யதார்த்தத்தைப் பற்றி சிந்திப்பது எல்லையற்றதைப் பற்றி சிந்திப்பதாகும். மேலும், வரையறுக்கப்பட்ட பிரபஞ்சத்தின் வரம்புகள் மற்றும் அதனுள் உள்ள விண்மீன் திரள்கள், நட்சத்திரங்கள் ஆகியவற்றைப் பற்றி சிந்திக்கும் போதே மனித மனம் பிரமிப்பில் தடுமாறுமெனில் படைக்கப் படாததைப் புரிந்து கொள்ள முயற்சிக்கும்போது இன்னும் மனம் குழப்பமடையும். இறைவனைப் பற்றி பதிலளிக்க முடியாத கேள்விகளை எழுப்புவதன் மூலம் விசுவாசிகளின் இதயங்களில் சந்தேகங்களை அறிமுகப்படுத்த சாத்தானிய சக்திகள் முயற்சிக்கும் என்று நபிகளார் எச்சரித்துள்ளார்கள். அல்லாஹ்வின் தூதர் கூறியதாக அபூ ஹுறைறா அவர்கள் அறிவித்துள்ளார்கள், *"சாத்தான் உங்கள் அனைவருக்கும் வந்து கேட்பான்: உங்கள் இறைவனை யார் படைத்தார்கள்? என்று அவர் கேள்வி எழுப்பும் வரை "இதை யார் படைத்தார்கள்?" என்று கேட்டுக்கொண்டே இருப்பான். அவன் வரும்போது, ஒருவர் அல்லாஹ்விடம் அடைக்கலம் தேட வேண்டும். [சொல்லுங்கள்: நான் அல்லாஹ் மீதும் அவனது நபிமார்களிடமும்*

[24] அல் ஹிலியாவில் அபூ நுஅய்ம் சேகரித்துள்ளார். மற்றும் சில்சிலா அல் அஹாதீதில் அல் அல்பானியால் சஹீஹாக அங்கீகரிக்கப்பட்டது. தொகுதி 4 , பக்கம் .12, இல .1788. அல் அவ்சத்தில் தபரானீ மற்றும் ஷுஅப் அல் ஈமானில் அல் பய்ஹக்கி ஆகியோரால் சேகரிக்கப்பட்டு இப்னு உமரிடமிருந்தும் இதே போன்ற விவரங்களும் உள்ளன.

*உள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறேன்,[25] [இதுபோன்ற எண்ணங்களை] தவிர்க்கிறேன்.'[26]*

[25] சஹிஹ் முஸ்லீம், தொகுதி .1, பக்கம்.77, எண். 242 & 243

[26] மே.கு.நூல்- தொகுதி 1, பக்கம் .77, எண் .244 மற்றும் சஹிஹ் அல் புகாரி, தொகுதி 4, பக்கம் .320, எண். 496

## ஏன் இறைவன் மனித இனத்தைப் படைத்தான்?

மனிதகுலத்தின் கண்ணோட்டத்தில், " இறைவன் ஏன் மனிதனைப் படைத்தான்?" எனும் கேள்வி "மனிதன் எந்த நோக்கத்திற்காக படைக்கப்பட்டான்?" என்பதையே குறிக்கிறது. இறுதி வேதத்தில், இந்த கேள்விக்கு எந்த சந்தேகத்தன்மையும் இல்லாமல் பதில் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மனிதனும் உள்ளார்ந்த இறை பிரக்ஞையுடன் பிறக்கிறான் என்பதை இறைவன் முதலிலே மனிதர்களுக்கு அறிவித்து விட்டான். அல் அ'ராஃப் அத்தியாயத்தில் அல்லாஹ் கூறியுள்ளான்,

وَإِذْ أَخَذَ رَبُّكَ مِن بَنِي آدَمَ مِن ظُهُورِهِمْ ذُرِّيَّتَهُمْ وَأَشْهَدَهُمْ عَلَىٰ أَنفُسِهِمْ أَلَسْتُ بِرَبِّكُمْ ۖ قَالُوا بَلَىٰ ۛ شَهِدْنَا ۛ أَن تَقُولُوا يَوْمَ الْقِيَامَةِ إِنَّا كُنَّا عَنْ هَٰذَا غَافِلِينَ

أَوْ تَقُولُوا إِنَّمَا أَشْرَكَ آبَاؤُنَا مِن قَبْلُ وَكُنَّا ذُرِّيَّةً مِّن بَعْدِهِمْ ۖ أَفَتُهْلِكُنَا بِمَا فَعَلَ الْمُبْطِلُونَ

**உம் இறைவன் ஆதமுடைய மக்களின் முதுகுகளிலிருந்து அவர்களுடைய சந்ததிகளை வெளியாக்கி, அவர்களைத் தங்களுக்கே சாட்சியாக வைத்து "நான் உங்களுடைய இறைவன் அல்லவா?" என்று கேட்டதற்கு, அவர்கள் "மெய் தான். நாங்கள் சாட்சி கூறுகிறோம்" என்று கூறியதை (அவர்களுக்கு) நினைவூட்டுவீராக (ஏனெனில் இது நினைவூட்டப்படாததனால்) நிச்சயமாக இதனை (மறந்து) விட்டுப் பாராமுகமாக இருந்து விட்டோம் என்று மறுமை நாளில் நீங்கள் (யாருமே) சொல்லாதிருக்கவும். அல்லது, "இணைவைத்தவர்கள் எல்லாம் எங்களுக்கு முன் இருந்த எங்கள் மூதாதையர்களே நாங்களோ அவர்களுக்குப் பின் வந்த (அவர்களுடைய) சந்ததிகள் - அந்த வழிகெட்டோரின் செயலுக்காக நீ எங்களை அழித்து விடலாமா?" என்று கூறாதிருக்கவுமே! (இதனை நினைவூட்டுகிறோம் என்று நபியே! நீர் கூறுவீராக.) [7:172-3]**

*அல்லாஹ் ஆதாமை படைத்தபோது, 12 ஆம் மாதத்தின் 9 வது நாளில்*[27] *ந'மான் என்ற இடத்தில் ஒரு உடன்படிக்கை செய்தான்* என்று நபிகளார் விளக்கியுள்ளார்கள். பின்னர் அவன் ஆதாமிடமிருந்து அவருடைய சந்ததியினர் அனைவரையும் உலக இறுதி வரை பிறப்போரை, தலைமுறை தலைமுறையாகப் பிரித்தெடுத்தான், அவர்களிடமிருந்தும் ஒரு உடன்படிக்கை எடுக்க அவர்களை அவன் முன் பரப்பினான். அவன் அவர்களை முன்னோக்கிப் பேசினான், அவன்

[27] அரபாத்தின் நாள் என்று அழைக்கப்படுகிறது.

அவர்களுடைய இறைவன் என்பதை அவர்கள் சாட்சியாகக் காட்டினான்.[28] இதன் விளைவாக, ஒவ்வொரு மனிதனும் இறைவனை நம்புவதற்கு பொறுப்பானவன், அது ஒவ்வொரு ஆத்மாவிலும் பதிக்கப்பட்டுள்ளது. இந்த இயல்பான நம்பிக்கையின் அடிப்படையில்தான் அல்லாஹ் மனிதகுலத்தின் படைப்பின் நோக்கத்தை அத்தியாயம் அத் தாரியாத்தில் வரையறுத்தான்:

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنسَ إِلَّا لِيَعْبُدُونِ

**இன்னும், ஜின்களையும்[29] மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை. [51:56]**

இவ்வாறு மனிதகுலம் உருவாக்கப்பட்ட அத்தியாவசிய நோக்கம் இறைவனை வணங்குவதாகும். இருப்பினும், சர்வவல்லமையுள்ளவனுக்கு மனித வழிபாடு தேவையில்லை. அவன் தனது சுயதேவைக்காக மனிதர்களை உருவாக்கவில்லை. ஒரு மனிதனும் இறைவனை வணங்கவில்லை என்றால், அது எந்த வகையிலும் அவனுடைய மகிமையைக் குறைக்காது, எல்லா மனிதர்களும் அவனை வணங்கினால், அது அவனுடைய மகிமையை எந்த வகையிலும் அதிகரிக்காது. இறைவன் பரிபூரணமானவன். அவன் மட்டும் எந்த தேவைகளும் இல்லாமல் இருக்கிறான். படைக்கப்பட்ட அனைத்து மனிதர்களுக்கும் தேவைகள் உள்ளன. இதன் விளைவாக, இறைவனை வணங்க வேண்டியது மனிதகுலம்தான்.

## வழிபாட்டின் பொருள்

மனிதர்கள் ஏன் இறைவனை வணங்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள, முதலில் 'வழிபாடு' என்ற சொல்லின் பொருள் என்ன என்பதை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும். 'வொர்ஷிப்'' என்ற ஆங்கிலச் சொல் 'மரியாதை' என்று பொருள்படும் பழைய ஆங்கில வெர்த்ஸ்ஷிப்பிலிருந்து வந்தது. எனவே, ஆங்கில மொழியில் வழிபாடு என்பது 'ஒரு தெய்வத்தின் நினைவாக செய்யும் பக்திச் செயல்பாடுகள்[30] என்று வரையறுக்கப்படுகிறது. இந்த அர்த்தத்தின்படி, மனிதன்

---

[28] அஹ்மத் சேகரித்து சில்சிலா அல் அஹதீத்தில் சஹீஹாக அங்கீகரிக்கப்பட்டது , தொகுதி 4, பக்கம் .158, எண்.1623

[29] ஜின்கள் என்பது கண்ணுக்கு தெரியாத பகுத்தறிவுள்ள படைப்பினங்களில் ஒரு வர்க்கமாகும். அவை நெருப்பின் உறுப்பிலிருந்து இறைவனால் படைக்கப்பட்டவை. அவை மனிதகுலத்தைப் போலவே இறைவனால் சுதந்திரம் வழங்கப்பட்டவை. இதன் விளைவாக, அவர்களில் சிலர் நீதியுள்ள விசுவாசிகள், மற்றவர்கள் தீய கா.்பிர்கள். அவர்களில் உள்ள தீயவை பொதுவாக பேய்கள், தீய சக்திகள், பிசாசுகள் போன்றவை அழைக்கப்படுகின்றன.

[30] தி லிவிங் வெப்ஸ்டர் என்சைக்ளோபீடியா அகராதி

இறைவனை மகிமைப்படுத்துவதன் மூலம் அவனுக்கு நன்றி தெரிவிக்க அறிவுறுத்தப்படுகிறான். இறுதி வேதத்தில் அந் நஸ்ர் அத்தியாயத்தில், அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

**فَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ**

**உம்முடைய இறைவனின் புகழைக் கொண்டு (துதித்து) தஸ்பீஹு செய்வீராக. [110:3]**

இறைவனை இயற்கையாக மகிமைப்படுத்தும் மற்ற படைப்புகளைப் போல் மனிதனும் இறைவனை மகிமைப்படுத்த விழைகிறான். இந்த நிகழ்வை அல்லாஹ் குர்ஆனின் பல அத்தியாயங்களில் எடுத்துரைக்கிறான். உதாரணமாக, அல் இஸ்ரா அத்தியாயத்தில், அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்:

**تُسَبِّحُ لَهُ السَّمَاوَاتُ السَّبْعُ وَالْأَرْضُ وَمَن فِيهِنَّ ۚ وَإِن مِّن شَيْءٍ إِلَّا يُسَبِّحُ بِحَمْدِهِ وَلَٰكِن لَّا تَفْقَهُونَ تَسْبِيحَهُمْ**

**ஏழு வானங்களும், பூமியும், அவற்றில் உள்ளவர்களும் அவனைத் துதி செய்து கொண்டிருக்கின்றனர்; இன்னும் அவன் புகழைக் கொண்டு துதி செய்யாத பொருள் (எதுவும்) இல்லை[31] எனினும் அவற்றின் துதி செய்வதை நீங்கள் உணர்ந்து கொள்ளமாட்டீர்கள். [17:44]**

இருப்பினும், , இறுதி வேதத்தின் மொழியான அரபியில், வழிபாடு *'இபாதா'* என்று அழைக்கப்படுகிறது, இது *'அப்த்'* என்ற வார்த்தையுடன் நெருங்கிய தொடர்புடையது, அதாவது 'ஒரு அடிமை'. ஒரு அடிமை தன் எஜமானர் விரும்பிய அனைத்தையும் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறான். இதன் விளைவாக, வழிபாடு என்பது இறுதி வேதத்தின் படி, 'கீழ்ப்படிதல் மற்றும் இறைவனின் விருப்பத்திற்கு அடிபணிதல்' என்பதாகும். இதுதான் இறைவன் மனிதகுலத்திற்கு அனுப்பிய அனைத்து இறைத்தூதர்கள் எடுத்தியம்பிய செய்தியின் சாராம்சம். உதாரணமாக, வழிபாட்டைப் பற்றிய இந்த புரிதல் மத்தேயு 7:21, நற்செய்தியில் ஈஸா நபி அவர்களால் உறுதியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. *"என்னை 'ஆண்டவர்' என்று அழைப்பவர்கள் யாரும் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டார்கள், ஆனால் பரலோகத்தில் என் பிதாவின் விருப்பத்தைச் செய்கிறவர் மட்டுமே பிரவேசிப்பார்கள்."* இந்த மேற்கோளில் "விருப்பம்" என்பது 'மனிதர்கள் என்ன செய்ய வேண்டுமென்று இறைவன் விரும்புகிறான்' என்பதாகும். 'இறைவன் மனிதர்களை என்ன செய்ய

[31] இடி 13:13 இல் இறைவனை மகிமைப்படுத்துவதாகவும், 21:20 இல் பகல் மற்றும் இரவு மகிமைப்படுத்துவதாகவும், 38:18 இல் மலைகள் மகிமைப்படுத்துவதாகவும் விவரிக்கப்படுகிறது

அனுமதிக்கிறான்' என்பதல்ல, ஏனென்றால் இறைவனின் விருப்பம் (அனுமதி) இல்லாமல் படைப்பில் எதுவும் நடக்காது. இறைத்தூதர்கள் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு கற்பித்த இறை சட்டங்களில் ' இறைவனின் விருப்பம்' உள்ளது. இதன் விளைவாக, இறை சட்டத்திற்குக் கீழ்ப்படிவதே வழிபாட்டின் அடித்தளமாகும். இந்த அர்த்தத்தில், இறைவனின் மகிமை பற்றிய இறைவனின் அறிவுறுத்தல்களுக்கு மனிதர்கள் கீழ்ப்படிந்து இறைவனை மகிமைப்படுத்துவதும் இறை வழிபாடாக மாறுகிறது.

## வழிபாட்டின் அவசியம்

இறைவனால் இயற்றப்பட்ட சட்டங்களுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் மனிதர்கள் இறைவனை வணங்கி மகிமைப்படுத்த வேண்டியது ஏன்? ஏனென்றால், அல்லாஹ்வின் சட்டத்திற்குக் கீழ்ப்படிவதே இந்த வாழ்க்கையிலும் அடுத்த வாழ்க்கையிலும் வெற்றிக்கு முக்கியமாகும். முதல் மனிதகுலங்கள், ஆதாமும் ஹவ்வாவும் சொர்க்கத்தில் படைக்கப்பட்டனர், பின்னர் இறைவனின் ஆணையை மீறியதற்காக சொர்க்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். மனிதர்கள் சொர்க்கத்திற்கு திரும்புவதற்கான ஒரே வழி, சட்டத்திற்குக் கீழ்ப்படிவதே. ஈஸா நபி அவர்கள், நற்செய்தியில் மத்தேயுவின் படி இறைவனின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிதலை சொர்க்கத்தின் திறவுகோலாகக் கொண்டதாக அறிவித்துள்ளார்: ஒருவன் வந்து அவரை நோக்கி, "நல்ல போதகரே, எனக்கு நித்திய ஜீவன் கிடைக்க நான் என்ன நல்ல காரியத்தைச் செய்ய வேண்டும்?" அதற்கு, அவனை நோக்கி, *"நீ ஏன் என்னை நல்லவன் என்று அழைக்கிறாய்? யாரும் நல்லவர்கள் அல்ல இறைவனைத் தவிர, ஆனால் நீங்கள் வாழ்க்கையில் நுழைய விரும்பினால், கட்டளைகளைக் கடைப்பிடிக்கவும்*" என்று கூறினார்.[32] மத்தேயு 5: 19-ல், இயேசு கிறிஸ்து கட்டளைகளுக்குக் கடுமையான கீழ்ப்படிதலை வலியுறுத்தியதாகக் கூறப்பட்டது, *"ஆகையால், இந்த கட்டளைகளில் ஒன்றை மீறி மனிதர்களுக்குக் கற்பிக்கிறவன் பரலோக ராஜ்யத்தில் சிறுமையானவன் என்று அழைக்கப்படுவான்; கட்டளைகளுக்கு கீழ்படிந்து அவர்களுக்கு கற்றுக்கொடுக்கும்போது, அவர் பரலோகராஜ்யத்தில் பெரியவர் என்று அழைக்கப்படுவார்.*"

இறைவனின் ஆணைகள் மனித வாழ்க்கையின் அனைத்து வழிகளிலும் வழிகாட்டுதலைக் குறிக்கின்றன. அவை அவர்களுக்கான சரி, தவறுகளை வரையறுக்கின்றன. மற்றும் மனிதர்களுக்கு அவர்களின் அனைத்து விவகாரங்களையும் நிர்வகிக்கும் முழுமையான அமைப்பை வழங்குகின்றன. தனது படைப்புக்கு எது நன்மை பயக்கும்; எது நன்மை பயக்காது என்பது படைத்தவனுக்கு மட்டுமே நன்றாக தெரியும். அல்லாஹ்வின் சட்டங்கள் மனித ஆன்மா மனித உடல் மற்றும் மனித சமுதாயத்தை தீங்கிலிருந்து பாதுகாக்க

[32] மத்தேயு 19: 16-17 (ஆர்.எஸ்.வி)

பல்வேறு செயல்களையும் பொருட்களையும் தடை செய்கின்றன. மனிதர்கள் தங்களின் முழுமையான திறனைக் கொண்டு நேர்மையான வாழ்க்கையை வாழ்வதற்கு இறைவனின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அவனை வணங்குவது அவசியமாகிறது.

## இறைவனின் நினைவு

இறை சட்டங்களில் உள்ள பல்வேறு வழிபாட்டுச் செயல்கள் அனைத்தும் மனிதர்கள் இறைவனை நினைவில் கொள்ள உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. மனிதர்கள் சில சமயங்களில் தங்கள் ஆன்மீகத் தேவைகளை மறந்துவிடுவது இயற்கையானது. உண்மையான விசுவாசியின் நாளை ஒழுங்கமைக்க இறைவனின் நினைவைச் சுற்றி வழக்கமான பிரார்த்தனைகள் தொழுகைகள் கடமை ஆக்கப்பட்டிருக்கின்றன. இதன்மூலம் தினசரி அடிப்படையில் பொருள் தேவைகளுடன் ஆன்மீக தேவைகளையும் நிறைவு செய்துகொள்ள முடிகிறது. தினசரி உணவு, வேலை மற்றும் தூக்கத்தைப் போல இறைவனுடனான மனிதனின் தொடர்பும் தினசரி புதுப்பிக்கப்படுகிறது. வழக்கமான பிரார்த்தனையைப் பொறுத்தவரை, அல்லாஹ் இறுதி வேதத்தில், தாஹா அத்தியாயத்தில் கூறுகிறான்:

إِنَّنِي أَنَا اللَّهُ لَا إِلَٰهَ إِلَّا أَنَا فَاعْبُدْنِي وَأَقِمِ الصَّلَاةَ لِذِكْرِي

**"நிச்சயமாக நாம் தான் அல்லாஹ்! என்னைத் தவிர வேறு நாயன் இல்லை, ஆகவே, என்னையே நீர் வணங்கும், என்னை தியானிக்கும் பொருட்டு தொழுகையை நிலைநிறுத்துவீராக. [20:14]**

நோன்பைப் பற்றி அல்லாஹ் பகரா அத்தியாயத்தில் கூறியுள்ளான்:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِينَ مِن قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُونَ

**ஈமான் கொண்டோர்களே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு விதிக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும்(அது) விதிக்கப்பட்டுள்ளது (அதன் மூலம்) நீங்கள் தூய்மையுடையோர் ஆகலாம். [2:183]**

முடிந்தவரை இறைவனை நினைவுகூர விசுவாசிகள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் மிதமான போக்கை கடைப்பிடிக்க வலியுறுத்தும் இறைச்சட்டம் அல்லாஹ்வை நினைவுகூருவது குறித்து ஒரு விதிவிலக்கு அளிக்கிறது. இறைவனை அதிகம் நினைவில் கொள்வது கிட்டத்தட்ட சாத்தியமற்றது. இதன் விளைவாக, இறுதி வேதத்தில், அத்தியாயம்

அல் அஹ்சாப், இறைவன் நம்பிக்கையாளர்களை தன்னை அடிக்கடி நினைவுகூரும்படி ஊக்குவிக்கிறான்

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اذْكُرُوا اللَّهَ ذِكْرًا كَثِيرًا

**ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வை அதிகமதிகமான திக்ரைக் கொண்டு திக்ரு (தியானம்) செய்யுங்கள். [33:41]**

இறைவனை நினைவுகூருவது வலியுறுத்தப்படுகிறது, ஏனென்றால் இறைவனை மறந்துவிட்டால் பாவம் செய்ய மனிதன் உந்தப்படுகிறான். இறைஉணர்வு இழக்கப்படும் போது தீய சக்திகள் மிகவும் சுதந்திரமாக செயல்படுகின்றன. இதன் விளைவாக, சாத்தானிய சக்திகள் தேவையற்ற எண்ணங்கள் மற்றும் கடவுளை மறக்கச் செய்யும் ஆசைகளுடன் மக்களின் மனதை ஆக்கிரமிக்க முயல்கின்றன. இறைவனை மறந்தவுடன், மனிதன் தவறான வழிகளில் செல்ல முனைகிறான். இறுதி வேதமான, குர்ஆன், இந்த நிகழ்வை அத்தியாயம் அல் முஜாதலாவில் பின்வருமாறு குறிப்பிடுகிறது:

اسْتَحْوَذَ عَلَيْهِمُ الشَّيْطَانُ فَأَنسَاهُمْ ذِكْرَ اللَّهِ ۚ أُولَٰئِكَ حِزْبُ الشَّيْطَانِ ۚ أَلَا إِنَّ حِزْبَ الشَّيْطَانِ هُمُ الْخَاسِرُونَ

**அவர்களை ஷைத்தான் மிகைத்து அல்லாஹ்வின் நினைப்பையும் அவர்கள் மறந்து விடுமாறு செய்து விட்டான் - அவர்களே ஷைத்தானின் கூட்டத்தினர், அறிந்து கொள்க: ஷைத்தானின் கூட்டத்தினர் தாம் நிச்சயமாக நஷ்டமடைந்தவர்கள்! [58:19]**

இறைவன், தன் கட்டளையின் மூலம், போதைப்பொருட்களையும் சூதாட்டத்தையும் தடைசெய்தான், ஏனென்றால் மனிதர்கள் இறைவனை மறந்துவிடுவார்கள். மனித மனமும் உடலும் எளிதில் போதைப்பொருட்களுக்கும் சூது விளையாட்டுகளுக்கும் அடிமையாகின்றன. ஒருமுறை அடிமையாகி விட்டால், தொடர்ந்து தூண்டப்பட்டு அவர்களை அனைத்து வகையான தீயசெயல்களுக்கும் வன்முறைகளுக்கும் இட்டுச் செல்கிறது. இறுதி வேதத்தின் அத்தியாயம் அல் மாஇதாவில் இறைவன் கூறுகிறான்:

إِنَّمَا يُرِيدُ الشَّيْطَانُ أَن يُوقِعَ بَيْنَكُمُ الْعَدَاوَةَ وَالْبَغْضَاءَ فِي الْخَمْرِ وَالْمَيْسِرِ وَيَصُدَّكُمْ عَن ذِكْرِ اللَّهِ وَعَنِ الصَّلَاةِ ۖ فَهَلْ أَنتُم مُّنتَهُونَ

**நிச்சயமாக ஷைத்தான் விரும்புவதெல்லாம், மதுபானத்தைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும் உங்களிடையே பகைமையையும், வெறுப்பையும்**

**உண்டு பண்ணி அல்லாஹ்வின் நினைவிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடத்தான். எனவே, அவற்றை விட்டும் நீங்கள் விலகிக் கொள்ள மாட்டீர்களா? [5:91]**

இதன் விளைவாக, மனிதகுலம் தங்கள் சொந்த இரட்சிப்பு மற்றும் வளர்ச்சிக்காக இறைவனை நினைவில் கொள்ள வேண்டும். எல்லா மனிதர்களுக்கும் பலவீனங்கள் உள்ளன, அதில் அவர்கள் பாவங்களைச் செய்கிறார்கள். இறைவனை நினைவில் கொள்ள அவர்களுக்கு வழி இல்லை என்றால், அவர்கள் ஒவ்வொரு பாவத்திலும் ஆழமாகவும் மூழ்கிவிடுகிறார்கள். இருப்பினும், இறைவனின் சட்டங்களைப் பின்பற்றுபவர்கள் இறைவனைத் தொடர்ந்து நினைவுகூருவார்கள், இது மனந்திரும்பவும் தங்களைத் திருத்தவும் வாய்ப்பளிக்கும். இறுதி வேதம் இந்த செயல்முறையை அத்தியாயம் ஆல் இம்ரானில் துல்லியமாக விவரிக்கிறது:

وَالَّذِينَ إِذَا فَعَلُوا فَاحِشَةً أَوْ ظَلَمُوا أَنفُسَهُمْ ذَكَرُوا اللَّهَ فَاسْتَغْفَرُوا لِذُنُوبِهِمْ وَمَن يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا اللَّهُ وَلَمْ يُصِرُّوا عَلَىٰ مَا فَعَلُوا وَهُمْ يَعْلَمُونَ

**தவிர, மானக் கேடான ஏதேனும் ஒரு செயலை அவர்கள் செய்துவிட்டாலும், அல்லது (ஏதேனும் பாவத்தினால்) தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டாலும். உடனே அவர்கள் (மனப்பூர்வமாக) அல்லாஹ்வை நினைத்து தங்கள் பாவங்களுக்காக மன்னிப்புத் தேடுவார்கள்;. அல்லாஹ்வைத் தவிர வேறு யார் பாவங்களை மன்னிக்க முடியும்? மேலும், அவர்கள் அறிந்து கொண்டே தங்கள் (பாவ) காரியங்களில் தரிபட்டிருந்து விடமாட்டார்கள். [3:135]**

## இஸ்லாம் மார்க்கம்

மனிதகுலத்திற்கு அளிக்கப்பட்டுள்ள மிக முழுமையான வழிபாட்டு நெறிமுறை, இஸ்லாம் மார்க்கம் கூறும் வழிபாட்டு நெறிமுறை தான். 'இஸ்லாம்' என்ற பெயருக்கு ‘இறைவனின் விருப்பத்திற்கு அடிபணிதல்' என்பது பொருளாகும். பொதுவாக இஸ்லாம் மார்க்கம் ‘மூன்று ஏகத்துவ நம்பிக்கைகளுள் மூன்றாவது நம்பிக்கை' என்று குறிப்பிடப்பட்டாலும், இது ஒரு புதிய மார்க்கம் அல்ல. இறைவனின் நபிமார்கள் அனைவருமே மனிதகுலத்திற்காக கொண்டு வந்த மார்க்கம் இது. இஸ்லாம் என்பது ஆதாம், இப்ராஹிம், மூஸா மற்றும் ஈசாவின் மார்க்கம். இறைவன் குர்ஆனில், இப்ராஹிம் நபி குறித்து எடுத்துரைக்கிறான்:

مَا كَانَ إِبْرَٰهِيمُ يَهُودِيًّا وَلَا نَصْرَانِيًّا وَلَـٰكِن كَانَ حَنِيفًا مُّسْلِمًا وَمَا كَانَ مِنَ ٱلْمُشْرِكِين.

**இப்ராஹீம் யூதராகவோ, அல்லது கிறிஸ்தவராகவோ இருக்கவில்லை. ஆனால் அவர் (அல்லாஹ்விடம்) முற்றிலும் (சரணடைந்த) நேர்மையான**

**முஸ்லிமாக இருந்தார்;. அவர் முஷ்ரிக்குகளில் (இணைவைப்போரில்) ஒருவராக இருக்கவில்லை. குர்ஆன் 3: 67.**

ஒரே இறைவன் மட்டும் இருப்பதாலும், மனிதகுலம் ஒரே இனமாய் இருப்பதாலும், இறைவன் மனிதனுக்காக நிர்ணயித்த மதமும் ஒன்று தான். யூதர்களுக்கு ஒரு மதம், இந்தியர்களுக்கு ஒரு மதம், ஐரோப்பியர்களுக்கு ஒரு மதம் என்று பரிந்துரைக்கவில்லை. எல்லா மனிதருக்கும் ஆன்மீக மற்றும் சமூகத் தேவைகள் ஒரே மாதிரியானவை, முதல் மனிதனும் பெண்ணும் படைக்கப்பட்டதிலிருந்து மனித இயல்பு மாறவில்லை. இதன் விளைவாக, இறைவனால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரே மார்க்கமாக இஸ்லாம் விளங்குகிறது. இது குறித்து ஆல்-இம்ரான் அத்தியாயத்தில் அல்லாஹ் தெளிவாகக் கூறுகிறான்:

**إِنَّ ٱلدِّينَ عِندَ ٱللَّهِ ٱلْإِسْلَـٰمُ.**

**நிச்சயமாக (தீனுல்) இஸ்லாம் தான் அல்லாஹ்விடத்தில் (ஒப்புக்கொள்ளப்பட்ட) மார்க்கமாகும். குர்ஆன் 3: 19.**

**وَمَن يَبْتَغِ غَيْرَ ٱلْإِسْلَـٰمِ دِينًا فَلَن يُقْبَلَ مِنْهُ وَهُوَ فِى ٱلْـَٔاخِرَةِ مِنَ ٱلْخَـٰسِرِينَ**

**இன்னும் இஸ்லாம் அல்லாத (வேறு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் (அது) ஒருபோதும் அவரிடமிருந்து ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது. மேலும் அ(த்தகைய)வர் மறுமை நாளில் நஷ்டமடைந்தோரில் தான் இருப்பார். குர்ஆன் 3: 85.**

## ஒவ்வொரு செயலும் வழிபாடாகும்

இஸ்லாமிய மார்க்கத்தில், ஒவ்வொரு செயலையும் வழிபாட்டு செயலாக மாற்ற முடியும். உண்மையில், விசுவாசிகள் தங்கள் முழு வாழ்க்கையையும் அவனுக்காக அர்ப்பணிக்கும்படி இறைவன் கட்டளையிடுகிறான். அல்-அன்ஆம் என்ற அத்தியாயத்தில் கூறுகிறான்:

**قُلْ إِنَّ صَلَاتِى وَنُسُكِى وَمَحْيَاىَ وَمَمَاتِى لِلَّهِ رَبِّ ٱلْعَـٰلَمِينَ.**

**நீர் கூறும்; "மெய்யாக என்னுடைய தொழுகையும், என்னுடைய குர்பானியும், என்னுடைய வாழ்வும், என்னுடைய மரணமும் எல்லாமே அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே சொந்தமாகும். குர்ஆன் 6:162.**

இருப்பினும், அந்த அர்ப்பணிப்பு அல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளப் படுவதற்கு ஒவ்வொரு செயலும் இரண்டு அடிப்படை நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்:

**1**. முதலாவதாக, இந்த செயல் இறைவனின் மகிழ்ச்சிக்காக நேர்மையாக செய்யப்பட வேண்டும். மனிதர்களால் அங்கீகரிக்கப்படுவதற்கும், புகழப்படுவதற்கும் அல்ல. ஒரு செயலைச் செய்யும்போது இறைநம்பிக்கையாளர் இறைவனைப் பற்றி விழிப்புடன் இருந்து, அந்த செயல் அல்லாஹ் அல்லது இறுதித்தூதர் (ஸல்) அவர்களால் தடைசெய்யப்பட்ட ஒன்றல்ல என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வுலக வாழ்வில் தினசரி செய்யும் செயல்களை வழிபாடாக மாற்றுவதற்கு, ஒவ்வொரு எளிமையான செயல்களுக்கும் முன்பு சொல்லப்பட வேண்டிய குறுகிய பிரார்த்தனைகளை இறுதித் தூதர் அவர்களை இறைநம்பிக்கையாளர்களுக்கு பயிற்றுவிக்கும் படி அல்லாஹ் அறிவுறுத்தினான். எந்தவொரு சூழ்நிலையிலும் பயன்படுத்தக்கூடிய குறுகிய பிரார்த்தனை:

**بِسْمِ اللّٰهِ** பிஸ்மில்லாஹ் (அல்லாஹ்வின் பெயரால்). இருப்பினும், குறிப்பிட்ட சந்தர்ப்பங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட பல பிரார்த்தனைகள் உள்ளன. உதாரணமாக, ஒரு புதிய ஆடை அணிந்த போதெல்லாம், நபி (ஸல்) தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு இதைக் கற்பித்தார்கள்,

اللَّهُمَّ لَكَ الْحَمْدُ أَنْتَ كَسَوْتَنِيهِ، أَسْأَلُكَ مِنْ خَيْرِهِ وَخَيْرِ مَا صُنِعَ لَهُ، وَأَعُوذُ بِكَ مِنْ شَرِّهِ وَشَرِّ مَا صُنِعَ لَهُ.

*அல்லாஹ்வே, எல்லா புகழும் உனக்கு உரியது, நீ என்னை அலங்கரித்ததைப் போலவே, அதன் நன்மைக்காகவும், அது தயாரிக்கப்பட்டவற்றின் நன்மைக்காகவும் நான் கேட்கிறேன், அதன் தீமை மற்றும் அது செய்யப்பட்டவற்றின் தீமை ஆகியவற்றிலிருந்து உன் பாதுகாப்பை நான் தேடுகிறேன்.*[33]

**2** இரண்டாவது நிபந்தனை என்னவென்றால், அரபு மொழியில் சுன்னத் என்று அழைக்கப்படும் நபித்துவ வழிக்கு ஏற்ப இந்த செயல் செய்யப்பட வேண்டும். நபிமார்கள் அனைவரும் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு, அவர்களுடைய வழியைப் பின்பற்றும்படி அறிவுறுத்தினார்கள், ஏனெனில் இறைத்தூதர்களுடைய வழி இறைவனால் அறிவிக்கப்பட்ட வழியாகும். அவர்களால் கற்பிக்கப்பட்ட ஒவ்வொரு சொல்லும் செயலும் இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்கள். அவர்களுடைய வழியைப் பின்பற்றி சத்தியத்தை ஏற்றுக்கொள்பவர்கள் மட்டுமே சொர்க்கத்தில் நிலையான வாழ்வைப் பெறுவார்கள். இதைத்தான், ஈஸா நபி, (இறைவனின் சாந்தியும் சமாதானமும் அவர் மீது நிலவட்டுமாக)கூறியதாக பரிசுத்த வேதாகமம் யோவான் 14:6-ல், *“நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்;*

---

[33] சுனன் அபு தாவூத், தொகுதி. 3. பக். 125. எண். 4009 மற்றும் அங்கீகரிக்கப்பட்டது- சுனன் அபீ தாவூத், தொகுதி. 2. பக். 760. எண் .3393.

*என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்."* என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல், 'அப்துல்லா இப்னு மசூத்(ரழி) கூறினார், ஒரு நாள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புழுதித்தரையில் ஒரு கோடு வரைந்து, *"இது அல்லாஹ்வின் பாதை."* பின்னர் அவர் பல கோடுகளை [கிளைத்து] வலது மற்றும் இடதுபுறமாக வரைந்து, *"இவை ஒவ்வொன்றும் [வழிகேட்டின்] பாதைகள், அவற்றைப் பின்பற்றுமாறு இப்லீஸ் மனிதர்களை அழைக்கிறான்" என்று கூறினார்.* பின்னர் அவர் இவ்வசனத்தை ஓதினார்: **நிச்சயமாக இதுவே என்னுடைய நேரான வழியாகும்; ஆகவே இதனையே பின்பற்றுங்கள் - இதர வழிகளை நீங்கள் பின்பற்ற வேண்டாம் - அவை உங்களை அவனுடைய வழியைவிட்டுப் பிரித்துவிடும்; நீங்கள் (நேர் வழியைப் பின்பற்றி) பயபக்தியுடையவர்களாக இருப்பதற்கு இவ்வாறு அவன் உங்களுக்கு போதிக்கிறான்.**[34],[35] இவ்வாறு, இறைவனை வணங்குவதற்கான ஒரே வழி நபிமார்களின் வழியே. அப்படியானால், மார்க்க விவகாரங்களில் புதுமை என்பது எல்லா தீமைகளிலும் மோசமானதாக இறைவனால் கருதப்படுகிறது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது, *"எல்லா காரியங்களிலும் மோசமானது மார்க்கத்தில் இல்லாத புதுமைமை புகுத்துவதாகும். ஏனென்றால் ஒவ்வொரு புகுத்தப்பட்ட புதுமையும் சபிக்கப்பட்டதாகும். அவை நரக நெருப்புக்கு இட்டுச்செல்லும்."*[36]

மார்க்கத்தில் புதுமை என்பது தடைசெய்யப்பட்டதும், இறைவனால் ஏற்றுக்கொள்ள முடியாததும் ஆகும். நபி (ஸல்) அவர்களின் மனைவி ஆயிஷா(ரழி) அவர்கள், *"நம்முடைய இந்த (மார்க்க) விவகாரத்தில் அதில் இல்லாததைப் புதிதாக எவன் உண்டாக்குகிறானோ அவனுடைய அந்தப் புதுமை நிராகரிக்கப்பட்டதாகும்"* என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள்.[37]

முந்தைய நபிமார்களின் இறைச்செய்திகள் சிதைக்கப்பட்டதற்கும், இன்றுள்ள பல தவறான மதங்கள் உருவாகியுள்ளதற்கும் இத்தகைய புகுத்தப்பட்ட திணிக்கப்பட்ட புதுமைகளே காரணம். இறைவனால் குறிப்பாக பரிந்துரைக்கப்பட்ட நெறிமுறைகள் மற்றும் இறைவனின் உண்மையான தூதர்களால் மனிதர்களுக்கு அனுப்பப்பட்ட வழிபாட்டு முறைகளைத் தவிர, மற்ற எல்லா வகையான வழிபாட்டு முறைகளும் தடைசெய்யப்படுவதே, மார்க்கத்தில் புதுமைகளைத் தவிர்ப்பதற்கான வழியாகும்.

---

[34] ஸூரா அல் அன்ஆம் 6: 153.
[35] அஹ்மத் அன்-நஸாஈ மற்றும் அத் தாரிமீயால் சேகரிக்கப்பட்டது. மற்றும் அல்-முஸ்னத்தில் அஹ்மட் ஷாகிர் அங்கீகரித்தார், தொகுதி 6. பக். 89-90. எண். 4142.
[36] சஹீஹ் முஸ்லீம், தொகுதி. 2. பக். 410, எண். 1885.
[37] சஹீஹ் அல் புகாரி தொகுதி. 3. பக். 535-எண். 861. மற்றும் சஹீஹ் முஸ்லிம், தொகுதி. 3. பக். 931. எண். 4266.

## படைப்பில் சிறந்தது

கூட்டாளிகள் அல்லது சந்ததியினர் இல்லாமல், ஒரு தனித்துவமான ஏக இறைவனை நம்புபவர்களும், நீதியுள்ள செயல்களைச் செய்பவர்களும் [மேலே குறிப்பிட்ட கொள்கைகளின்படி] படைப்பினங்களில் மகுடமாக விளங்குகிறார்கள். அதாவது, மனிதகுலம் அல்லாஹ்வின் மிகப் பெரிய படைப்பு அல்ல என்றாலும், அவனுடைய படைப்பில் மிகச் சிறந்தவனாக ஆவதற்கான ஆற்றல் அவர்களுக்கு உண்டு. அத்தியாயம் அல்-பய்யினாவில், அல்லாஹ் இந்த உண்மையை பின்வருமாறு கூறுகிறான்;

إِنَّ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ أُولَٰئِكَ هُمْ خَيْرُ الْبَرِيَّةِ

**நிச்சயமாக, எவர்கள் ஈமான் கொண்டு, ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்கிறார்களோ, அவர்கள் தாம் படைப்புகளில் மிக மேலானவர்கள் ஆவார்கள். குர்ஆன் 98:6.**

## மிகப்பெரிய பாவம்

ஒரு மனிதன் செய்யக்கூடிய மிகப்பெரிய தீமை, தான் படைக்கப்பட்டதன் நோக்கத்திற்கு முரணாக செயல்படுவதே. அல்லாஹ்வின் பார்வையில் மிகப் பெரிய பாவம் எது என்று அல்லாஹ்வின் தூதரிடம் (ஸல்) கேட்டதற்கு, "*உன்னைப் படைத்த இறைவனுக்கு இணை வைப்பதுதான்*"[38] என்று பதிலுரைத்ததாக அப்துல்லாஹ்(ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். இறைவனைத் தவிர மற்றவர்களை வணங்குவது, அரபு மொழியில் ஷிர்க் என்று அழைக்கப்படுகிறது. அதுவே இறைவனால் மன்னிக்க முடியாத ஒரே பாவமாகும். ஒரு மனிதன் அவன் செய்த பாவங்களிலிருந்து மனந்திரும்பாமல் இறந்துவிட்டால், ஷிர்க் தவிர அவன் செய்த எல்லா பாவங்களையும் அல்லாஹ் மன்னிக்கக்கூடும். இது சம்பந்தமாக, இறைவன் அன்-நிஸா அத்தியாயத்தில் பின்வருமாறு கூறுகிறான்:

إِنَّ اللَّهَ لَا يَغْفِرُ أَن يُشْرَكَ بِهِ وَيَغْفِرُ مَا دُونَ ذَٰلِكَ لِمَن يَشَاءُ

**நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கமாட்டான்;. இதைத்தவிர, (மற்ற) எதையும் தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான். குர்ஆன் 4:48.**

இறைவனைத் தவிர மற்றவர்களை வணங்குவது, இறைவனின் பண்புகளை அவனுடைய படைப்புக்கு வழங்குவதாக ஆகிவிடுகிறது. ஒவ்வொரு பிரிவும் அல்லது மதமும் இதை குறிப்பிட்ட வழியில் செய்கின்றன. காலங்காலமாக

---

[38] ஸஹீஹ் முஸ்லிம் தொகுதி 1 ப. 50-1 இல்.156

ஒரு சிறிய மக்கள் குழு, கடவுளின் இருப்பை மிக அழுத்தமாக மறுத்து வருகிறது.[39] இறை இருப்பை நிராகரிக்கும் அவர்கள் அதனை நியாயப்படுத்த, இந்த உலகத்திற்கு தொடக்கம் இல்லை என்ற நியாயமற்ற கூற்றை முன்வைக்கிறார்கள். உலகில் காணக்கூடிய பொருட்கள் யாவற்றுக்கும் தொடக்கம் இருப்பதைப் போல எண்ணிலடங்காத பொருட்களால் ஆன மொத்த பிரபஞ்சத்திற்கும் தொடக்கம் உறுதியாக இருக்கும். இதனை மறுக்கும் நாத்திகர்களின் கூற்று நியாயமற்றது. உலகம் உருவானதற்கு காரணம் எதுவாக இருந்தாலும் அது உலகத்தின் ஒரு பகுதியாக இருந்திருக்காது அல்லது உலகத்தைப் போல ஒரு தொடக்கத்தையும் கொண்டிருக்க முடியாது என்பது தர்க்கரீதியான உண்மை. உலகத்திற்கு ஆரம்பம் இல்லை என்று நாத்திகர்கள் கூறுவதன் அர்த்தம் பிரபஞ்சம் படைக்கப்படவில்லை; அது என்றுமே நிலைத்திருப்பது நித்தியமானது என்பதாகும். இந்த கருத்து ஷிர்க் ஆகும். இதன் மூலம் ஆரம்பம் இல்லாமல் இருப்பது என்ற இறைவனின் பண்பு அவனுடைய படைப்பாகிய பிரபஞ்சத்திற்கு வழங்கப்படுகிறது. உண்மையான நாத்திகர்களின் எண்ணிக்கை வரலாற்று ரீதியாக எப்போதுமே மிகக் குறைவாகவே உள்ளது, ஏனென்றால் அவர்களின் கூற்றுகள், நிலைப்பாடுகள் வேறாக இருந்தபோதிலும், இறைவன் இருக்கிறான் என்பதை அவர்கள் இயல்பாகவே அறிவார்கள். அதாவது, பல தசாப்த கால கம்யூனிச போதனை இருந்தபோதிலும், பெரும்பான்மையான ரஷ்யர்கள் மற்றும் சீனர்கள் தொடர்ந்து கடவுளை நம்பினர். சர்வவல்லமையுள்ள படைப்பாளன் இந்த நிகழ்வை அத்தியாயம் அன்-நம்லில் சுட்டிக்காட்டினான்:

وَجَحَدُوا بِهَا وَاسْتَيْقَنَتْهَا أَنفُسُهُمْ ظُلْمًا وَعُلُوًّا

**அவர்களுடைய உள்ளங்கள் அவற்றை (உண்மையென) உறுதி கொண்ட போதிலும், அநியாயமாகவும், பெருமை கொண்டவர்களாகவும் அவர்கள் அவற்றை மறுத்தார்கள். குர்ஆன் 27:14.**

நாத்திகர்கள் மற்றும் பொருள்முதல்வாதிகளுக்கு, ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதை தவிர வேறு எந்த நோக்கமும் வாழ்வில் இல்லை. இதன் விளைவாக, ஓரிறைவனை நம்பாமல் அவனுக்கு கட்டுப்படாமல் வாழும் அவர்கள், தங்களுடைய ஆசைகளையே தாங்கள் அடிபணியும் கடவுளாக

[39] ஹினயானா புத்தமதம் (கிமு 400-250). கவுதம புத்தரின் மரணத்திற்குப் பிறகு எழுந்த புத்தமதத்தின் இரண்டு விளக்கங்களில் கடவுள் இல்லை என்று தெளிவாக கூறுகிறது. சமண மதம் வரதமனால் முறைப்படுத்தப்பட்டது, கடவுள் இல்லை, ஆனால் விடுவிக்கப்பட்ட ஆன்மாக்களை வலியுறுத்துகிறது. போதனைகளின்படி அழியாத தன்மை மற்றும் சர்வ அறிவை அடையுங்கள். 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில் பல ஐரோப்பிய தத்துவவாதிகள் “கடவுள்; தத்துவத்தின் மரணம்” என்று அறிவித்தனர். பிலிப் மெயின்லேண்டர் (1841-1876), பிரஷ்யன். பிரெட்ரிக் நீட்சே (1844-1900), பிரெஞ்சுக்காரர். ஜீன் பால் சார்த்ரே (1905-1980) அனைவரும் கடவுள் இல்லை என்று வாதிட்டனர். (தத்துவம் மற்றும் மதத்தின் அகராதி. பக். 72.262-3.327 மற்றும் 508-9).

ஆக்கிக் கொள்கிறார்கள். இறுதி வேதத்தில் அல்-ஃபுர்கான் அத்தியாயத்தில், அல்லாஹ் கூறுகிறான்:

أَرَأَيْتَ مَنِ اتَّخَذَ إِلَٰهَهُ هَوَا

**தன் (இழிவான) இச்சையையே தன் தெய்வமாக எடுத்துக் கொண்டவனை (நபியே!) நீர் பார்த்தீரா? குர்ஆன் 25:43**

கிறிஸ்தவர்கள் ஈஸா நபியை முதலில் கடவுளுடன் இணைந்தவராக ஆக்கி, பின்னர் அவரை கடவுளின் ஆளுமை ஆக்கி 'கடவுளின் மகன்' ஆக்கினர். மறுபுறம், இறைவன் ஒவ்வொரு காலத்திலும் மனிதனாக அவதாரம் எடுப்பதாக இந்துக்கள் நம்புகிறார்கள், பின்னர் அவர்கள் இறைவனின் பண்புகளை மூன்றாக பிரித்து மூன்று கடவுள்களாக பிரம்மாவையும்(படைத்தல்), விஷ்ணுவையும்(காத்தல்) மற்றும் சிவனனையும்(அழித்தல்) வழிபடுகின்றனர்.

## இறைவனின் அன்பு

அல்லாஹ்வை[40] விட மனிதர்கள் சக மனிதர்களை அல்லது மற்ற படைப்புகளை நேசிக்கும்போது, நம்பும்போது அல்லது பயப்படும்போது ஷிர்க் ஏற்படுகிறது. இறுதி வேதத்தின் அத்தியாயம் அல் பகராவில், இறைவன் கூறுகிறான்:

وَمِنَ النَّاسِ مَن يَتَّخِذُ مِن دُونِ اللَّهِ أَندَادًا يُحِبُّونَهُمْ كَحُبِّ اللَّهِ ۖ وَالَّذِينَ آمَنُوا أَشَدُّ حُبًّا لِّلَّهِ

**அல்லாஹ் அல்லாதவர்களை அவனுக்கு இணையாக வைத்துக் கொண்டு, அவர்களை அல்லாஹ்வை நேசிப்பதற்கொப்ப நேசிப்போரும் மனிதர்களில் இருக்கிறார்கள்;. ஆனால் நம்பிக்கை கொண்டவர்கள் அல்லாஹ்வை நேசிப்பதில் உறுதியான நிலையுள்ளவர்கள். குர்ஆன் 2:165.**

நேசம் நம்பிக்கை பயம் போன்ற உணர்வுகள் இறைவன் படைத்த மனிதர்களுக்கிடையில் மிகவும் அதிகமாக வெளிப்படும்போது, சக மனிதர்களை திருப்தி படுத்தும் முயற்சியில் பெரும்பாலான மனிதர்கள் இறைவனுக்கு கீழ்ப்படியாமல் இருந்துவிடுகிறார்கள். எவ்வாறாயினும், அல்லாஹ் மட்டுமே முழுமையான மனித உணர்வுகளின் அர்ப்பணிப்புக்கு தகுதியானவன். எனவே அவனை மட்டுமே அனைத்து படைப்புகளும் நேசிக்க வேண்டும்; அவனுக்கே பயப்பட வேண்டும். அனஸ் இப்னு மாலிக்(ரழி) அவர்கள் கூறியதாவது, நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், "*பின்வரும் மூன்று குணாதிசயங்களைக்*

---

[40] ஜான் I: 1 & 14 ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது;
அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்.(RSV )

*கொண்டவர் நம்பிக்கையின் இனிமையைச் சுவைத்திருப்பார்:* ***அல்லாஹ்வையும் அவனது தூதரையும் எல்லாவற்றிற்கும் மேலாக நேசிக்கிறார்****; அல்லாஹ்வுக்காக மட்டுமே இன்னொரு மனிதரை நேசிக்கிறார்; மேலும் தான் நெருப்பிற்குள் எறியப்படுவதை வெறுப்பது போல அல்லாஹ் நேர்வழி தந்து காப்பாற்றிய பிறகு இறைமறுப்புக்கு திரும்புவதை வெறுப்பவன்."*[41]

மனிதர்கள் மற்ற மனிதர்களை நேசிப்பதற்கும் அல்லது மற்ற படைப்புகளை நேசிப்பதற்கும் முழுமுதல் காரணம் இறைவனே. எனவே யாவற்றையும் படைத்த இறைவனை எல்லாவற்றையும் விட அதிகமாக நேசிக்க வேண்டும். மனிதர்கள் வாழ்க்கையையும் வெற்றியையும் விரும்புகிறார்கள், மரணம் மற்றும் தோல்வியை விரும்புவதில்லை. வாழ்க்கை மற்றும் வெற்றியின் அடிப்படைக் காரணம் அல்லாஹ் என்பதால், அவனே மனிதகுலத்தின் முழு அன்பிற்கும் வணக்கத்திற்கும் தகுதியானவன். மனிதர்களும் தங்களுக்கு நன்மை செய்பவர்களை நேசிக்கிறார்கள் மற்றும் தேவைப்படும்போது அவர்களுக்கு உதவுகிறார்கள். எல்லா நன்மைகளும் (7: 188) மற்றும் உதவிகளும் (3: 126) இறைவனிடமிருந்து வருவதால், அவன் எல்லாவற்றிற்கும் மேலாக நேசிக்கப்பட வேண்டும்.

**وَإِن تَعُدُّوا نِعْمَتَ اللَّهِ لَا تُحْصُوهَا**

**அல்லாஹ்வின் அருட்கொடைகளை நீங்கள் கணிப்பீர்களாயின் அவற்றை நீங்கள் எண்ணி முடியாது! குர்ஆன் 14:34.**

இருப்பினும், இறைவன் மீது மனிதர்கள் உணர வேண்டிய உயர்ந்த அன்பு, படைப்பு மீதான அவர்களின் உணர்ச்சி ரீதியான அன்பின் பொதுவான அடையாளமாக குறைக்கப்படக்கூடாது. விலங்குகள் மீது மனிதர்கள் உணரும் அன்பு மற்ற மனிதர்கள் மீது உணருவது போலவே இருக்கக்கூடாது[42]. அல்லாஹ்வின் மீதான அன்பு மனிதர்கள் ஒருவருக்கொருவர் உணரும் அன்பை மீற வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு முழுமையான அடிபணிவதன் மூலமே அல்லாஹ்வின் மீதான அன்பை வெளிப்படுத்த வேண்டும். அத்தியாயம் ஆல் இம்ரானில் கூறப்படுகிறது; **"நீங்கள் அல்லாஹ்வை நேசிக்கிறீர்கள் என்றால், என்னைப் [நபி] பின்பற்றுங்கள், அல்லாஹ் உங்களை நேசிப்பான்."**[43] இது ஒரு சுருக்கமான கருத்து அல்ல, ஏனென்றால் சக மனிதர்களின் மீதான அன்பிலும் கீழ்ப்படிதல் உள்ளது. அதாவது, அன்புக்குரிய ஒருவர் ஏதாவது செய்ய வேண்டும் என்று கோரினால்,

---

[41] சஹீஹ் முஸ்லீம், தொகுதி. 1. பக். 30, எண். 67.

[42] 20 வது நூற்றாண்டின் பெரும் குற்றங்களில் ஒன்றாக இருப்பது, மனிதர்கள் பட்டினி கிடந்து நோயால் இறக்கும்போது அவர்களை காப்பாற்றாமல் அழிந்து வரும் விலங்குகளின் பாதுகாப்பிற்காக தற்போது பெரும் தொகை செலவிடப்படுவது.

[43] குர்ஆன் 3:31.

மனிதர்கள் அந்த நபர் மீதான அவர்களின் அன்பின் அளவிற்கு ஏற்ப அதைச் செய்ய முயற்சிப்பார்கள்.

இறைவனை நேசிப்பவர்களின் அன்பிலும் இறைவனின் அன்பு வெளிப்படுத்தப்பட வேண்டும். அல்லாஹ்வை நேசிப்பவர் அல்லாஹ் நேசிப்பவர்களை வெறுக்கக்கூடாது. அல்லாஹ் வெறுப்பவர்களை நேசிக்க கூடாது. அபூ உமாமா(ரழி) அறிவிக்கிறார்கள் நபிகள் நாயகம் (ஸல்) கூறியதாக *"அல்லாஹ்வை நேசிப்பவர் மற்றும் அல்லாஹ்வுக்காக வெறுப்பவர், அல்லாஹ்வுக்காகக் கொடுப்பவர் மற்றும் அல்லாஹ்விற்காகத் தடுப்பவர் தனது நம்பிக்கையை முழுமையாக்கினார்."*[44] இதன் விளைவாக, நம்பிக்கை உள்ளவர்கள் இறைவனை நேசிக்கும் அனைவரையும் நேசிப்பார்கள். மரியம் அத்தியாயத்தில், நேர்மையாளர்களுக்காக அல்லாஹ் விசுவாசிகளின் இதயத்தில் அன்பை வைப்பதாக குறிப்பிடுகிறான்.

**إِنَّ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ سَيَجْعَلُ لَهُمُ الرَّحْمَٰنُ وُدًّا**

**நிச்சயமாக எவர்கள் ஈமான் கொண்டு (ஸாலிஹான-) நல்ல செயல்களைச் செய்கின்றார்களோ அவர்களுக்கு அர்ரஹ்மான் (யாவரின்) நேசத்தை ஏற்படுத்துவான். குர்ஆன் 19:96.**

இது தொடர்பாக அல்லாஹ்வின் தூதர் (ஸல்) பின்வருமாறு கூறியதாக அபூ ஹுரைரா(ரழி) அறிவிக்கிறார்கள், "*ஒரு அடியானை அல்லாஹ் நேசித்தால், அவன் வானவர் ஜிப்ரயீல் (அலை) அவர்களுக்கு, தான் இன்னாரை நேசிப்பதாகவும், அதனால் அவரும் அந்த நபரை நேசிக்க வேண்டும் என்று தெரிவிக்கிறான். இதனால் ஜிப்ரயீல் (அலை) அவர்களும் அந்த நபரை நேசிப்பார்கள். பிறகு ஜிப்ரயீல் (அலை), சுவர்க்கத்தில் வசிக்கும் அனைவரையும் அழைத்து அல்லாஹ் இன்னாரை நேசிக்கிறான், ஆகவே நீங்களும் அந்த நபரை நேசியுங்கள் என்று கூறுவார். அதனால் சுவர்க்கத்தில் வசிக்கும் அனைவரும் அவரை நேசிப்பார்கள். பின்பு பூமியில் வசிக்கும் அனைவரின் அன்பும் அவருக்கு வந்தடையும்."*[45]

## தொழுகை

தொழுகை இறைவனுக்காக மட்டுமே செயல் படுத்தப்பட வேண்டும், ஏனெனில் இறைவனால் மட்டுமே தொழுகைக்கு பதிலளிக்க முடியும். இறைவனை

[44] அஹ்மத், அத்-திர்மிதீ மற்றும் அபூ தாவூத் (சுனன் அபு தாவூத், தொகுதி 3. ப. 1312, எண். 3664 மற்றும் சஹீஹ் சுனன் அபீ தாவூத், தொகுதி. 3, ப. 886. எண். 3915 இல் அங்கீகரிக்கப்பட்டது

[45] சஹீஹ் அல் புகாரி தொகுதி. 4. பக். 291- எண். 431. மற்றும் சஹீஹ் முஸ்லிம், தொகுதி. 4. பக். 1385. எண். 6373.

மனமுருகி உண்மையாக அழைக்கும் வரை நிச்சயமாக அவனை அணுக முடியும்.

وَإِذَا سَأَلَكَ عِبَادِي عَنِّي فَإِنِّي قَرِيبٌ ۖ أُجِيبُ دَعْوَةَ الدَّاعِ إِذَا دَعَانِ

**(நபியே!) என் அடியார்கள் என்னைப்பற்றி உம்மிடம் கேட்டால்; "நிச்சயமாக நான் சமீபமாகவே இருக்கிறேன், பிரார்த்தனை செய்பவரின் பிரார்த்தனைக்கு அவர் பிரார்த்தித்தால் விடையளிக்கிறேன்; அவர்கள் என்னிடமே(பிரார்த்தித்துக்) கேட்கட்டும்; குர்ஆன் 2:186.**

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "*நீங்கள் தொழுகையில் கேட்டால், அல்லாஹ்விடம் மட்டும் கேளுங்கள், நீங்கள் உதவியை நாடினால், அதை அல்லாஹ்விடம் மட்டும் தேடுங்கள்*"[46] என்று கூறினார்கள். இவ்வாறு, மனிதர்களிடமோ அல்லது மனிதர்கள் மூலமாகவோ, இறந்தவர்கள் அல்லது உயிருடன் இருப்பவர்களை தொழுவது ஷிர்க்கின் வடிவமாகும். தொழுகையும் பிரார்த்தனையும் யாருக்கு முன் செலுத்தப்படுகிறதோ அவர் ஒரு வழிபாட்டு பொருளாக மாறுகிறார். நபி (ஸல்) அவர்கள், "*துஆ என்பது வழிபாடு*"[47] என்று கூறியதாக அன்-நுமான் இப்னு பஷீர்(ரழி) அறிவித்தார்கள்.

إِنَّ الَّذِينَ تَدْعُونَ مِن دُونِ اللَّهِ عِبَادٌ أَمْثَالُكُمْ

**நிச்சயமாக அல்லாஹ்வையன்றி எவர்களை நீங்கள் அழைக்கின்றீர்களோ, அவர்களும் உங்களைப் போன்ற அடிமைகளே. குர்ஆன் 7:194.**

இவ்வாறு, கத்தோலிக்க கிறிஸ்துவர்கள் புனிதர்களிடம் பிரார்த்தனை செய்வது ஷிர்க் ஆகும். ஏதாவது ஒரு பொருள் தொலைந்து போனால், தீபஸின் புனித அந்தோனியார் அதைக் கண்டுபிடிக்க உதவுவதற்காக பிரார்த்திக்கப்படுகிறார்.[48] செயின்ட் ஜூட் தத்தேயஸ் சாத்தியமற்ற காரியங்கள் மற்றும் குணப்படுத்த முடியாத நோய்கள், சாத்தியமற்ற திருமணங்கள் போன்றவற்றில் பரிந்துரைக்காக பிரார்த்திக்கப்படுகிறார்.[49] யாரோ ஒருவர் பயணம் செய்யும்போது, பயணிகளின் பாதுகாப்பிற்காக புனித கிறிஸ்டோபர் பிரார்த்திக்கப் படுகிறார். இருப்பினும், 1969 ஆம் ஆண்டில், செயிண்ட் கிறிஸ்டோபர் கற்பனையானவர் என்று உறுதி செய்யப்பட்ட பின்னர், பாப்பல் ஆணையின் மூலம் புனிதர்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டார்.[50]

---

[46] இப்னு அப்பாஸால் அறிவிக்கப்பட்டு, அத்-திர்மிதீ மூலம் சேகரிக்கப்பட்டு, சஹீஹ் சுனன் அத்-திர்மிதீயில் அங்கீகரிக்கப்பட்டது. தொகுதி 2, பக்.308-9. எண். 2043. நவவியின் நாற்பது ஹதீஸைப் பார்க்கவும், ப. 68. எண். 19 மற்றும் மிஷ்கத் அல் மசாபிஹ், தொகுதி. 2, பக். 1099

[47] சுனன் அபு தாவுத், தொகுதி. ஐ. பி. 387. எண். 1474 மற்றும் சஹீஹ் சுனன் அபீ தாவூத், தொகுதி. 1, பக்.277. எண். 131

[48] தி வேர்ல்ட் புக் என்சைக்ளோபீடியா, தொகுதி. 1. பக். 509

[49] தி வேர்ல்ட் புக் என்சைக்ளோபீடியா தொகுதி. 11 பக்கம் 146.

[50] தி வேர்ல்ட் புக் என்சைக்ளோபீடியா, தொகுதி. 3. பக். 417

ஈஸாவின் தாயான மேரி மற்றும் தேவதூதர்களுக்கான பிரார்த்தனைகளும் மைக்கேல்மாஸைப்[51] போல ஷிர்க் ஆகும். புனிதர்களை வழிபடுவதைத் தவிர்த்த கிறிஸ்தவர்கள் கூட, ஈஸா நபியை வழிபடும் போதெல்லாம் ஷிர்க் செய்கிறார்கள். அதேபோல், முஹம்மது நபி (ஸல்) அவர்களிடம் பிரார்த்தனை செய்யும் எந்த முஸ்லிமும் ஷிர்க் செய்கிறார். இதனைத்தான் அத்தியாயம் அல்-அ'ரா:ஃப்பில் பின்வருமாறு தன்னை பின்பற்றுபவர்களுக்கு அறிவிக்கும்படி, நபி (ஸல்) அவர்களுக்கு இறைவன் கட்டளையிடுகிறான்.

**قُل لَّا أَمْلِكُ لِنَفْسِي نَفْعًا وَلَا ضَرًّا إِلَّا مَا شَاءَ اللَّهُ ۚ وَلَوْ كُنتُ أَعْلَمُ الْغَيْبَ لَاسْتَكْثَرْتُ مِنَ الْخَيْرِ وَمَا مَسَّنِيَ السُّوءُ**

**(நபியே!) நீர் கூறும்; "அல்லாஹ் நாடினாலன்றி நான் எனக்கே யாதொரு நன்மையோ அல்லது தீமையோ செய்து கொள்ள சக்தியில்லாதவன்; மறைந்திருப்பவற்றை நான் அறிபவனாக இருந்தால் நன்மைகளை அதிகமாகத் தேடிக்கொண்டிருப்பேன்; (அந்நிலையில் எவ்விதமான) தீங்கும் என்னைத் தீண்டியிராது." குர்ஆன் 7:188.**

அபூ ஹுரைரா(ரழி) அறிவிக்கிறார்கள்: **"உங்கள் நெருங்கிய உறவினர்களுக்கு எச்சரிக்கை செய்யுங்கள்"**[52] என்ற வசனம் இறுதித் தூதருக்கு வெளிப்படுத்தப்பட்டபோது, அவர்கள் தனது உறவினர்களிடம் பின்வருமாறு கூறினார்கள்; *"ஓ குறைஷிய மக்களே!, அல்லாஹ்விடம் இருந்து (நல்ல செயல்களைச் செய்வதன் மூலம்) பாதுகாப்பான விடுதலையைப் பெறுங்கள், ஏனென்றால் அல்லாஹ்விற்கு எதிராக என்னால் உங்களுக்குப் பயனளிக்க முடியாது...முஹம்மதுவின் மகளான :ஃபாத்திமா!, [இந்த வாழ்க்கையில்] நீ என்ன வேண்டுமானாலும் என்னிடம் கேள், ஆனால் அல்லாஹ்விற்கு எதிராக உனக்கு கொடுக்க என்னிடம் எதுவும் கிடையாது".*[53]

---

[51] புனித மைக்கேல் தேவதூதரின் கிறிஸ்தவ விருந்து. செப்டம்பர் 29 அன்று மேற்கு தேவாலயங்களிலும், நவம்பர் 8 அன்று கிழக்கு (ஆர்த்தடாக்ஸ்) தேவாலயத்திலும் கொண்டாடப்படுகிறது. ரோமன் கத்தோலிக் தேவாலயத்தில், இது புனித மைக்கேல், கேப்ரியல் மற்றும் ரபேல், தேவதூதர்களின் விருந்து: ஆங்கிலிகன் தேவாலயத்தில், அதன் சரியான பெயர் செயின்ட் மைக்கேல் மற்றும் அனைத்து தேவதூதர்களின் விருந்து (தி நியூ என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா, தொகுதி. 8. பக். 95)

[52] ஸூரா அஷ்- ஷூரா (26): 214.

[53] சஹீஹ் அல் புகாரி தொகுதி. 4. பக். 478-9- எண். 727 & 728. மற்றும் சஹீஹ் முஸ்லிம், தொகுதி. 1. பக். 136. எண். 402.

# ஏன் இறைவன் மனித இனத்தை பூமியில் படைத்தான்?

மனித குலம் படைக்கப்பட்டதன் நோக்கம் குறித்த கேள்வி, அவர்கள் வாழும் பூமி படைக்கப்பட்டதன் நோக்கம் என்ன என்பதையும் உள்ளடக்கும். எனவே, கேள்வி இவ்வாறு இருக்கும்: இறைவன் ஏன் இவ்வுலகில் மனிதர்களை படைத்தான்? மீண்டும், அந்த கேள்விக்கான விடையை இறுதி இறைச்செய்தியான திருக்குர்ஆனின் அத்தியாயம் முல்க் மற்றும் கஹ்ஃபில் இலகுவாக பெற்று கொள்ள முடியும்.

الَّذِي خَلَقَ الْمَوْتَ وَالْحَيَاةَ لِيَبْلُوَكُمْ أَيُّكُمْ أَحْسَنُ عَمَلًا وَهُوَ الْعَزِيزُ الْغَفُورُ

**உங்களில் எவர் செயல்களால் மிகவும் அழகானவர் என்பதைச் சோதிப்பதற்காக அவன், மரணத்தையும் வாழ்வையும் படைத்தான்; மேலும், அவன் (யாவரையும்) மிகைத்தவன்; மிக மன்னிப்பவன். [67:2]**

إِنَّا جَعَلْنَا مَا عَلَى الْأَرْضِ زِينَةً لَّهَا لِنَبْلُوَهُمْ أَيُّهُمْ أَحْسَنُ عَمَلًا

**மனிதர்களில் அழகிய செயலுடையவர்கள் யார் என்று அவர்களைச் சோதிப்பதற்காக, நிச்சயமாக பூமியிலுள்ளவற்றை அதற்கு அலங்காரமாக நாம்[54] ஆக்கினோம். [18:7]**

எனவே, மனித இனம் உலகில் படைக்கப்பட்டதன் நோக்கம் அவர்களின் நடத்தையை சோதிப்பதற்காகவே ஆகும்.[55] தீய ஆத்மாக்களிலிருந்து நல்ல ஆத்மாக்களை பிரித்தறிவதற்காக வாழ்க்கை, மரணம், செல்வம், வறுமை,, நோய் மற்றும் ஆரோக்கியம் ஆகியவற்றைக் கொண்டு இந்த உலகம் படைக்கப்பட்டது. இவ்வுலகில் மனித நடத்தை என்பது ஈமானின் (இறைநம்பிக்கையின்) அளவுகோல் ஆகும்.

ஒழுக்க நடத்தைக்கான சோதனைகள், மனிதனை குறித்து இறைவனுக்கு அறிவிப்பதற்காக அல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அன்றி அவன் மனிதர்களைக்குறித்து அவர்கள் படைக்கப்படும் முன்பே அனைத்தையும் அறிந்தவன். தீர்ப்பு நாளில், நரகத்திற்கு செல்பவர்கள் அதற்கு தகுதிபெற்றவர்கள்தான் என்பதையும், சுவனத்தில் நுழைபவர்கள் இறைவனின் அருளால் மட்டுமே அதை அடைந்தார்கள் என்பதையும் உறுதிப்படுத்துவதற்காகவே இந்த சோதனைகளை அல்லாஹ் தருகிறான். மனிதர்களை பொறுத்தவரை, இந்த வாழ்க்கையில் நடத்தை/ ஒழுக்கத்திற்கான சோதனை என்பது இரண்டு அடிப்படையான நோக்கத்தை அடைய உதவுகிறது. ஒன்று, மனித ஆன்மீக வளர்ச்சி மற்றொன்று தண்டனை அல்லது வெகுமதி.

### ஆன்மீக வளர்ச்சி:

---

[54] இங்கு 'நாம்' என்பது தூய அரபியில் கம்பீரத்திற்குரிய 'நாம்' ஆகும். அது இறைவனை குறிக்கும்.

[55] அத்தியாயம் ஹூத்:7 ஐ பார்க்கவும்.

இவ்வுலக சோதனைகளின் முதன்மையான நோக்கம் மனிதனின் ஆன்மீக வளர்ச்சியே. இயற்கையில் தாதுப்பொருளாக இருக்கும் தங்கத்தை தூய வடிவில் பிரித்தெடுக்க எப்படி கடுமையான நெருப்பு தேவையோ, அது போல சோதனைகள் தான் இறைநம்பிக்கையாளரின் குணம் மற்றும் நடத்தைகளை தூய்மைப்படுத்துகின்றன. மேலும் இந்த சோதனைகளானது, நம்பிக்கையாளர்களை அவர்களின் கீழான இச்சைகளைவிட்டு நீங்கி உயர்ந்த ஆன்மீக குணங்களை தேர்ந்தெடுக்க வழிகாட்டுகிறது. ஒவ்வொரு சோதனையிலும் வெற்றி பெறவில்லை என்றாலும் கூட ஒரு நம்பிக்கையாளர் தனது தோல்வியிலிருந்து, எதிர்காலத்தில் வரும் சோதனைகளை எதிர்கொள்ளத் தேவையான ஆன்மீக பாடங்களை கற்றுக் கொள்கிறார்.

## பெருந்தன்மை மற்றும் மனநிறைவு:

உதாரணமாக எல்லா மனித சமுதாயங்களிலும் தாராள மனப்பான்மை மற்றும் மன நிறைவு என்பது பண்புகளிலேயே உன்னத பண்புகளாக கருதப்படும். எனினும், அனைவரும் பொருளாதாரத்தில் ஒரே நிலையில் சமமாக இருந்தால் இக்குணங்கள் வளர வாய்ப்பில்லை. வறியவர்களுக்கு பொருட்களை பகிர்ந்தளிப்பது சிறந்த செயல் என்பதை அறிந்த மனிதமனம், உடைமை மற்றும் பொருட்களை தனக்கு மட்டுமே சேர்த்து வைக்கும் சுயநல ஆசையுடன் போராடி அதை நீக்கும்போது தான், பெருந்தன்மை என்ற குணத்தை அடைய முடிகிறது. இவ்வாறே, மனிதமனம் பொறாமை, பேராசை போன்ற தீய குணங்களை வீழ்த்தும்போது தான் மனநிறைவு எனும் பண்பும் பிறக்கிறது.

இதனால்தான் படைப்பாளனாகிய இறைவன், அனைவருக்கும் சரிசமமாக பொருளாதாரத்தை வழங்காமல் இந்த ஆன்மீக போராட்டங்கள் அரங்கேறுவதற்கு ஏதுவாக களத்தை அமைத்துள்ளான். அத்தியாயம் அன்நஹ்லில் அல்லாஹ் கூறுகிறான்,

وَاللَّهُ فَضَّلَ بَعْضَكُمْ عَلَىٰ بَعْضٍ فِي الرِّزْقِ

**அல்லாஹ் உங்களில் சிலரை சிலரைவிட செல்வத்தில் மேன்மைப்படுத்தி இருக்கிறான். [16:71]**

பேராசை மற்றும் கஞ்சத்தனம் ஆகியவை மனிதன் இயல்பிலேயே கொண்டிருக்கும் கெட்ட குணங்களாகும். செல்வம் என்பது இறைவனால் மனித குலத்திற்கு அமானிதமாக கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இறைமறையின் வசனங்கள் நம்பிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்துகின்றன. உலகில் ஒரு மனிதன் பிறக்கும் முன்பே உடைமைகள் இருக்கின்றன அவன் இறந்த பின்பும் அது எஞ்சி இருக்கும். ஒரு செல்வந்தர் தனக்கு இறைவன் அளித்த செல்வத்தை இறைவனின் வழிகாட்டுதல்களின் படி பயன்படுத்தும்போது, அது அவருக்கு ஈருலகிலும் பயனளிக்கிறது. ஆனால் அதை சுயநலத்தோடு தன்னிச்சையாக பயன்படுத்தினால், அது இந்த வாழ்க்கையில் சாபமாகவும் மறுமையில்

தண்டனைக்குரிய காரணியாகவும் மாறி விடுகிறது. இறுதி இறைமறையின் அத்தியாயமான சூரா அல்-அன்ஃபாலில் இறைவன் செல்வம் மற்றும் பிள்ளைகளினால் வரும் ஆபத்துகளிலிருந்து கவனமாக இருக்கும் படி எச்சரிக்கை செய்கிறான்.

وَاعْلَمُوا أَنَّمَا أَمْوَالُكُمْ وَأَوْلَادُكُمْ فِتْنَةٌ

**"நிச்சயமாக உங்கள் செல்வமும், உங்கள் குழந்தைகளும் (உங்களுக்குச்) சோதனையாக இருக்கின்றன" [8:28]**

மேலும் இறைவன் அத்தியாயம் முனாஃபிக்கூனில், செல்வம் மற்றும் குழந்தைகள் காரணமாக இறைவனுக்கு கீழ்ப்படிதலை விட்டும் இறைநம்பிக்கை கொண்ட மனிதர்கள் பாராமுகமாக ஆகிவிடுவதைப் பற்றியும் எச்சரிக்கிறான்.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تُلْهِكُمْ أَمْوَالُكُمْ وَلَا أَوْلَادُكُمْ عَن ذِكْرِ اللَّهِ ۚ

**ஈமான் கொண்டவர்களே! உங்கள் செல்வமும், உங்களுடைய மக்களும், அல்லாஹ்வின் நினைப்பை விட்டும் உங்களைப் பாராமுகமாக்கிவிட வேண்டாம்". [63:9]**

وَرَفَعَ بَعْضَكُمْ فَوْقَ بَعْضٍ دَرَجَاتٍ لِّيَبْلُوَكُمْ فِي مَا آتَاكُمْ

**"அவன் உங்களுக்குக் கொடுத்துள்ளவற்றில் உங்களைச் சோதிப்பதற்காக, உங்களில் சிலரைச் சிலரைவிடப் பதவிகளில் உயர்த்தினான்" [6:165]**

செல்வத்தைத் திரட்டி அதனை சேர்த்து வைக்கும் ஆசையில் ஒருபோதும் மனிதர்கள் திருப்தி அடைவதில்லை. மனிதர்கள் எவ்வளவு அதிகமாக செல்வம் பெற்றிருக்கிறார்களோ அதை விட அதிகமாகவே பெற்றிட விரும்புகிறார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: *ஒரு மனிதனுக்கு ஒரு பள்ளத்தாக்கின் அளவு தங்கம் இருந்தாலும் அதைப்போன்ற இன்னொன்றுக்கு ஆசை கொள்வான். ஏனெனில் மண்ணை தவிர வேறெதுவும் அவன் வாயை நிறைக்காது. மேலும் அல்லாஹ் மனத்தூய்மையோடு மன்னிப்பு கேட்போரை மன்னிக்கிறான்.*[56] செல்வத்தை அறச்சிந்தனையோடு தானம் செய்வதன் மூலமாகவே இந்த எதிர்மறை பண்பை வெற்றிகொள்ள முடியும். இவ்வாறு , அல்லாஹ் தன் தூதர்களுக்கு அவர்களை பின்பற்றும் செல்வந்தர்களிடமிருந்து தானத்தை திரட்டி ஏழைகளுக்கு பங்கீடு செய்ய கட்டளையிட்டான்.

خُذْ مِنْ أَمْوَالِهِمْ صَدَقَةً تُطَهِّرُهُمْ وَتُزَكِّيهِم بِهَا

[56] ஸஹீஹ் புகாரி , தொகுப்பு.8 பக்கம்.297-8 எண்:447

**நபியே!) அவர்களுடைய செல்வத்திலிருந்து தர்மத்திற்கானதை எடுத்துக் கொண்டு, அதனால் அவர்களை உள்ளும் புறமும் தூய்மையாக்குவீராக" [9:103]**

தர்மம், இஸ்லாத்தின் துவக்கத்திலிருந்தே ஜகாத்[57] (கட்டாய தர்மம்) என்னும் அரபி வார்த்தையின் கீழ் நிறுவப்பட்டது. தேவைக்கு அதிகமான, உபரியான செல்வத்தை பெற்ற அனைத்து ஈமான் கொண்டோரின் மீதும் தங்கள் செல்வத்திலிருந்து ஒரு பகுதியை ஏழைகளுக்காக, இறைவணக்கமாக வருடந்தோறும் கொடுப்பது கட்டாயக்கடமையாகும். ஜகாத்தை கொடுக்க மறுப்பது பெரும்பாவங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. இவ்வாறாக இந்த தர்மத்தை வலியுறுத்துவதன் மூலம் இஸ்லாம் மனிதர்களின் செல்வம் முற்றிலும் அவர்களுடையதல்ல மற்றும் அவர்கள் நினைத்தவாறெல்லாம் செலவு செய்ய முடியாது எனும் உண்மையை உணரச் செய்கிறது மேலும் அவர்கள் செல்வத்தின் தற்காலிக பாதுகாவலர்கள் என்றும், அதிலிருந்து ஒரு பகுதியை ஆதரவற்றோருக்கு கொடுக்கவேண்டும் என்பதை கற்றுக்கொடுக்கிறது. ஆகையால், தங்கள் செல்வத்தின் ஒரு பகுதி ஏழைகளுக்குரியது என்பதை உளமார உணர்பவர்களை உண்மையான இறை நம்பிக்கையாளர்களாக இறைவன் வர்ணிக்கிறான்.

وَفِي أَمْوَالِهِمْ حَقٌّ لِّلسَّائِلِ وَالْمَحْرُومِ

**அவர்களுடைய செல்வத்தில் இரப்போருக்கும், வசதியற்றோருக்கும் பாத்தியதை உண்டு.[51:19]**

ஆயினும் தர்மம் செய்தல் என்பது மனத்தூய்மையோடு இறைவனின் திருப்தியை மட்டுமே எதிர்பார்த்ததாக இருக்க வேண்டும். மாறாக ஈதல், பிறர் பார்த்து மெச்சுவதற்காகவோ, ஆட்சி அதிகாரத்திற்காகவோ இருக்கக்கூடாது. உலக காரணங்களுக்காக தர்மம் செய்யும் போது அதன் அனைத்து நன்மைகளும் தொலைந்துவிடும். இந்த நிதர்சன உண்மையை அல்லாஹ் அத்தியாயம் பகராவில் கூறும்பொழுது,

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تُبْطِلُوا صَدَقَاتِكُم بِالْمَنِّ وَالْأَذَىٰ

**நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொள்ளாமல், மனிதர்களுக்குக் காட்டுவதற்காகவே தன் பொருளைச் செலவழிப்பவனைப்போல், கொடுத்ததைச் சொல்லிக் காண்பித்தும், நோவினைகள் செய்தும் உங்கள் ஸதக்காவை (தான தர்மங்களைப்) பாழாக்கி விடாதீர்கள்;.[2:264]**

பொறாமைக்குணம் செல்வத்திற்கான ஏக்கத்தை மேலும் அதிகரிக்கும். ஆகையால், பிறருக்கு இறைவன் கொடுத்திருப்பதைப் பார்த்து பேராசை கொள்ளாதீர்கள் என்று இறைவன் அறிவுறுத்துகிறான். இதை குறித்து

[57] ஜகாத் என்பதன் பொருள் பரிசுத்தப்படுத்துதல்; வளர்ச்சி

இறைவன் தன் இறுதி வேதத்தின் அத்தியாயமான சூரா நிசாவில் கூறும்பொழுது,

وَلَا تَتَمَنَّوْا مَا فَضَّلَ اللَّهُ بِهِ بَعْضَكُمْ عَلَىٰ بَعْضٍ

**மேலும் எதன் முலம் உங்களில் சிலரை வேறு சிலரைவிட அல்லாஹ் மேன்மையாக்கியிருக்கின்றானோ, அதனை (அடையவேண்டுமென்று) பேராசை கொள்ளாதீர்கள்;.[4:32]**

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இதை பற்றி கூறும்போது *(அருட்கொடைகளில்) உங்களுக்கு கீழ் உள்ளோரை பாருங்கள். உங்களுக்கு மேல் உள்ளோரை பார்க்காதீர்கள். அதுவே உங்களுக்கு சிறந்தது. அல்லாஹ் உங்களுக்கு வழங்கிய அருட்கொடையை நீங்கள் மறுக்காமல் இருப்பதற்கற்காக*[58] என்றார்கள். ஆனால் மனிதர்கள் தன்னை விட அதிக செல்வம் வைத்திருப்போர் மீதே கவனம் செலுத்துகிறார்கள். இதனால் பொறாமை வளரக்கூடும். அவர்கள் பொதுவாக இறைவன் தங்களுக்கு அநீதம் செய்ததாக எண்ணவும், அந்த எண்ணத்தை வெளிப்படுத்தவும் செய்வார்கள். இறுதியில் அவர்கள், அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற பல பாவங்களை செய்யக்கூடும். மாறாக, இஸ்லாம், அவர்களை விட குறைவாக கொடுக்கப்பட்டவர்களை கருத்தில் கொள்ள அறிவுறுத்துகிறது. எவ்வளவு சிரமமான சூழ்நிலையில் நாம் இருந்தாலும், எப்போதும் நம்மை விட கடும் சிரமத்தில் பிறர் இருக்கத்தான் செய்கிறார்கள். நம்மை விட குறைந்த அருட்கொடைகளை பெற்றவர்களை கருத்தில் கொள்வதன் காரணமாக அல்லாஹ் நமக்கு அருளிய பெரும் அருட்கொடைகளை நினைவில் கொள்ளமுடியும். பொறாமையை தடுக்க நடக்கும் மனப்போராட்டமே உயர்ந்த குணமான மனநிறைவை வளர செய்யும். மேலும், நபிமார்களின் போதனைகளின் படி பொருள், உடைமைகள் இந்த உலகத்தின் உண்மையான சொத்தாக அமையாது. அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள் நபி ஸல்லலல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக *செல்வம் என்பது உடைமையில் அல்ல மனநிறைவில் உள்ளது.*[59]

மனநிறைவோடு இருப்பது என்பது, மனிதன் தான் எந்த நிலையில் இருந்தாலும் அதை ஏற்றுக்கொண்டு தன் நிலையை மாற்ற முயற்சிக்காமல் இருப்பது அல்ல, மாறாக அதன் பொருள், ஒரு நல்ல வாழ்க்கை தரத்தை அடைய முயற்சி செய்த பிறகு அல்லாஹ் விதித்ததை தூய மனதோடு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும். தன்னால் இயன்ற முயற்சிக்குப்பிறகு தனது காரியங்களை இறைவனிடம் ஒப்படைப்பதன் மூலமாக மட்டுமே இதயங்கள் அமைதி அடையும். இது தொடர்பாக இறைவன் அத்தியாயம் ரஃதில் கூறுகிறான்,

[58] ஸஹீஹ் புகாரி தொகுப்பு: 8 பக்கம்: 328 எண்: 497. & ஸஹீஹ் முஸ்லிம் தொகுப்பு: 4 பக்கம்: 1530 எண்: 7070

[59] ஸஹீஹ் புகாரி தொகுப்பு: 8 பக்கம்: 304 எண்: 453

أَلَا بِذِكْرِ اللَّهِ تَطْمَئِنُّ الْقُلُوب

**அல்லாஹ்வை நினைவு கூர்வது கொண்டு தான் இதயங்கள் அமைதி பெறுகின்றன என்பதை அறிந்து கொள்க! (13:28)**

### பேரிடர்கள்:

உலக வாழ்வில் துர்பேறு வடிவில் வரும் சோதனைகள் மற்றும் பேரழிவுகள், உண்மையான இறைநம்பிக்கையாளர்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு பங்களிப்பதோடு அவர்களை பாவங்களிலிருந்தும் தூய்மைப் படுத்துகிறது. மாறாக, துர்பேறினால் ஏற்படும் சோதனைகள் இறைவனுக்கு இணை கற்பித்து வழி தவறிய நம்பிக்கையாளர்களை நேரான பாதைக்கு திரும்பச்செய்கின்றன. மேலும் இச்சோதனைகள் இறை நிராகரிப்பாளர்களுக்கோ மறுமைக்கு முன் உலக வாழ்க்கையிலேயே வழங்கப்படும் தண்டனையாக இருக்கிறது.

### பொறுமை:

பேரிடர்கள் என்பது உயர்ந்த ஆன்மீக குணமான பொறுமை வளர்வதற்கான அடித்தளமாகும். ஆகையால் நல்லவர்கள் தங்கள் வாழ்வில் துன்பங்கள் மற்றும் சிரமங்களுக்கு ஆளாவதை கண்டு ஆச்சரியப்படுவதற்கில்லை. *சஃத் ரலி யல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள் நான் நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம், மனிதர்களிலேயே அதிக சோதனைகளுக்கு உட்படுபவர் யார்? என்று கேட்டேன் நபியவர்கள் கூறினார்கள்: "நபிமார்கள், அதன் பின் அதிகமாக அவர்களை போன்று இருப்பவர்கள் இன்னும் அதன் பின் அவர்களை போன்று அதிகமாக இருப்பவர்கள். மனிதர்கள் அவர்களுடைய ஈமானிய [நம்பிக்கை] அளவுக்குகேற்ப சோதிக்கப்படுகிறார்கள் அவர்களுடைய ஈமான் உறுதியாக இருந்தால் அவர்களின் சோதனையின் கடுமை அதிகரிக்கும், இன்னும் அவர்களின் ஈமான் பலகீனமானதாக இருந்தால் அதற்கேற்ப சோதிக்கப்படுவார்கள்"* என்றார்கள்.[60]

உண்மையான பொறுமை, சோதனையின் போது இறைவன் மீது முழுமையான நம்பிக்கை வைப்பதால் விளையும். இறைவன் மீது நம்பிக்கை வைப்பது இறைவழிபாட்டின் முக்கிய அம்சமாகும். இன்னும் அது மெய்யான ஈமானின் இயற்கையான விளைவாகும். இப்பிரபஞ்சத்தில் அல்லாஹ்வின் அனுமதியின்றி எதுவும் நடக்காது என்பதை ஏற்றுக்கொள்வதே அவன் மீது வைக்கும் நம்பிக்கையாகும். அல்லாஹ்வே மனிதர்களின் முழுமையான நம்பிக்கைக்கு தகுதியுடையவன். ஆக இறைவனின் வாக்குறுதி மட்டுமே ஒருபோதும் பொய்ப்பிக்கப்படாது, முறிக்கப்படாது. மனிதன் எவ்வளவு நல்லவனாக இருந்தாலும் தவறு செய்யும் இயல்புடையவனே ஆவான்.

[60] திர்மிதி இப்ன் மாஜா வால் தொகுக்கப்பட்டது திர்மிதியில் ஆதாரப்பூர்வமானது தொகுப்பு:2 பக்கம்:286 எண்:1956

மனிதர்கள் தங்கள் பிழை செய்யும் இயல்பின் காரணமாக, ஒருவரையொருவர் எப்போதும் கைவிட்டு விட நேரிடும். இதன் காரணமாக இறைவன், தூதர் யஃகூபை சூரா யூசுபில் பின்வருமாறு மேற்கோள் காட்டுகிறான்.

إِنِ الْحُكْمُ إِلَّا لِلَّهِ ۖ عَلَيْهِ تَوَكَّلْتُ ۖ وَعَلَيْهِ فَلْيَتَوَكَّلِ الْمُتَوَكِّلُونَ

**அதிகாரமெல்லாம் அல்லாஹ்வுக்கேயன்றி (வேறு எவருக்கும்) இல்லை அவன் மீதே நான் முழுமையாக நம்பிக்கை கொண்டுள்ளேன். எனவே, முழுமையாக நம்பிக்கை வைப்பவர்கள் அவன் மீதே முழு நம்பிக்கைவைப்பார்களாக!" என்று கூறினார்.[12:67]**

மேலும் மனிதர்கள் அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை வைப்பார்களானால் அவர்களின் மிகக்கடுமையான சோதனைக்காலங்களிலும் அவர்களுக்கு அவனே போதுமானவனாக இருக்கிறான் என்று உறுதியளிக்கிறான்.

وَمَن يَتَوَكَّلْ عَلَى اللَّهِ فَهُوَ حَسْبُهُ ۚ

**மேலும், எவர், அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டு அவனை முற்றிலும் சார்ந்திருக்கிறாரோ, அவருக்கு அவன் போதுமானவன்,[65:3]**

அல்லாஹ் மட்டுமே மனிதர்களுக்கு எது சிறந்தது என்பதை அறிந்தவன் என்ற உறுதியான நம்பிக்கையில் தான் [பொறுப்பு ஒப்படைத்தல்] நம்பிக்கை பொதிந்துள்ளது. மனிதர்கள் தங்களுக்கு ஒன்று நல்லது என்று நினைப்பது அவ்வாறில்லாமலும் போகலாம் என்ற உறுதியான நம்பிக்கை வேண்டும். அல்லாஹ் அத்தியாயம் பகராவில் கூறுகிறான்

وَعَسَىٰ أَن تُحِبُّوا شَيْئًا وَهُوَ شَرٌّ لَّكُمْ ۗ وَاللَّهُ يَعْلَمُ وَأَنتُمْ لَا تَعْلَمُونَ

**நீங்கள் ஒரு பொருளை வெறுக்கலாம்; ஆனால் அது உங்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும்;. ஒரு பொருளை நீங்கள் விரும்பலாம், ஆனால் அது உங்களுக்குத் தீமை பயப்பதாக இருக்கும். (இவற்றையெல்லாம்) அல்லாஹ் அறிவான், நீங்கள் அறியமாட்டீர்கள்.[2:216]**

அல்லாஹ் மனிதர்களை சோதித்தறிவதற்காக தரும் சோதனைகள், அவர்களின் தனிப்பட்ட தேவைகளுக்கும், சூழ்நிலைகளுக்கும் ஏற்ப அமைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு நபரின் சிறந்த குணாதிசயத்தை வெளிக்கொணர அவரவர் சக்திக்கேற்ப சோதனைகளை அல்லாஹ் உருவாக்குகிறான். மனிதர்களை அவர்களின் சக்திக்குமீறி சோதித்து அவர்களின் தோல்விக்காக தண்டிப்பதென்பது அநியாயம் மற்றும் அநீதியாகும். இறைவன் தனது இறுதி மறையின் பல வசனங்களில் அவன் யாருக்கும் அநியாயம் செய்ய மாட்டான் என்பதை அழுத்தமாக கூறி இருக்கிறான். உதாரணமாக சூரா கஹ்ஃபில் கூறும்போது,

وَلَا يَظْلِمُ رَبُّكَ أَحَدًا

**உம்முடைய இறைவன் ஒருவருக்கும் அநியாயம் செய்யமாட்டான்.[18:49]**

அல்லாஹ் உண்மையான நீதியாளன். மனிதர்கள் எதிர்கொள்ளும் சோதனைகள் அவர்களின் சக்திக்கு மீறியோ சமாளிக்க முடியாததாகவோ இருக்காது. மனிதர்களுக்கு இதனை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துவதற்காக திரும்பத்திரும்ப இந்த உன்மைச்செய்தியை குர்ஆனில் கூறுகிறான். இதற்கான ஒரு சான்றை இரண்டாம் அத்தியாயமான சூரா பகராவில் காணலாம்.

لَايُكَلِّفُاللَّـهُنَفْسًاإِلَّاوُسْعَهَا

**அல்லாஹ் எந்த ஓர் ஆத்மாவுக்கும் அது தாங்கிக் கொள்ள முடியாத அளவு கஷ்டத்தை கொடுப்பதில்லை. [2:286]**

மேலும், மனிதர்கள் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் கடினமான சூழ்நிலைகள் மற்றும் துன்பங்கள், எப்போதும் நிரந்தரமானது இல்லை என்று எல்லாம் வல்ல இறைவன் உறுதியளிக்கிறான். சோதனைகள் தொடர்ச்சியாக இருந்தால் அவை நிச்சயமாக தாங்க முடியாததாகிவிடும். இதனால் தான் ஒவ்வொரு சோதனைக்குப் பின்னும் ஒரு இன்பம் வரும் படி அல்லாஹ் அமைத்து வைத்திருக்கிறான்.அல்லாஹ் அல் இன்ஷிரா அத்தியாயத்தில் இரண்டு முறை இதனை வலியுறுத்திக் கூறியுள்ளான்

فَإِنَّ مَعَ الْعُسْرِ يُسْرًا إِنَّ مَعَ الْعُسْرِ يُسْرًا

**ஆதலின் நிச்சயமாகத் துன்பத்துடன் இன்பம் இருக்கிறது. நிச்சயமாக துன்பத்துடன் இன்பம் இருக்கிறது.[94:5-6]**

## விரக்தி

துன்பங்கள் மட்டுமே நிரந்தரமான ஒன்று அல்ல என்பதால் சோதனைகளை தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொள்வதை இஸ்லாம் வெளிப்படையாகத் தடுக்கிறது. நிசா அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகிறான்:

وَلَاتَقْتُلُواأَنفُسَكُمْ ۚ إِنَّاللَّـهَكَانَبِكُمْرَحِيمًا

**நீங்கள் உங்களையே கொலைசெய்து கொள்ளாதீர்கள் - நிச்சயமாக அல்லாஹ் உங்களிடம் மிக்க கருணையுடையவனாக இருக்கின்றான். [4:29]**

தற்கொலை செய்து கொள்பவர்கள், அடிப்படையில் இறைவன் தங்கள் திறனுக்கு அப்பாற்பட்ட சுமையை தங்கள்மீது சுமத்தியதாக நினைக்கிறார்கள். படைத்த இறைவன் தங்களுக்கு அநியாயம் செய்து விட்டதாக பொய்யாக குற்றம் சாட்டி, அதன் மூலம் கேடு தரும் அவநம்பிக்கைக்கு ஆளாகிறார்கள். இதன் விளைவாக அவர்கள் இறைநம்பிக்கையை இழந்து இறைவனைப்பற்றிய

தப்பெண்ணங்களோடு முழு விரக்தியில் விழுகிறார்கள். "வாழ்க்கை", அவர்கள் அடிக்கடி சொல்வது போல், "மிகவும் நியாயமற்றது, தொடர்ந்து வாழ்வது அர்த்தமற்றது." என்ற முடிவுக்கும் வருகிறார்கள்.

إِنَّهُ لَا يَيْأَسُ مِن رَّوْحِ اللَّهِ إِلَّا الْقَوْمُ الْكَافِرُونَ

**ஏனென்றால் நிச்சயமாக கா:ஃபிர்களின் கூட்டத்தைத் தவிர (வேறுயாரும்) அல்லாஹ்வின் அருளைப்பற்றி நம்பிக்கை இழக்கமாட்டார்கள்" என்றும் கூறினார். [12:87]**

மேலும், இறைவன் தன்னைப் பற்றி தீய எண்ணங்களைக் கொண்டிருப்பவர்களுக்கான தண்டனை, நரகத்தின் கடுமையான நிரந்தர வேதனை என்று மனிதகுலத்திற்கு எச்சரிக்கை செய்கிறான். அல் ஃபத்ஹ் அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகிறான்:

وَيُعَذِّبَ الْمُنَافِقِينَ وَالْمُنَافِقَاتِ وَالْمُشْرِكِينَ وَالْمُشْرِكَاتِ الظَّانِّينَ بِاللَّهِ ظَنَّ السَّوْءِ ۚ
عَلَيْهِمْ دَائِرَةُ السَّوْءِ ۖ وَغَضِبَ اللَّهُ عَلَيْهِمْ وَلَعَنَهُمْ وَأَعَدَّ لَهُمْ جَهَنَّمَ ۖ وَسَاءَتْ مَصِيرًا

**அல்லாஹ்வைப் பற்றி கெட்ட எண்ணம் எண்ணும் முனா:ஃபிக்கான ஆண்களையும், முனா:ஃபிக்கான பெண்களையும், இணைவைத்து வணங்கும் ஆண்களையும், இணைவைத்து வணங்கும் பெண்களையும், (அல்லாஹ்) வேதனை செய்வான். (அவ்வேதனையின்) கேடு அவர்கள் மேல் சூழ்ந்து கொண்டு இருக்கிறது இன்னும் அல்லாஹ் அவர்கள் மீது கோபம் கொண்டான்; அவர்களைச் சபித்தும் விட்டான்; அவர்களுக்காக நரகத்தையும் சித்தம் செய்திருக்கின்றான் - (அதுதான்) செல்லுமிடங்களில் மிகவும் கெட்டது. [48:6]**

## நம்பிக்கை

மறுபுறம் நீதி மற்றும் கருணை குறித்த இறைவாக்குறுதிகள் இறைநம்பிக்கையாளருக்கு வாழ்வின் சிரமங்களை எதிர்நோக்க தேவையான நம்பிக்கையை தருகின்றன. எனவே இறைவன் காட்டும் கருணை மீதான நம்பிக்கை ஈமானின் இன்றியமையாத அம்சமாக விளங்குகிறது. எவரொருவர் அல்லாஹ்வை நம்பி பொறுமையுடன் நன்மையின் பக்கம் உறுதியாக நிற்கிறாரோ அவர் அல்லாஹ்வின் கருணையை கேட்கும் உரிமையை பெறுகிறார். ஏனென்றால் அல்லாஹ் பொறுமையாளர்களுக்கு உதவியும் ஆதரவும் தருவதாக வாக்களித்துள்ளான்.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اسْتَعِينُوا بِالصَّبْرِ وَالصَّلَاةِ ۚ إِنَّ اللَّهَ مَعَ الصَّابِرِينَ

**நம்பிக்கை கொண்டோரே! பொறுமையுடனும், தொழுகையுடனும்(இறைவனிடம்) உதவி தேடுங்கள்;. நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடையவர்களுடன் இருக்கிறான். (2:153)**

**إِنَّ الَّذِينَ آمَنُوا وَالَّذِينَ هَاجَرُوا وَجَاهَدُوا فِي سَبِيلِ اللَّهِ أُولَٰئِكَ يَرْجُونَ رَحْمَتَ اللَّهِ وَاللَّهُ غَفُورٌ رَّحِيمٌ**

**நம்பிக்கை கொண்டோரும், (கா∴பிர்களின் கொடுமைகளால் நாட்டை விட்டு) துறந்தவர்களும், அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் செய்தோரும் அல்லாஹ்வின் (கருணையை) - ரஹ்மத்தை - நிச்சயமாக எதிர்பார்க்கிறார்கள்; மேலும், அல்லாஹ் மிகவும் மன்னிப்போனாகவும், பேரன்புடையோனாகவும் இருக்கின்றான். (2:218)**

இறைவன் மீதான உறுதியான நம்பிக்கையினால் ஒருவர் மேற்கொள்ளும் பொறுமைக்கு நிச்சயமாக சுவர்க்கத்தை அல்லாஹ் பரிசளிக்கிறான். இது குறித்து அல்லாஹ் திருமறையில் இவ்வாறு கூறுகிறான்,

**وَبَشِّرِالصَّابِرِين**

**الَّذِينَ إِذَا أَصَابَتْهُم مُّصِيبَةٌ قَالُوا إِنَّ اللَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُون**

**பொறுமையுடையோருக்கு (நபியே!) நீர் நன்மாராயங் கூறுவீராக! (பொறுமை உடையோராகிய) அவர்களுக்குத் துன்பம் ஏற்படும் போது, 'நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள்;, நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்வோம்' என்று கூறுவார்கள். (2:155-6)**

மனிதர்கள் தங்களுக்கு நிகழும் துன்பங்களுக்கு அடிப்படையான காரணம் தாங்கள் செய்த தீய செயல்கள்[61] தான் என்று உணர்ந்து நம்பும் போது பொறுமையை கடைப்பிடிக்கிறார்கள். இந்த உண்மையை அல்லாஹ் திருமறையின் அஷ்ஷூரா அத்தியாயத்தில்கூறுகிறான்,

**وَمَا أَصَابَكُم مِّن مُّصِيبَةٍ فَبِمَا كَسَبَتْ أَيْدِيكُمْ وَيَعْفُوعَن كَثِيرٍ**

**அன்றியும் தீங்கு வந்து உங்களை அடைவதெல்லாம், அது உங்கள் கரங்கள் சம்பாதித்த (காரணத்)தால் தாம், எனினும், பெரும்பாலானவற்றை அவன் மன்னித்தருள்கின்றான். (42:30)**

உண்மையில் மனிதர்களின் பெரும்பாலான தீயசெயல்களை அல்லாஹ் மன்னித்து விடுகிறான். அவன் மட்டும் மனிதர்களை தண்டிப்பதில் மிகக் கடுமையாக நடந்துகொண்டால் மனிதர்களும் பூமியும் அழிந்தே போய்விடும்.

---

[61] உண்மையில் எல்லாகுழப்பங்களுக்கும்காரணம் மனிதர்களின் தவறான நடத்தைகளே. அல்லாஹ் இதனை அர்ரூம்(30:41) அத்தியாயத்தில்சொல்லிக்காட்டுகிறான். அந்த வசனம் பின்வரும் ஒருபக்கத்தில் இடம்பெற்றுள்ளது.

அல்லாஹ் இதனை திருமறையில் ஃபாத்திர் அத்தியாயத்தில் சுட்டிக்காட்டுகிறான்,

وَلَوْ يُؤَاخِذُ اللَّهُ النَّاسَ بِمَا كَسَبُوا مَا تَرَكَ عَلَىٰ ظَهْرِهَا مِن دَابَّةٍ

**மனிதர்களை அவர்கள் சம்பாதித்த (தீ) வினைக்காக அல்லாஹ் அவர்களை (உடனுக்குடன்) பிடி(த்துத் தண்டி)ப்பதாக இருந்தால் பூமியில் உயிர்ப் பிராணிகள் ஒன்றையுமே விட்டு வைக்கமாட்டான்.** (35:45)

எனவே, நன்மையைக் கொண்டும், தீமையைக் கொண்டும் சோதனைகள் வந்தாலும் அவையிரண்டுமே ஒரு இறைநம்பிக்கையாளருக்கு பயனளிப்பதாகவே இருக்கும். அவர்கள் தங்கள் தினசரி வாழ்வில் எந்த நிலையிலும் எல்லை மீறாமல் கவனமாக இருப்பார்கள். அதாவது வாழ்வில் வெற்றிகளை காணும்போது இறைவனை மறந்து அளவுக்கதிகமாக மகிழ்ச்சி அடையவும் மாட்டார்கள். சிரமங்கள் , தோல்விகள் வரும்போது இறைவனின் மீது நம்பிக்கை இழந்து சோர்வடையவும் மாட்டார்கள். மாறாக அவர்கள் இறைவன் அருளாளன் என்பதை நினைவில் வைத்து அவனுடைய முடிவுகளைப் பொருந்திக் கொள்வார்கள். சுஹைப் இப்னு சினான்அவர்கள் இறுதித் தூதர்கூறியதாக அறிவிக்கிறார்கள்: "ஓர் *இறை விசுவாசியின் விவகாரம் எவ்வளவு ஆச்சரியமானது! உண்மையில், அவருடைய எல்லா விவகாரங்களும் அவருக்கு நல்லதாக இருக்கிறது. உண்மைவிசுவாசியைத் தவிர வேறு யாருக்கும் இவ்வாறு இல்லை. அவருக்கு ஏதாவது நல்லது நடந்தால், அவர் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகிறார், அது அவருக்கு நல்லது. மேலும் அவருக்கு ஏதாவது கெட்டது நடந்தால், அவர் பொறுமை காக்கிறார், அதுவும் அவருக்கு நல்லது.*[62]

இறைவன் விதித்ததை ஏற்றுக்கொண்ட ஒருவரின்நிலை இதுவே.அதனால்தான் நன்மையும் தீமையும் இறைவன் விதித்தபடியே நடக்கிறது என்பதை நம்புவது இறைநம்பிக்கையின் ஆறாவது (தூணாக) கட்டளையாக உள்ளது.

மாறாக, எந்த சோதனையையும் சந்திக்காமல் ஒரு நம்பிக்கையாளரின் வாழ்வு இருக்கும் போது அவர் அதனை 'ஏதோ தவறாக இருக்கிறது' என்பதற்கான அடையாளமாக எடுத்துக்கொள்ள வேண்டும். அத்தகைய சூழலில் ஒரு உண்மை விசுவாசி தன் வாழ்வின் நடத்தைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஒன்று சோதனைகள் இருந்தும் அவருக்கு தெரியாமல் இருக்கலாம் அல்லது அவர் சரியான நேர்வழியை விட்டு பாதை மாறி போயிருக்கலாம். அல்லாஹ் அத்தவ்பா எனும் அத்தியாயத்தில் இவ்வாறு கூறுகிறான்: இறை மறுப்பாளர்கள் தங்களின் பெரும் செல்வங்கள் மற்றும் குழந்தைகள் மூலம் பெறும் வெளிப்படையான இன்பங்கள் யாவும் அவர்களுக்கு கிடைக்க இருக்கும் கடும் தண்டனைகளுக்கு முன்னர் இறைவன் கொடுக்கும் சிறு சலுகைகளே.

[62] ஸஹீஹ் முஸ்லிம் தொகுப்பு 4, பக்கம் 1541, எண் 7138

**وَلَا تُعْجِبْكَ أَمْوَالُهُمْ وَأَوْلَادُهُمْ ۚ إِنَّمَا يُرِيدُ اللَّهُ أَن يُعَذِّبَهُم بِهَا فِي الدُّنْيَا وَتَزْهَقَ أَنفُسُهُمْ وَهُمْ كَافِرُونَ**

**இன்னும் அவர்களுடைய செல்வங்களும், பிள்ளைகளும் உம்மை ஆச்சரியப்படுத்த வேண்டாம்; நிச்சயமாக இவற்றைக் கொண்டு அவர்களை இவ்வுலகத்திலேயே வேதனை செய்யவும், அவர்கள் காஃபிர்களாக இருக்கும் நிலையிலேயே அவர்களின் உயிர் போவதையும் அல்லாஹ் விரும்புகிறான். (9:85)**

அதற்காக இறை விசுவாசிகள் துன்பங்கள் சோதனைகள் தங்கள் வாழ்வில் வர விரும்ப வேண்டும் என்று அர்த்தமில்லை. அல்லாஹ் இப்படி பிரார்த்தனை செய்ய இறைநம்பிக்கையாளர்களுக்கு கற்றுத்தருகிறான்: **எங்கள் இறைவா! எங்களுக்கு முன் சென்றோர் மீது சுமத்திய சுமையை போன்று எங்கள் மீது சுமத்தாதிருப்பாயாக!**[63] மேலும் விசுவாசிகள் அவர்களை விட்டும் அல்லாஹ் தடுத்துக்கொண்ட சோதனைகளை எண்ணிப்பார்த்து அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். எனினும் ஒரு விசுவாசி, வாழ்வின் இனிமையான நேரங்களில் தன்னிலை மறந்து சோதனைகளில் குழப்பங்களில் போய் சிக்கிக் கொள்ளாமல் விழிப்புடன் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில், பெரும்பாலும் வாழ்வின் வெற்றிகளும் மகிழ்ச்சியான தருணங்களும் மனிதர்களை அவர்கள் அறியாமலே தீய சூழலின் பக்கம் இழுத்துச்சென்று விடுகின்றன.

## நினைவூட்டல்

சில நேரங்களில், சோதனை என்பது, வழி தவறி சென்றவர்களுக்குத் தண்டனையின் நினைவூட்டலாகவும் அவர்கள் திரும்ப நேர் வழி பெற உற்சாகமூட்டக் கூடியதாகவும் உள்ளது. வழிதவறிச் செல்பவர்கள் பிறருடைய உபதேசத்தை கேட்பது மிகவும் அரிது. ஆனால் அவர்களையோ அல்லது அவர்களுக் நெருக்கமானவர்களையோ சோதனை பிடிக்கும் பொழுது, அது இன்னும் சிறிது ஈமான் உள்ளவர்களை நிலைக்குலைய வைத்து அவர்களின் தவறை உணர வைக்கிறது.

**وَلَنُذِيقَنَّهُم مِّنَ الْعَذَابِ الْأَدْنَىٰ دُونَ الْعَذَابِ الْأَكْبَرِ لَعَلَّهُمْ يَرْجِعُونَ**

**“மேலும், அவர்கள் (பாவங்களிலிருந்து) திரும்பி விடும் பொருட்டுப் பெரிய வேதனையை (மறுமையில் அவர்கள்) அடைவதற்கு முன்னதாகவே (இம்மையில்) சமீபமான ஒரு வேதனையை அவர்கள் அனுபவிக்கும்படி நாம்[64] செய்வோம்.” [குர்ஆன், 32: 21]**

---

[63] அல்குர்ஆன்சூரா பகரா 2:286

[64] இங்கு ‘நாம்’ என்பது தூய அரபியில் கம்பீரத்திற்குரிய ‘நாம்’ ஆகும். அது இறைவனை குறிக்கும்.

பேரிடர்களின் சோதனை மனிதக்குலத்திற்கு அவர்கள் வழிதவறிச் சென்றதை ஞாபகமூட்டுகிறது. அது மனிதன் தன் இனத்திற்கு இழைக்கும் மனிதாபிமானமற்ற செயல்களின் வடிவத்திலும் வரலாம். அதற்குப் பல நிகழ்வுகளை உதாரணமாகக் கூறலாம். அதிலொன்று, போஸ்னிய முஸ்லீம்களின் மீது சொல்ல முடியாத அட்டூழியங்களை செய்த செர்ப்கள். இதில் நாம் கவனிக்க வேண்டியது போஸ்னிய முஸ்லீம் மக்கள் இஸ்லாத்தைவிட்டு வெகுதொலைவில் இருந்தனர். அடுத்தது சதாம் உஸைனின் குவைத் நாட்டின் மீது படை எடுப்பு. அதைத் தொடர்ந்து, ஈராக்கின் பொது மக்களின் மீது அமெரிக்கா நிகழ்த்திய கண்மூடித்தனமான தொடர் குண்டு வீச்சு என்று கூறிக்கொண்டே போகலாம். அல்லாஹ் சுட்டிக் காட்டுகிறான் ஒரு மனிதன் இன்னொரு மனிதனால் துன்பப்படுவது எதுவாயினும் அது அவன் தனக்கு தானே ஏற்படுத்திக் கொண்டதே ஆகும். துன்பமோ கஷ்டமோ எதுவாயினும் அது அவனைத் திரும்பவும் நேரான வழிக்கு கொண்டு வருவதற்கான நினைவூட்டலே ஆகும்.

**ظَهَرَ الْفَسَادُ فِي الْبَرِّ وَالْبَحْرِ بِمَا كَسَبَتْ أَيْدِي النَّاسِ لِيُذِيقَهُم بَعْضَ الَّذِي عَمِلُوا لَعَلَّهُمْ يَرْجِعُونَ**

**“மனிதர்களில் கைகள் தேடிக்கொண்ட (தீய செயல்களின்) காரணத்தால் கடலிலும் தரையிலும் (நாசமும்) குழப்பமும் தோன்றின் (தீமைகளிலிருந்து) அவர்கள் திரும்பிவிடும் பொருட்டு அவர்கள் செய்தார்களே (தீவினைகள்) அவற்றில் சிலவற்றை (இவ்வுலகிலும்) அவர்கள் சுவைக்கும்படி அவன் செய்கிறான்.” [குர்ஆன், 30: 41]**

### நயவஞ்சகத்தனம்

மேலும், பேரிடரானது, நம்பிக்கை உள்ளதுப் போல் ஏமாற்றுபவர்களை வெளிப்படுத்துவதோடு தங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் நரகத்தை தேர்ந்தெடுத்த நிராகரிப்பாளர்களையும் சுட்டிக் காட்டுகிறது. தவறான காரணங்களுக்காக மக்கள் இஸ்லாத்திற்கு வந்த பல நிகழ்வுகள் உள்ளன. மேலும் அவர்கள் இஸ்லாத்தை ஏற்பதற்கு முன்னர் இருந்த கஷ்டத்தைவிட அதிக கஷ்டத்தை எதிர்க் கொண்டதினால் அவர்கள் திரும்பவும் முன்பிருந்த நம்பிக்கைக்கே திரும்புகிறார்கள்.

**أَحَسِبَ النَّاسُ أَن يُتْرَكُوا أَن يَقُولُوا آمَنَّا وَهُمْ لَا يُفْتَنُونَ**

**وَلَقَدْ فَتَنَّا الَّذِينَ مِن قَبْلِهِمْ ۖ فَلَيَعْلَمَنَّ اللَّهُ الَّذِينَ صَدَقُوا وَلَيَعْلَمَنَّ الْكَاذِبِينَ**

**"நாங்கள் ஈமான் கொண்டிருக்கின்றோம்" என்று கூறுவதனால் (மட்டும்) அவர்கள் சோதிக்கப்படாமல் விட்டு விடப்படுவார்கள் என்று மனிதர்கள் எண்ணிக் கொண்டார்களா? நிச்சயமாக அவர்களுக்கு முன்னிருந்தார்களே**

**அவர்களையும் நாம்[65] சோதித்திருக்கின்றோம் - ஆகவே உண்மையுரைப்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் அறிவான்; இன்னும் பொய்யர்களையும் அவன் நிச்சயமாக அறிவான். (குர்ஆன், 29: 2, 3)**

## தண்டனை

யார் இறைவன் அமைத்து தந்த வரம்புகளை மீறுகிறார்களோ அவர்கள் தங்களை இம்மை மற்றும் மறுமையின் தண்டனைக்கு தயாராக்கிக் கொள்கிறார்கள். குர்ஆனில் பல இடங்களில் நேர்வழி வந்த பிறகு அதனை புறக்கணித்து அதனால் அழிந்து போன பல முன் சென்ற சமுதாயத்தைப் பற்றி அல்லாஹ் விவரிக்கின்றான். இந்த கதைகள் மனிதக் குலத்திற்கு இறைவனுடைய கட்டளைகளை எதிர்த்து கிளர்ச்சி செய்வதினால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி எச்சரிக்கிறது.

فَلْيَحْذَرِ الَّذِينَ يُخَالِفُونَ عَنْ أَمْرِهِ أَن تُصِيبَهُمْ فِتْنَةٌ أَوْ يُصِيبَهُمْ عَذَابٌ أَلِيمٌ

**"...ஆகவே எவர் அவருடைய கட்டளைக்கு மாறு செய்கிறார்களோ அவர்கள் தங்களை சோதனை பிடித்துக் கொள்வதையோ, அல்லது தங்களை நோவினை தரும் வேதனை பிடித்துக் கொள்வதையோ அஞ்சிக் கொள்ளட்டும் (குர்ஆன், 24: 63).**

இறைவனின் வேதனை பல விதமாக வரக்கூடும். அதில் மிகவும் தெளிவான வேதனையாக எய்ட்ஸ்[66] என்ற நோயைக் குறிப்பிடலாம். இது இன்று எல்லா நாடுகளிலுள்ள மக்களை அச்சுறுத்தும் நோயாக உள்ளது. முதல் முறையாக மருத்துவ வரலாற்றில் 80களின்[67] ஆரம்பகாலங்களில் பதிவுச் செய்யப்பட்டது. ஒழுக்கமற்றவர்கள் தான் இந்த நோயால் அதிக பாதிப்புக்கு ஆளானார்கள். ஆரம்பத்தில் ஓரினச் சேர்க்கையாளர்கள் அதிகமாக பலியானார்கள். பிறகு, இருபாலினசேர்க்கையிலும் ஈடுபட்டவர்கள், அதை தொடர்ந்து எதிர் பாலினர் பலருடன் பாலியல் உறவுக் கொண்டவர்களும் மற்றும் நரம்பில் போதை மருந்து ஏற்றிக் கொண்டவர்களும் இந்த நோய்க்கு பலியானார்கள். இவர்கள் ஆண்டவனின் கட்டளைகளான ஆண் பெண்ணின் உறவு திருமணம் என்ற பந்தத்தின் மூலம் இணைவதையும் மற்றும் போதை பொருள் தடுக்கப்படக் கூடாது என்றும் கிளர்ச்சி செய்தார்கள். சிலர் கூறுகிறார்கள் எய்ட்ஸ், இரத்த பரிமாற்றம் மூலம் ஒழுக்கமானவர்களுக்கும், குழந்தைகளுக்கு அவர்கள் பெற்றோர்கள் மூலம் பரவியிருப்பதைப் பற்றி. இதைப்பற்றி மருத்துவ புள்ளி விவரங்கள் என்ன கூறுகிறது என்றால் இந்த மாதிரியான நிகழ்வுகள் மேலே குறிப்பிட்ட ஒழுக்கமற்றவர்களுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவாகவே

---

[65] இங்கு 'நாம்' என்பது தூய அரபியில் கம்பீரத்திற்குரிய 'நாம்' ஆகும். அது இறைவனை குறிக்கும்.

[66] எய்ட்ஸ் ஓர் உயிர்க்கொல்லி நோய்.

[67] இது முதன்முதலில் 1981 இல் அடையாளம் காணப்பட்டது (தி நியூ என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா தொகுதி.10 பக்கம் 676).

ஏற்படுகிறது. எதுவாயினும், அல்லாஹ் குர்ஆனில் அத்தியாயம் அன்ஃபாலில், அவனுடைய வேதனை வரும்போது அது கெட்டவர்களை மட்டுமல்ல மொத்த சமுதாயத்தை தாக்கும் என்று எச்சரிக்கிறான்.

وَاتَّقُوا فِتْنَةً لَّا تُصِيبَنَّ الَّذِينَ ظَلَمُوا مِنكُمْ خَاصَّةً ۖ وَاعْلَمُوا أَنَّ اللَّهَ شَدِيدُ الْعِقَا

**நீங்கள் வேதனைக்கு பயந்து கொள்ளுங்கள்; அது உங்களில் அநியாயம் செய்தவர்களை மட்டும்தான் குறிப்பாகப் பிடிக்கும் என்பதில்லை - நிச்சயமாக அல்லாஹ் தண்டனை அளிப்பதில் கடுமையானவன் என்பதையும் நன்கு அறிந்து கொள்ளுங்கள் (குர்ஆன், 8: 25).**

1400 ஆண்டுகளுக்கு முன்பே முஹம்மது நபி (ஸல்) அவர்கள் வரப் போகும் சோதனைகளைப் பற்றி அருளினார்கள். இப்னு உமர் (ரழி) ரஸூலுல்லாஹ் (ஸல்) கூறியதாக, *"எப்பொழுதெல்லாம் ஒழுக்கமின்மை மக்களிடையே வெளிப்படையாக நடக்கிறதோ அப்பொழுதெல்லாம் பிளேக் மற்றும் வேதனை பரவும். அது முன் சென்ற சமுதாயத்தினருக்கு தெரியாத ஒன்றாக இருக்கும்."*[68] எய்ட்ஸ், இதுப்போல் பரவும் நோய்களில் ஒன்றாகும். எய்ட்ஸ்க்கு முன், மனிதர்களை எச்சரிக்கும் விதமாக ஹெர்பெஸ் என்னும் பாலியல் நோய் ஒழுக்கமற்றவர்களிடம் 1960 களின் ஆரம்பத்திலும் மேலும் 70 களிலும் பரவியிருந்தது. 70 களின் இடையில், அமெரிக்கா இதை ஒரு தொற்று நோய் என்று அறிவித்தது. இந்த நோய்க்கு இன்று வரை எந்த ஒரு மருந்தும் கண்டுப்பிடிக்கப் படவில்லை. 70 களின் இறுதியில் மக்களின் கவனம் எய்ட்ஸ் பக்கம் திரும்பியது ஏனென்றால் ஹெர்பெஸ் ஒரு உயிர்க்கொல்லி நோய் இல்லை[69] என்பதினால் ஆகும்.

---

[68] இப்னு மாஜாவால் சேகரிக்கப்பட்டு சஹீஹ்சுனன் இப்னு மாஜாவில் அங்கீகரிக்கப்பட்டது, தொகுதி. 2. பக். 370, எண். 3246

[69] அறிகுறிகள் ஏற்படும் போது, காய்ச்சல் மற்றும் உடல்நலக்குறைவைத் தொடர்ந்து பிறப்புறுப்பு பகுதியில் எரிச்சல், வலியுடன் இடுப்பில் உள்ள நிணநீர் கணுக்கள் வீக்கமடையும். கொப்புளங்கள் மற்றும் சிறிய புண்கள் பொதுவாக தொற்று பகுதியில் காணப்படும். சிறுநீர் கழிக்கும் போது கடுமையான வலி மற்றும் எரிச்சல் ஏற்படும்.(தி நியூ என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா, தொகுதி 21. ப. 536)

## ஏன் இறைவன் உலகத்தைப் படைத்தான்?

உலகம் மற்றும் அதிலுள்ள அனைத்தும் படைக்கப்பட்ட நோக்கத்தை மனிதக்குலத்துடன் தொடர்பு படுத்தி பார்க்கும் போது இறுதி வேதத்தில் குறிப்பாக வரையறுக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் அத்தியாயம் இப்ராஹீம் மற்றும் அல் அன்ஆமில் கூறுகிறான்:

**اللَّهُ الَّذِي خَلَقَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ وَأَنزَلَ مِنَ السَّمَاءِ مَاءً فَأَخْرَجَ بِهِ مِنَ الثَّمَرَاتِ رِزْقًا لَّكُمْ ۖ وَسَخَّرَ لَكُمُ الْفُلْكَ لِتَجْرِيَ فِي الْبَحْرِ بِأَمْرِهِ ۖ وَسَخَّرَ لَكُمُ الْأَنْهَارَ**

**وَسَخَّرَ لَكُمُ الشَّمْسَ وَالْقَمَرَ دَائِبَيْنِ ۖ وَسَخَّرَ لَكُمُ اللَّيْلَ وَالنَّهَارَ**

**அல்லாஹ் எத்தகையவன் என்றால் அவன் தான் வானங்களையும், பூமியையும் படைத்து வானத்திலிருந்து மழையையும் பொழியச் செய்து அதைக் கொண்டு கனிவர்க்கங்களையும் உங்களுக்கு - ஆகாரமாக வெளிப்படுத்தித் தன் கட்டளையினால் கடலில் செல்லுமாறு கப்பலை உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்தும், ஆறுகளையும் உங்களுக்கு வசப்படுத்தித்தந்தான்.** (தவறாமல்), தம் வழிகளில் ஒழுங்காகச் செல்லுமாறு சூரியனையும் சந்திரனையும் அவனே உங்களுக்கு வசப்படுத்தித்தந்தான். மேலும், அவனே இரவையும் பகலையும் உங்களுக்கு வசப்படுத்தித் தந்தான் (**குர்ஆன், 14: 32-3).**

**فَالِقُ الْإِصْبَاحِ وَجَعَلَ اللَّيْلَ سَكَنًا وَالشَّمْسَ وَالْقَمَرَ حُسْبَانًا ۚ ذَٰلِكَ تَقْدِيرُ الْعَزِيزِ الْعَلِيمِ**

**وَهُوَ الَّذِي جَعَلَ لَكُمُ النُّجُومَ لِتَهْتَدُوا بِهَا فِي ظُلُمَاتِ الْبَرِّ وَالْبَحْرِ ۗ قَدْ فَصَّلْنَا الْآيَاتِ لِقَوْمٍ يَعْلَمُونَ**

**அவனே பொழுது விடியச் செய்பவன்; (நீங்கள் களைப்பாறி) அமைதிபெற அவனே இரவையும் காலக் கணக்கினை அறிவதற்காகச் சூரியனையும், சந்திரனையும் உண்டாக்கினான் - இவையாவும் வல்லமையில் மிகைத்தோனும், எல்லாம் அறிந்தோனுமாகிய (இறைவனின்) ஏற்பாடாகும். அவனே உங்களுக்காக நட்சத்திரங்களை உண்டாக்கினான்; அவற்றைக் கொண்டு நீங்கள் கரையிலும், கடலிலும் உள்ள இருள்களில் நீங்கள் வழியறிந்து செல்கிறீர்கள் - அறியக்கூடிய மக்களுக்கு நிச்சயமாக (நம்) வசனங்களை இவ்வாறு விவரிக்கிறோம் (குர்ஆன், 6: 96-7)**

இந்த உலகத்தில் உள்ள அனைத்தும், மனிதர்களுக்காகவே படைக்கப்பட்டுள்ளது. அது, மனிதன் தயாரித்த கப்பல் போன்ற பொருட்களோ அல்லது இயற்கையாக வந்ததோ, அனைத்தும் இறைவன் மனிதனின் நன்மைக்காகவே வழங்கியது. இதுப் போன்ற நற்கொடையுடன் மனிதனுக்கு பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அல்லாஹ் மனிதர்களை தன்

அருட்கொடைகளையும் கருணையையும் அறிய வலியுறுத்துகிறான். மேலும், அவர்கள் அவனுக்கு நன்றி செலுத்தி அவனை மகிமைப்படுத்தவும் விரும்புகிறான். எடுத்துக்காட்டாக, அத்தியாயம் அல்-ஜுக்ரு.்.பில், விலங்கின் மீதோ அல்லது வாகனத்திலோ பிரயாணம் செய்யும் போது தன்னை எப்படி பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று கற்றுத் தருகிறான்.

لِتَسْتَوُوا عَلَىٰ ظُهُورِهِ ثُمَّ تَذْكُرُوا نِعْمَةَ رَبِّكُمْ إِذَا اسْتَوَيْتُمْ عَلَيْهِ وَتَقُولُوا سُبْحَانَ الَّذِي سَخَّرَ لَنَا هَٰذَا وَمَا كُنَّا لَهُ مُقْرِنِينَ

وَإِنَّا إِلَىٰ رَبِّنَا لَمُنقَلِبُونَ

**“அவற்றின் முதுகுகளின் மீது நீங்கள் உறுதியாக அமர்ந்து கொள்வதற்காக் அவற்றின் மேல் நீங்கள் உறுதியாக அமர்ந்ததும், உங்கள் இறைவனுடைய அருளை நினைவு கூர்ந்து "இதன் மீது (செல்ல) சக்தியற்றவர்களாக இருந்த எங்களுக்கு, இதனை வசப்படுத்தித்தந்த அ(வ் விறை)வன் மிக்க பரிசுத்தமானவன்" என்று நீங்கள் கூறுவதற்காகவும்.” "மேலும், நிச்சயமாக நாம் எங்கள் இறைவனிடத்தில் திரும்பிச் செல்பவர்கள் (என்று பிரார்த்தித்துக் கூறவும் அவ்வாறு செய்தான்). (குர்ஆன், 43: 13-4).**

இறைவனின் சட்டப் படி மற்ற படைப்புகளை நிர்வகிக்கும் பொறுப்பு மனிதர்களுக்கு உள்ளது. இது தான் மற்ற அனைத்து படைப்புகளுடைய விஷயத்தில் ஒப்பிடும் போது மனிதனுடைய நோக்கமாக இருக்கிறது. இறைவனின் சட்டங்களின் அடிப்படையில் இந்த உலகத்திலுள்ள அனைத்தையும் பயன்படுத்திக் கொள்வதற்கு மனிதர்கள் உத்திரவிடப்பட்டுள்ளார்கள். ரஸூலுல்லாஹ் (ஸல்) கூறியதாக அபு சயீத் அல் குத்ரீ (ரழி) மேற்கோள் காட்டுகிறார்கள், *"உலகம் அழகாகவும் பசுமையாகவும் உள்ளது. மேலும் அல்லாஹ், உங்களை அதன் ஆளுநர்களாக்கி அதனை எவ்வாறு நீங்கள் கவனிக்கின்றீர்கள் என்று பார்க்கின்றான்."*[70] மனிதர்களுக்கு, தங்கள் விருப்பம்போல் உலகத்தை உபயோகிக்கும் உரிமை தரப்படவில்லை. ஆனால், மதச்சார்பற்ற சடவாத சமூகத்தின் அணுகுமுறை புனித குர்ஆனுடைய சட்டங்களுக்கு எதிர்மறையாகவே உள்ளது.

சடவாத சமூகம் இயற்கையை எதிரிப்போல் பாவித்து அதை வெல்ல நினைக்கின்றது. உலகத்தின் மிக உயர்ந்த மலையான இமய மலையின் அழகை ரசித்தால் போதும். ஆனால், அதன் உச்சியை அடைந்து அதனை வெல்ல வேண்டும் என்று ஒவ்வொரு வருடமும் பலர் தங்கள் உயிர்களை இழக்கின்றனர். உலகின் கவர்ச்சிகரமான விலங்குகளை பார்த்து ரசிப்பது போதாது என்று அந்த விலங்குகளை கடந்த நுற்றாண்டுகளில் மேற்கத்திய அறைகளை அலங்கரிப்பதற்காக வேட்டையாடி அழித்தனர். இப்பொழுது விலங்குகளின் வேட்டை இல்லையென்றாலும் காண்டா மிருகம் போன்ற அழிந்து வரும் விலங்குகளின் உயிர்கள் அச்சுறுத்தலில் உள்ளது. இதற்கு காரணம் அதன் கொம்புகளின் உள்ள மருத்துவ குணம். அது தூர கிழக்கு

[70] ஸஹிஹ் முஸ்லீம், தொகுதி. 4. பக். 1432, எண். 6606.

நாடுகளில் அவை பாரம்பரிய மருத்துவத்திற்கு மற்றும் பாலுணர்வு சம்மந்தப்பட்ட மருத்துவத்திற்கு உபயோகிப்படுகின்றன.

## விலங்குகள்

இறுதி புனித வேதத்தின் அடிப்படையில் மிருகங்களை விளையாட்டுக்காக கொல்வது தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் இறைவனின் பார்வையில் அது ஒரு பெரும்பாவமாகும். அல்லாஹ்வின் தூதர் கூறியதாக இப்னு அப்பாஸ் (ரழி) தெரிவித்தார்கள், *"எந்தவொரு உயிரினத்தையும் இலக்காகக் கொள்ள வேண்டாம்."*[71] எந்தவொரு உயிரையும் கொல்வது தடை செய்யப்பட்டுள்ளது, அதை உணவுக்காகவோ, மனித உயிர்களைப் பாதுகாப்பதற்காகவோ அல்லது ஆடைகளுக்காகவோ உபயோகப்படுத்துவதை தவிர. வேடிக்கை மற்றும் பொழுது போக்குக்காக கொல்வது, அடிப்படையில் மிகவும் தீயதாகும். சமூகத்திற்கு எதிரான குற்றங்களுக்காக ஒரு மனிதனின் வாழ்க்கை எடுக்கப்படும் போது அல்லது ஒரு விலங்கின் வாழ்க்கை உணவுக்காக எடுக்கப்படும் போதும், அது முடிந்தவரை வலியின்றி செய்யப்பட வேண்டும். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூறியதாக நினைவு கூர்ந்து இரண்டு விஷயங்களை ஷாதாத் இப்னு அவ்ஸ் (ரழி), விவரித்தார்கள், *"நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றிற்கும் நன்மையை கட்டளையிட்டுள்ளான். எனவே நீங்கள் ஒருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றும் போது அதை அழகான முறையில் நிறைவேற்றுங்கள். நீங்கள் ஒரு மிருகத்தை கொல்வதாக இருந்தாலும், நீங்கள்அழகான முறையில் செய்யுங்கள். நீங்கள் அனைவரும் உங்கள் கத்தியை கூர்மைப்படுத்தி கொல்லப்பட்ட விலங்கை அமைதியான முறையில் இறக்கவிடுவீர்களாக."*[72]
மேற்கத்திய நாடுகளில் உள்ள சில விலங்கு பிரியர்கள் இஸ்லாமிய முறைப்படி அறுப்பதை எதிர்த்து அதற்கு பதிலாக மின்சாரத்தை பாய்ச்சி கொல்வது மற்றும் தலை நொறுங்கும் அளவு அடித்து கொல்கிறார்கள். இஸ்லாமிய முறைப்படி இல்லாமல் மேற்கத்திய முறைப்படி கொல்லும் விலங்குகள் அதிகமான வேதனைக்கு உள்ளாகின்றன. மிகவும் கூர்மையான கத்தியைக் கொண்டு கழுத்தை அறுக்கும் போது, அந்த விலங்கு வலி உணராது மற்றும் இதயம் கரோட்டிட் தமனிகளின் மூலம் இரத்தத்தை வேளியேற்றுவதால் அது விரைவாக அதன் நினைவை இழக்கிறது.
விலங்குகளை பராமரிப்பதின் முக்கியத்துவம் புனித சட்டத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. பொதுவாக முஸ்லீம்களின் வீடுகளில் தடை

---

[71] ஸஹிஹ் முஸ்லீம், தொகுதி. 3. பக். 1079, எண். 4813.
ஹிஷாம் இப்னு சய்த் தெரிவித்தார்கள், அவர்கள் அவர்களுடைய பாட்டனாருடன் இருந்த போது அனஸ் இப்னு மாலிக் (ரழி), ஹக்காம் இப்னு அய்யூப்பின் (ரழி), வீட்டுக்கு சென்றார்கள் [அவர்கள் இருவரும் கண்டார்கள்] சிலர் கோழியை தங்கள் அம்புகளுக்கு இலக்காக பயன்படுத்தினார்கள். அனஸ் கூறினார்கள் அல்லாஹ்வின் தூதர் விலங்குகளை [இலக்குகளாக] கட்டுவதை தடை செய்தார்கள். ஸஹிஹ் முஸ்லீம், தொகுதி. 3. பக். 1078, எண். 4182.

[72] ஸஹிஹ் முஸ்லீம், தொகுதி. 3. பக். 1078, எண். 4810.

செய்யப்பட்ட நாய்களையும் இது உள்ளடக்கும்.[73] அபு ஹுரைரா (ரழி) நபி (ஸல்) கூறியதாக மேற்கோள் காட்டுகிறார்கள், *"ஒரு மனிதனுக்கு, அவன் நடந்து கொண்டிருக்கும் போது மிகுந்த தாகம் ஏற்பட்டது. அதனால் அவன் ஒரு கிணற்றில் இறங்கி தண்ணீர் குடித்தான். வெளியே வரும் போது ஒரு நாய் தாகத்துடன் மண்ணை உண்பதை கண்டான். அவன் (தனக்கு தானே) கூறினான், "இந்த விலங்கு என்னைப் போலவே தாகமாக இருக்கிறது." அதனால் அவன் கிணற்றினுள்ளே இறங்கி, அவன் காலணியை தண்ணீரைக் கொண்டு நிரப்பினான். பிறகு, அவன் தனது காலணியை அவனது பற்களுக்கு நடுவில் பிடித்து, ஏறி வெளியே வந்து நாய்க்கு தண்ணீர் கொடுத்தான். அல்லாஹ் அந்த மனிதனுக்கு நன்றி கூறி அவன் பாவங்களை மன்னித்தான் [மேலும் சொர்க்கத்தில் நுழைவித்தான்]*[74] மக்கள் கேட்டார்கள், *"அல்லாஹ்வின் தூதரே! விலங்குகளை பராமரிப்பதற்கும் நமக்கு கூலி தரப்படுமா?"* அதற்கு அவர்கள் பதிலளித்தார்கள், *"ஒவ்வொரு உயிர் இனத்தின் சேவையிலும் மகத்தான கூலி உள்ளது."*[75] மேலும், அபு ஹுரைரா (ரழி) விவரித்தார்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூறியதாக, *"அல்லாஹ் ஒரு விபச்சாரியை (பனி இஸ்ரேலியர்களை சேர்ந்தவள்)*[76] *மன்னித்தான். அவள் அவளுடைய காலணியை அவளுடைய தாவணியுடன் கட்டி தாகத்தினால் இறக்கும் ஒரு நாய்க்கு (கிணற்றிலிருந்து) சிறிது தண்ணீரை எடுத்து கொடுத்தாள். அதற்காக, அல்லாஹ் அவளை மன்னித்தான்."*[77]

மாறாக, விலங்குகளுக்கு தீங்கு விளைவிப்பது இஸ்லாமிய சட்டப்படி பெரும் பாவமாகும். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூறியதாக அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அறிவிக்கிறார்கள், "ஒரு பெண் தண்டிக்கப்படுகிறாள் மேலும் நரகத்தில் நுழைவிக்கப் படுகிறாள். ஏனென்றால், அவள் ஒரு பூனையை மரணிக்கும் வரை சிறையிட்டாள். அதற்கு அவள் உணவும் தரவில்லை தண்ணீரும் தரவில்லை அதை *சுதந்திரமாகவிட்டு அதை பூமியிலிருக்கும் எலி போன்றவற்றை உண்ணவும் விடவில்லை."*[78]

சில சூழ்நிலைகளில் விலங்குகளுக்கு வலியை கொடுப்பது தேவையாக உள்ளது. விலங்குகளை நகர்த்துவதற்காக அதனை அடிப்பது மற்றும்

---

[73] முஸ்லீம்கள் தங்கள் வீடுகளில் நாய்களை செல்ல பிராணிகளாக வளர்ப்பதை இஸ்லாம் ஆதரிப்பதில்லை. இருப்பினும், காவல் நாய்கள், மந்தைகளை பாதுகாக்கும் நாய்கள் மற்றும் வேட்டை நாய்களை அனுமதிக்கின்றது. அல்லாஹ்வின் தூதரை மேற்கோள் காட்டி இப்னு உமர் கூறுகையில், "நாய்களை, மந்தைகளை பார்ப்பதற்கு அல்லது வேட்டையாடுவதற்குத் தவிர, வைத்து இருந்தால், தினமும் இரு மலைகளின் எடை அளவு (நல்ல அமல்களை) இழப்பார்." ஸஹிஹ் அல் புகாரி, தொகுதி. 3. பக். 826, எண். 3815.

[74] ஸஹிஹ் அல் புகாரி, தொகுதி. 1. பக். 120, எண். 174.

[75] ஸஹிஹ் அல் புகாரி, தொகுதி. 3. பக். 322-3, எண். 551 & ஸஹிஹ் முஸ்லீம், தொகுதி. 4. பக். 1215, எண். 5577.

[76] ஸஹிஹ் அல் புகாரி, தொகுதி. 4. பக். 448-9, எண். 673.

[77] ஸஹிஹ் அல் புகாரி, தொகுதி. 4. பக். 338-9, எண். 538 & ஸஹிஹ் முஸ்லீம், தொகுதி. 4. பக். 1216, எண். 5579.

[78] ஸஹிஹ் அல் புகாரி, தொகுதி. 4. பக். 456, எண். 689 & ஸஹிஹ் முஸ்லீம், தொகுதி. 4. பக். 1215, எண். 5573.

அடையாளம் காண முத்திரை குத்துவது போன்றவை ஆகும். இருப்பினும், இதுப் போன்ற சூழ்நிலைகளிலும், அவற்றை பாதுகாக்க இறைவன் அறிவுறுத்துகிறான். *முகத்தில் அடிப்பதையும், முத்திரையிடுவதையும்*[79] *ரஸூலுல்லாஹ் (ஸல்) தடை செய்தாக ஜாபிர் (ரழி) அறிவித்தார்கள்.*

**தாவரங்கள்**

இந்த உலகத்தை பார்த்துக் கொள்ளும் மனிதனின் பொறுப்பு விலங்குகளை பரமாரிப்பதில் மட்டும் நின்றுவிடாது. தாவரவர்க்கத்தின் பராமரிப்பும் புனித சட்டத்தில் முக்கிய ஒன்றாக கருதப்படுகிறது. எவ்வளவு என்றால், முஸ்லீம்கள் போர்களில் ஈடுப்பட்டு இருக்கும்போது, பழங்களை காய்க்கும் மரங்களை அழிக்க தடை செய்யப்பட்டுள்ளனர்.[80] இன்னும் மரங்களை நடுவது தர்மமாக பார்க்கப்படுகிறது. ரஸூலுல்லாஹ் (ஸல்) கூறியதாக ஜாபீர் (ரலி) மேற்கோள் காட்டுகிறார்கள், *"ஒரு முஸ்லீம் ஒரு மரத்தை நடுவதால் தர்மம் செய்த நன்மையை பெறுகிறான். அதிலிருந்து சாப்பிடப்படுவது, திருடப்படுவது, விலங்குகள் மற்றும் பறவைகள் உண்பது அனைத்தும் தர்மமே. எவரேனும் அல்லது எதுவேனும் அதை உண்பது மரம் நட்டவனுக்கு தர்மம் செய்த நன்மையை தருகிறது.*[81]
ஒரு விசுவாசிக்கு இந்த வாழ்க்கையில் நடுவது தான் கடைசி செயலாக இருக்கும் என்றாலும் அதை செய்யவே இஸ்லாம் ஊக்குவிக்கிறது. *"கியாமத் நாளின் ஆரம்பம் (அறிகுறிகள்) தெரிந்தால், உங்களில் எவரேனும் கையில் நாத்து வைத்து இருந்தால் அதை அவர் கியாமத் நாள் ஆரம்பிக்கும் முன் நட்டட்டும்*[82] என்று ஸல் சொன்னதாக அனஸ் (ரழி) கூறினார்கள். மனிதர்களுக்கு என உருவாக்கப்பட்ட சுற்றுச் சூழலின் அனைத்து அம்சங்களை பார்த்து கொள்வது இறைவனுக்கு செய்யும் புனித சேவையாகும். இதற்கு உலகெங்கிலும் உள்ள இன்றைய சடவாத நுகர்வு கலாச்சாரம் மிகுந்த சமூகங்களால் ஏற்படும் பெருமளவு மாசு மற்றும் இயற்கை வாழ்விடங்களின் அழிவுகளை கட்டுப்படுத்த தீவிரமான எதிர்வினை தேவைப் படுகிறது. புனித குர்ஆனுடைய ஆணைப் படி, இந்த கடமையை அலட்சியம் செய்வது பாவமாகும். அதே நேரத்தில் அதை நிறைவேற்றுவது வணக்கச் செயலாகும்.

---

[79] ஸஹிஹ் முஸ்லீம், தொகுதி. 3. பக். 1163, எண். 5281.

[80] முவத்தா இமாம் மாலிக் ப. 200, எண். 958. மற்றும் அல்-அல்பானியால் அங்கீகரிக்கப்பட்டது இர்வா' அல்-கலீலில், தொகுதி. 5. பக். l3-4. எண். 1190.

[81] ஸஹிஹ் முஸ்லீம், தொகுதி. 3. பக். 818, எண். 3764.

[82] அல்-முஸ்னத்தில் அஹ்மத் . தொகுதி .3. ப. 183, 184, மற்றும் 191, மற்றும் அல்-அதபல்-மு.ஃப்ரதில் அல்-புகாரி. எண். 479 சேகரித்தனர். மற்றும் அல்-அல்பானியால் அல்சில்சிலா அல் ஹதீத்-சஹீஹா வில் அங்கீகரிக்கப்பட்டது தொகுதி. 1 ப. 11, எண் 9.

# முடிவுரை

படைக்கப்பட்டதன் நோக்கம் பற்றிய அறிவு இல்லை என்றால் கடலில் கப்பல்கள் சுக்கான் (கப்பலின் திசை திருப்புக்கட்டை) இல்லாமல் திரிந்தால் எப்படி இருக்குமோ அதுப் போல் மனிதர்கள் வாழ்க்கையில் இலட்சியமில்லாமல் ஆகிவிடும். அவர்களுடைய இலக்கு தவறான மத போதனை அல்லது சடவாதப்போக்கின் காரணமாக தவறாகி விடுகிறது. அதனால், மனிதர்களின் இலட்சியம், இந்த உலகத்துடன் கட்டுப்படுத்தப்படுகிறது. ஆகவே, அவர்களுடைய சுய நன்மைக்காக, ஏன் இறைவன் அவர்களைப் படைத்தான் என்று அறிவது மிக அவசியமாகும்.

அல்லாஹ் படைத்தது, அவன் பண்புகளை வெளிப்படுத்துவதற்காகவே. படைப்புகள், அவன் படைப்பாளன் என்பதின் வெளிப்பாடு. சொர்க்கம், அவன் கருணை மற்றும் அருளின் வெளிப்பாடு. நரகம், அவனுடைய நீதியின் வெளிப்பாடு. மனிதக்குலத்தின் தவறுகள், அவனது மன்னிப்பின் வெளிப்பாடு. உயிருள்ள மற்றும் உயிரில்லாதவை, அவனுடைய தாராளத் தன்மையின் வெளிப்பாடு, ... படைப்புகளின் மூலம் அல்லாஹ் தன் பண்புகளை வெளிப்படுத்துவதின் முக்கியத்துவத்தை தெரிந்துக் கொள்வதால் மனிதர்கள் தன் இறைவனை சரியான முறையில் அடையாளம் கண்டுக் கொள்ளவும், அவனது ஆணை மற்றும் விதியை ஏற்றுக் கொள்ளவும் முடியும். மனிதர்கள், அவர்களுடைய படைப்பின் நோக்கத்தை அறிந்துக் கொள்வது அதிக முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். இறுதி வேதமான குர்ஆன் இறைவனை வணங்கவே கற்பிக்கிறது. ஏனென்றால் அவனை வணங்குவதன் மூலம் மனிதக்குலம் சுவர்க்கம் நுழைய தேவையான நல்ல குணங்களையும், மார்க்க அந்தஸ்துகளையும் பெற்றிடும். படைப்பின் நோக்கத்தை அறிவதன் முக்கியத்துவம் என்ன என்றால் எப்படி உண்பதும், மூச்சுவிடுவதும் இன்றியமையாததோ அதுப்போல் அவனை வணங்குவதும் இன்றியமையாதது என்று மனிதன் இந்த அறிவினால் உணர்ந்து கொள்வான். மேலும், இறைவனை வணங்குவதினால் மனிதன் தனக்கே தவிர இறைவனுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை.

இந்த உலகின் அருள் மற்றும் சோதனைகளின் முக்கியத்துவத்தை மனிதர்கள் உணர்ந்துக் கொள்வது மிகவும் அவசியமாகும். படைப்பின் பின்னணியில் உள்ள நோக்கத்தைப் பற்றிய அறிவு இல்லை என்றால் மனிதர்கள் இந்த உலகத்தை அவர்களுக்கு விரோதமாக பார்க்க முனைவார்கள். ஆனால், இறைவன் அதை முதன்மையாக அவர்களின் நன்மைக்காகவே படைத்தான். நன்மை மற்றும் தீமையின் சோதனைகள், மனிதர்களுக்குள் உள்ள உயர்ந்த நற்குணங்களை வெளிக் கொண்டு வருவதற்காகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. மனிதர்கள் இறைவனின் மீது முழுமையான நம்பிக்கை வைத்து அவன் விதியாக்கியதன் மீது பொறுமையுடன் இருந்தால் மட்டுமே, மனிதர்களால் சோதனையின் பலனை அடைய முடியும். இறை நிராகரிப்பாளர்களுக்கு, இந்த உலகத்தின் சோதனைகள் மறுமை வாழ்க்கையில் அவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனைக்கு முன்னால் இந்த உலகிலும் ஒரு தண்டனையாகவே அமைகிறது.

உலகிற்கு வந்த நோக்கத்தினுடைய அறிவு, சுற்றுச் சூழலை பாதுகாக்கும் உணர்வுடன் இருக்க உதவுகிறது. இந்த வாழ்க்கையின் அருள்களை நியாயமாக பயன்படுத்துவது மனித குலத்தின் மீது உள்ள பொறுப்பாகும். பூமி மற்றும் கடலிலுள்ள ஜீவராசிகள், தாவரங்கள் மற்றும் வெளி மண்டலமும் அவனது பராமரிப்பில் உள்ளது. இதன் விளைவாக, மனிதர்கள் சுற்று சூழல் மற்றும் உயிரினங்களை பாதுகாப்பதை இறைவனுக்கு செலுத்தும் நன்றியாக நினைத்து அதன் மீது மிகுந்த அக்கறை செலுத்த வேண்டும்.

இதுப் போன்ற பரந்த உணர்வுடனான நோக்கத்தின் மூலம் மனிதர்கள் முழுமை அடைகிறார்கள். அவர்கள் மனிதக் குலத்தின் வழிக்காட்டியாக மாறி நீதியின் வழியைக் காட்டுகின்றனர். அல்லாஹ் இப்படிப்பட்ட சமூகத்தை மனிதக்குலத்தில் மிக சிறந்தது என்று இறுதி வேதமான குர்ஆனில் விவரிக்கின்றான்.

كُنتُمْ خَيْرَ أُمَّةٍ أُخْرِجَتْ لِلنَّاسِ تَأْمُرُونَ بِالْمَعْرُوفِ وَتَنْهَوْنَ عَنِ الْمُنكَرِ وَتُؤْمِنُونَ بِاللَّهِ

**மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள்; (ஏனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள்; தீயதை விட்டும் விலக்குகிறீர்கள்;. இன்னும் அல்லாஹ்வின்மேல் (திடமாக) நம்பிக்கை கொள்கிறீர்கள்.(குர்ஆன், 3: 110)**

# ஹதீஸ்களின் குறியீடு

*“உங்களுக்கு உதவ மனிதகுலம் முழுவதும் ஒன்று கூடினாலும்...” பக்கம் 14*

*"நீங்கள் பாவங்களைச் செய்யாமல், அல்லாஹ்விடம் மன்னிப்பு கோரினால் ..." பக்கம் 14*

*அல்லாஹ் பிரபஞ்சத்தை படைத்த பின்னர், தனக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள தனது பதிவேட்டில்... பக்கம் 15*

*"[அல்லாஹ் படைத்தான்] நூறு பாகங்களுடன் கருணையை ...." பக்கம் 15*

*" அல்லாஹ் சொர்க்கத்தையும் நரகத்தையும் படைத்தான் என்று உனக்குத் தெரியாதா ..." பக்கம் 16*

*"சர்வவல்லமையுள்ள அல்லாஹ் கூறினான்: ஆதாமின் மகனே, நீ என்னை அழைக்கும் வரை ..." பக்கம் 18*

*"சரியானதைச் செய்ய உங்களால் முடிந்தவரை முயற்சி செய்யுங்கள் ..." பக்கம் 18*

*"அல்லாஹ்வின் படைப்பைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள், ஆனால் அல்லாஹ்வைப் பற்றி சிந்திக்க வேண்டாம்." பக்கம் 20*

*"சாத்தான் உங்கள் அனைவரிடமும் வந்து கேட்பான்: இதை யார் படைத்தார்கள்?" பக்கம் 20*

*”அல்லாஹ் ஆதாமை படைத்தபோது, 12 ஆம் மாதத்தின் 9 வது நாளில் ந’மான் என்ற இடத்தில் ஒரு உடன்படிக்கை செய்தான்” பக்கம் 22*

*“அல்லாஹ்வே, எல்லா புகழும் உனக்கு உரியது, நீ என்னை அலங்கரித்ததைப் போலவே,” பக்கம் 30*

*“இந்த [மார்க்க ] விஷயத்தில் எதையாவது புதுமைப்படுத்துபவர் நம்முடையது இல்லை என்று நிராகரிக்கப்படும்.. " பக்கம் 31*

*"உன்னைப் படைத்திருந்தும் கூட அல்லாஹ்வுக்கு இணையை..." பக்கம் 32*

*"[பின்வரும்] மூன்று குணாதிசயங்கள் யாரிடம் உள்ளதோ அவர்கள் விசுவாசத்தின் இனிமையை ருசித்திருக்கிறார்கள் ..." பக்கம் 34*

*"அல்லாஹ்வுக்காக நேசிப்பவரும் அல்லாஹ்வுக்காக வெறுப்பவரும்..." பக்கம் 36*

*“அல்லாஹ் ஒரு அடியானை நேசிக்கிறான் என்றால், ஜிப்ரீல் என்னும் தேவதூதரிடம் தான் இன் இன்னாரை தான் நேசிப்பதாக அறிவிக்கிறான்..." பக்கம் 36*

*"நீங்கள் கேட்டால், அல்லாஹ்விடம் மட்டுமே கேளுங்கள்..." பக்கம் 37*

*“(துஆ) கேட்பது ஒரு வணக்கமாகும்” பக்கம் 37*

*“விடுதலைப் பெற்றுக் கொள்ளுங்கள் [நல்ல அமல்களை செய்து] ...” பக்கம் 38*

*"ஒரு மனிதனுக்கு ஒரு பள்ளத்தாக்கு நிறைய தங்கம் இருந்தாலும், அவன் இன்னொன்று வேண்டும் என்று விரும்புவான் ...." பக்கம் 41*

*"உங்களை விட கீழே இருப்பவர்களைப் பாருங்கள், உங்களுக்கு மேலே இருப்பவர்களைப் பார்க்க வேண்டாம் ..." பக்கம் 43*

*“செல்வம் சொத்தில் அளவிடப்படுவதில்லை, மனநிறைவில். " பக்கம் 43*

*"நபிமார்கள், பின்னர் அவர்களை போன்றவர்கள் இனனும் அவர்களை போன்றவர்கள்..." பக்கம் 44*

*"ஒரு விசுவாசியின் விவகாரம் ஆச்சரியம் அளிக்கின்றது ..." பக்கம் 49*

*"எப்பொழுதெல்லாம் ஒழுக்கமின்மை மக்களிடையே வெளிப்படையாக நடக்கிறதோ அப்பொழுதெல்லாம் பிளேக் மற்றும்..." பக்கம் 53*

*"உலகம் அழகாகவும் பசுமையாகவும் உள்ளது. மேலும் அல்லாஹ், உங்களை அதன் ஆளுநர்களாக்கி..." பக்கம் 55*

*"எந்தவொரு உயிரினத்தையும் இலக்காகக் கொள்ள வேண்டாம்" பக்கம் 56*

*"நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றிற்கும் நன்மையை கட்டளையிட்டுள்ளான்..." பக்கம் 56*

*"ஒரு மனிதனுக்கு, அவன் நடந்து கொண்டிருக்கும் போது மிகுந்த தாகம் ஏற்பட்டது. அதனால் அவன் ஒரு கிணற்றில் இறங்கி தண்ணீர் குடித்தான்..." பக்கம் 57*

*"அல்லாஹ் ஒரு விபச்சாரியை (பனி இஸ்ரேலியர்களை சேர்ந்தவள்) மன்னித்தான்..." பக்கம் 57*

*"முகத்தில் அடிப்பதையும், முத்திரையிடுவதையும்..." பக்கம் 58*

*"ஒரு முஸ்லீம் ஒரு மரத்தை நடுவதால் தர்மம் செய்த நன்மையை பெறுகிறான்..." பக்கம் 58*

*"கியாமத் நாளின் ஆரம்பம் (அறிகுறிகள்) தெரிந்தால்..." பக்கம் 58*

# குர்ஆன் வசனங்களின் குறியீடு

**“இப்றாஹீம் யூதராகவும் இருக்கவில்லை, கிறிஸ்தவராகவும் இருக்கவில்லை...” 3:67 பக்கம் 28**

**“அல்லாஹ்வே எல்லா பொருள்களையும் படைத்தவன்; அவனே எல்லா...” 39:62 பக்கம் 13**

**“அல்லாஹ் ஓர் ஆத்மாவை அதன் சக்திக்கு மேல் நிர்ப்பந்திப்பதில்லை...” 2:286 பக்கம் 46**

**“உங்களில் சிலரைவிட சிலரை செல்வத்தில் அல்லாஹ் மேன்மையாக்கி வைத்திருக்கிறான்...” 16:71 பக்கம் 40**

**“அல்லாஹ்தான் வானங்களையும் பூமியையும் படைத்தவன். அவனே வானத்திலிருந்து மழை பொழியச் செய்து......” 14:32-33 பக்கம் 54**

**“உங்களையும், நீங்கள் சித்தரித்த அவற்றையும் அல்லாஹ்வே படைத்தான்...” 37:96 பக்கம் 13**

**“மனிதர்கள் செய்யும் பாவத்திற்காக அவர்களை (உடனுக்குடன்) அல்லாஹ் தண்டிப்பதாக இருந்தால்...” 35:45 பக்கம் 49**

**“அவர்களுடைய பொருள்களில், (வாய் திறந்து) யாசகம் கேட்பவர்களுக்கும்...” 51:19 பக்கம் 42**

**“(அத்தாட்சிகளைக் கண்ட) அவர்களுடைய உள்ளங்கள் அவற்றை (உண்மையென) உறுதிகொண்ட போதிலும், கர்வம் கொண்டு...” 27:14 பக்கம் 33**

**“இஸ்லாமையன்றி (வேறொரு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் நிச்சயமாக...” 3:85 பக்கம்** 29

**“உமது இறைவன் எவனுக்கும் அநியாயம் செய்யமாட்டான்...” 18:49 பக்கம் 46**

**“நீங்கள் ஒரு வேதனையை பயந்துகொள்ளுங்கள்...” 8:25 பக்கம் 53**

**“(ஏனென்றால்,) அவர்கள் (இவ்வுலகத்திற்குத்) திரும்ப அனுப்பப்பட்டால்...” 6:28 பக்கம் 17**

**“தரையிலும் அழிவு வேலைகள் (அதிகமாகப்) பரவிவிட்டன...” 30:41 பக்கம் 51**

**“அவர்களுடைய செல்வங்களும் அவர்களுடைய சந்ததிகளும் (அதிகரித்திருப்பது) உம்மை ஆச்சரியப்படுத்த...” 9:85 பக்கம்** 50

**“உங்களில் ஒருவருக்கொருவர் (சச்சரவிட்டு) வெட்டிக்கொள்ள வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் கருணையாளன்...” 4:29 பக்கம்** 46

**“உங்களில் சிலரை சிலர் மீது அல்லாஹ் மேன்மையாக்கி (அருள்புரிந்து) இருப்பதைப் பற்றி பேராசை...” 4:32 பக்கம் 43**

**“மனிதர்கள் “நாங்கள் நம்பிக்கை கொண்டோம்” என்று கூறினால் (மட்டும் போதுமானது...” 29:2 பக்கம் 51**

**“நிச்சயமாக சிரமத்துடன் சௌகரியம் இருக்கிறது...” 94:5-6 பக்கம் 46**

**“ஆகவே, அவற்றின் முதுகுகள் மீது நீங்கள் (ஏறி அமர்ந்து கொள்ளுங்கள்...” 43:13 பக்கம் 55**

**“அதற்கு நன்றி செலுத்துவதற்காக) உமது இறைவனைப் புகழ்ந்து துதி செய்து...” 110:3 பக்கம் 24**

**“(நபியே!) எவன் தன் சரீர இச்சையை(த் தான் பின்பற்றும்) தன் தெய்வமாக எடுத்து...” 25:43 பக்கம் 34**

**“அவன் செய்பவற்றைப் பற்றி (ஏன் செய்தாய், எதற்காகச் செய்தாய் என்று) எவருமே அவனைக் கேட்க முடியாது...” 21:23 பக்கம் 20**

**“உங்களில் சிலரை மற்றவர்களைவிட அந்தஸ்தில் உயர்த்தியும் இருக்கிறான்...” 6:165 பக்கம் 41**

**“(நபியே! விசாரணைக்காக) இக்குற்றவாளிகள் தங்கள் இறைவன் முன் (நிறுத்தப்படும் சமயத்தில்) தலை குனிந்தவர்களாக...” 32:12 பக்கம் 16**

**“நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள்...” 3:31 பக்கம் 18**

**“அல்லாஹ்வுடைய அருட் கொடைகளை நீங்கள் கணக்கிடும் சமயத்தில்...” 14:34 பக்கம்** 35

**“ஜின்களையும், மனிதர்களையும் (அவர்கள் என்னை அறிந்து) என்னை வணங்குவதற்கே தவிர...” 51:56 பக்கம் 23**

**“அல்லாஹ்வின் திருப்பெயர் துதி செய்யப்பட்டால், அவர்களுடைய உள்ளங்கள் நிம்மதியடைந்து விடுகின்றன...” 13:28 பக்கம் 44**

**“வானங்களையும் பூமியையும் படைத்திருப்பது, (இறந்த) மனிதர்களை (மறு முறை) படைப்பதைவிட நிச்சயமாக மிகப் பெரிய காரியமாகும்...” 40:57 பக்கம் 11**

**“அவனே (பொழுதை) விடியச் செய்பவன். அவனே (நித்திரை செய்து நீங்கள்) சுகமடைவதற்காக இரவை ஆக்கினான்...” 6:96-7 பக்கம் 54**

**“மிகத்தூய்மையான அமல் செய்பவர்கள் யார் என்று சோதிப்பதற்காகவே, அவன் மரணத்தையும், வாழ்க்கையையும் படைத்திருக்கிறான்...” 67:2 பக்கம்** 39

**“(இம்மையில்) சிறியதொரு வேதனையை அவர்கள் சுவைக்கும்படிச் செய்வோம்...” 32:21 பக்கம் 50**

**“உங்கள் பொருள்களும், உங்கள் சந்ததிகளும் (உங்களுக்குப்) பெரும் சோதனையாக இருக்கின்றன...” 8:28 பக்கம் 41**

**“எவர்கள் (தூதராகிய) அவருடைய கட்டளைக்கு மாறுசெய்கிறார்களோ...” 24:63 பக்கம் 52**

**“அல்லாஹ்வுடைய அனுமதியின்றி ஒரு தீங்கும் (எவரையும்) வந்தடையாது...” 64:11 பக்கம் 13**

**“நம்பிக்கையாளர்களே! உங்கள் பொருள்களும், உங்கள் சந்ததிகளும் அல்லாஹ்வுடைய ஞாபகத்தை உங்களுக்கு மறக்கடித்துவிட வேண்டாம்...” 63:9 பக்கம் 41**

**“நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பாமல் மக்கள் காண்பதற்காக தன் பொருளை செலவு செய்(து வீணாக்கு)பவனைப் போல...” 2:264 பக்கம்** 42

**“நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வை அதிகமதிகமாக நினைவு கூருங்கள்...” 33:41 பக்கம் 27**

**“நம்பிக்கையாளர்களே! பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள்...” 2:153 பக்கம் 47**

**“நம்பிக்கையாளர்களே! உங்களுக்கு முன்னுள்ளவர்கள் மீது கடமையாக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும் நோன்பு நோற்பது கடமையாக்கப்பட்டுள்ளது...” 2:183 பக்கம் 26**

**“ஒன்று உங்களுக்கு மிக நன்மையாக இருந்தும் அதை நீங்கள் வெறுக்கக்கூடும்...” 2:216 பக்கம் 45**

**“ஷைத்தான் இவர்களை ஜெயித்து, அல்லாஹ்வைப் பற்றிய எண்ணத்தையே இவர்களுக்கு மறக்கடித்து விட்டான்...” 58:19 பக்கம் 27**

**“மதுவாலும் சூதாட்டத்தாலும் உங்களுக்கிடையில் பகைமையையும் பொறாமையையும் உண்டுபண்ணி அல்லாஹ்வின்...” 5:91 பக்கம் 27**

**“(நபியே! கூறுவீராக அதிகாலையின் இறைவனிடம், நான் பாதுகாப்பைக் கோருகிறேன்...” 113:1-2 பக்கம் 13**

**“நீர் கூறுவீராக: அல்லாஹ் நாடினாலே தவிர நான் எனக்கு ஒரு நன்மையையோ தீமையையோ செய்து கொள்ள சக்தி பெற மாட்டேன்...” 7:188 பக்கம் 38**

**நீங்கள் கூறுங்கள்: “நிச்சயமாக என் தொழுகையும், என் (மற்ற) வணக்கங்களும்...” 6:162 பக்கம் 29**

**“(நபியே! இச்சோதனைகளால் ஏற்படும் கஷ்டங்களைச்) சகித்துக் கொண்டிருப்பவர்களுக்கு நற்செய்தி கூறுவீராக...” 2:155-6 பக்கம் 48**

**“நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் (அங்கீகரிக்கப்பட்ட) மார்க்கம் இஸ்லாம்தான்...” 3:19 பக்கம் 29**

**“நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைக்கப்படுவதை மன்னிக்கவே மாட்டான்...4:48 பக்கம் 32**

**“பூமியிலுள்ளவற்றை நாம் அதற்கு அலங்காரமாக்கி வைத்தது...” 18:7 பக்கம் 39**

**“நிச்சயமாக (நன்றிகெட்ட) நம்பிக்கையற்றவர்களைத் தவிர (மற்றெவரும்) அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழந்துவிட மாட்டார்கள்...” 12:87 பக்கம் 47**

**“எவர்கள்(அவரை) நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்கிறார்களோ...” 98:6 பக்கம் 32**

**“எவர்கள் மெய்யாகவே நம்பிக்கை கொண்டிருக்கிறார்களோ அவர்களும்; எவர்கள் தம் ஊரைவிட்டும் வெளியேறினார்களோ...” 2:218 பக்கம் 48**

**“நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர எவர்களை நீங்கள் (இறைவனென) அழைக்கிறீர்களோ அவர்கள் உங்களைப் போன்ற...” 7:194 பக்கம் 37**

**“நபியே! அவர்கள் தங்கள் குற்றத்திற்குப் பரிகாரமாகக் கொண்டு வந்திருக்கும்) அவர்களுடைய பொருள்களிலிருந்து தர்மத்தை நீர் எடுத்துக் கொண்டு...” 9:103 பக்கம் 42**

**“நயவஞ்சகமுள்ள ஆண்களையும் பெண்களையும், இணைவைத்து வணங்குகின்ற ஆண்களையும் பெண்களையும் (அல்லாஹ்) வேதனை செய்தே தீருவான்...” 48:6 பக்கம் 47**

**“எல்லா அதிகாரங்களும் அல்லாஹ்வுக்கே தவிர (வேறெவருக்கும்) இல்லை. நான் அவனிடமே பொறுப்பை ஒப்படைத்தேன்...” 12:67 பக்கம் 45**

**“அல்லாஹ் அல்லாதவற்றை அவனுக்கு இணைகளாக எடுத்துக் கொண்டு, அல்லாஹ்வை நேசிப்பது போல அவற்றை நேசிப்பவர்களும் மனிதர்களில் பலர் இருக்கின்றனர்...” 2:165 பக்கம் 34**

**“அவனுக்கு ஒப்பானது ஒன்றுமில்லை. அவன் (அனைத்தையும்) செவியுறுபவன், உற்று நோக்குபவன்...” 42:11 பக்கம் 12**

**“ஏழு வானங்களும் பூமியும் இவற்றிலுள்ள அனைத்தும் அவனைப் புகழ்ந்து கொண்டே இருக்கின்றன...” 17:44 பக்கம் 24**

**“அவனுடைய விருப்பமின்றி அவனுக்குத் தெரிந்தவற்றிலிருந்து எதையும் (மற்றெவரும் தங்கள் அறிவால்) அறிந்துகொள்ள முடியாது...” 2:255 பக்கம் 19**

**“இன்னும், அவர்கள் ஒரு மானக்கேடான காரியத்தைச் செய்து விட்டாலும்...” 3:135 பக்கம் 28**

**“நிச்சயமாக நான்தான் அல்லாஹ். என்னைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் அறவே இல்லை...” 20:14 பக்கம் 26**

**“நீர் உமது நெருங்கிய உறவினர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை...” 26:214 பக்கம் 38**

**“ஒரு தீங்கு உங்களை வந்தடைவதெல்லாம், உங்கள் கரங்கள் தேடிக் கொண்ட (தீய) செயலின்...” 42:30 பக்கம் 48**

**“(நபியே!) உம்மிடம் என் அடியார்கள் என்னைப் பற்றிக் கேட்டால்...” 2:186 பக்கம் 36**

**“(நபியே!) உமது இறைவன் ஆதமுடைய மக்களை அவர்களுடைய (தந்தைகளின்) முதுகுகளிலிருந்து...” 7:172-3 பக்கம் 22**

**“எவரேனும் ஒரு நன்மையைச் செய்தால் அவருக்கு அதைப்போல் பத்து பங்கு (நன்மை) உண்டு...” 6:160 பக்கம் 19**

**“எவர்கள் அல்லாஹ்வை முற்றிலும் நம்புகிறார்களோ, அவர்களுக்கு அவனே (முற்றிலும்) போதுமானவன்...” 65:3 பக்கம் 45**

**“(நம்பிக்கையாளர்களே!) நீங்கள்தான், மனிதர்களில் தோன்றிய வகுப்பார்களிலெல்லாம் மிக்க மேன்மையானவர்கள்...” 3:110 பக்கம் 60**

## மொழிபெயர்ப்பாளர்கள்

நாஜியா பர்வீன்

ஸித்தி கதீஜா

உம்மு அப்துல்லாஹ் அப்துல் காதர்

பாத்திமா நூர் அக்மல் பாட்சா

உம்மு ஸஃபிய்யா

## சரிபார்ப்பு

பாத்திமா நூர் அக்மல் பாட்சா